

# வெள்ளியங்காட்டான் கவிதைகள்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode


**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.




கவிஞர்

# வெள்ளியங்காட்டான்

## கவிதைகள்

| | | |
|---|---|---|
| நூல் | : | வெள்ளியங்காட்டான் கவிதைகள் |
| முதற்பதிப்பு | : | ஜூலை 2005 |
| ஆசிரியர் | : | கவிஞர் வெள்ளியங்காட்டான் |
| உரிமை | : | வெ.இரா. நளினி<br>அரசமரவீதி, ஆவராம்பாளையம், கோவை-6. |
| அட்டைபட வடிவமைப்பு | : | அரவிந்த் கே சாமி<br>ஸ்டுடியோ எப் எக்ஸ் அலைபேசி : 98430-98340 |
| அட்டைபட அச்சாக்கம் | : | ஹோரப் பிரிண்ட் ஹவுஸ்<br>சிவகாசி, பேச: 95-4562-220867<br>அலைபேசி : 98430-88840 |
| அச்சாக்கம் | : | கி. சீதரன்<br>எல்.கே. பிரிண்டர்ஸ்<br>24, இந்திரா நகர், நல்லாம்பாளையம் ரோடு,<br>கவுண்டம்பாளையம், கோவை-30. பேச: 2440791 |
| வடிவமைப்பு | : | கவிஞர் புவியரசு |
| வெளியீடு | : | என். மகேந்திரன், யதி வெளியீடு<br>அரசமரவீதி, ஆவராம்பாளையம், கோவை-6. பேச: 2561015 |
| விலை | : | ரூ. 70 |

| | | |
|---|---|---|
| *Book* | : | *Velliankattan Kavithaikal* |
| *First Edition* | : | *July 2005* |
| *Author* | : | *Velliankattan* |
| *@Rights* | : | *R.V. Nalini*<br>*Arasamara Street, Avarampalayam,*<br>*Ganapathy Post, Coimbatore-641 006.* |
| *Wrapper Designed by* | : | *Aravindh K Swamy - Studio FX Cell:98430-98340* |
| *Wrapper Printed at* | : | *Horeb Print House, Sivakasi. Ph. :95-4562-220867*<br>*Cell : 98430-88840* |
| *Printed by* | : | *K. Sreedharan, ELKAY Printers*<br>*24, Indra Nagar, Nallampalayam Road,*<br>*Kavundampalayam, Coimbatore-641 030.Ph.: 2440791* |
| *Designed by* | : | *Kavizner PUVIYARASU* |
| *Published by* | : | *N. Mahendran - Yathi Pumps*<br>*Arasamara Street, Avarampalayam,*<br>*Ganapathy Post, Coimbatore-641 006. Ph.: 2561015* |
| *Price* | : | ***Rs. 70*** |



## ஒரு கவிஞனின்
## காலடிச் சுவடுகள்

காலம் விசித்திரமானது, கனவுகளையும் மென்று விழுங்கி மௌனித்திருக்கும். கால வெள்ளத்தில் கரைந்து போகவே எஞ்சியிருக்கும் அரிய மரபு இலக்கியங்கள். பல படைப்புகள் சமூகக் கவனிப்பின்றியும் அழிவின் விளிம்பில் நிற்கின்றன. அப்படியான மௌனங்களின் உடைதலிருந்து எனது தாத்தா கவிஞர் வெள்ளியங்காட்டான் அவர்களின் கவிதைகளைத் தமிழ் வாசகர்களுக்கு மீண்டும் அடையாளம் காட்டும் முயற்சியின் வெளிப்பாடே இந்நூல்.

தமிழ் இலக்கியத் தடங்களில் பல்வேறு பரிசோதனை முயற்சிகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. நவீனக் கோட்பாட்டுத் தளங்களில்


ஆழ்மன வெளிப்பாடுகள் தீவிரத் தன்மையுடன் இயங்குகின்றன. இப்படியான சூழலில் மரபுக் கவிதைகளின் தொகுப்பாக வெள்ளியங்காட்டான் கவிதைகள் என்ற நூலை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். எனது தாத்தாவுடன் நான் இருந்த நாட்களின் இலக்கியப் பகிர்வுகள் இன்னும் என்னுள் அலை எழுப்பிக் கொண்டே இருக்கின்றன. அவரது கவிதைகள் மனதை விசாலப்படுத்தும் நெறி சார்ந்த விழுதுகளின் தொடர்ச்சியாகும். அவரது வாழ்க்கையும் இலக்கியமும் இரண்டறக் கலந்தவை. கவிஞரின் எல்லாப் படைப்புகளையும் தமிழ் மக்களுக்குத் தொடர்ச்சியாக வழங்க இருக்கிறேன். அதன் முன்னோட்டமே வெள்ளியங்காட்டான் கவிதைகள்.

இந்நூல் ஒரு காலக் கவிஞனின் ஐம்பது ஆண்டுக் கால சூரிய யாத்திரையின் - இலக்கியப் பகிர்வின் சில பக்கங்களே. இதனுள் பயணிக்கிற போது அதன் அனுபவத்தை நீங்களும் உணர்ந்து மகிழ விழைகிறேன்.

அன்புடன்

**மகேந்திரன்**

# வேரும் விழுதுகளும்




கவிஞர் வெள்ளியங்காட்டான்



துணைவியார் குட்டியம்மாள்
...இளம் வயதில்



வசந்தாமணி
திருவுறைவோன்



அமரர் மனோகரன்



நளினி நாராயணசாமி



கவிஞரின் புதல்வி திருமதி நளினி

தம் கணவர் அமரர் நாராயணசாமி நாயுடு அவர்களுடன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| மகேந்திரன் | – | 2 |
| சமர்ப்பணம் | – | 8 |
| திரிலோக சீதாராம் | – | 15 |
| பேரா அ. சீநிவாசராகவன் | – | 17 |
| கொத்தமங்கலம் சுப்பு | – | 21 |
| கவிஞர் எழில் முதல்வன் | – | 24 |
| கவிஞர் சக்திக்கனல் | – | 30 |
| வெ. இரா. நளினி | – | 33 |
| கவிஞர் வெள்ளியங்காட்டான் | – | 66 |
| சமுதாயம் | – | 69 |
| இயற்கை | – | 119 |
| மழலை | – | 145 |
| உணர்வுகள் | – | 159 |
| விழாக்கள் | – | 175 |
| கவிஞர் தங்க முருகேசன் | – | 192 |
| புலவர் ம. இளங்கீரன் / கவிஞர் அழகுதாசன் | – | 197 |

# சமர்ப்பணம்



இந்திய முதல் குடிமகனுக்கு
தமிழக மண்ணின் மைந்தனுக்கு !
ஒரு தாயின் குற்றச் சாட்டு :-
பிஞ்சு மனங்களைக் கொள்ளையடித்த குற்றம்
இளைஞர் உள்ளங்களில் குடிக் கூலியின்றிக் குடிபுகுந்த குற்றம்
பண்பட்ட மனிதர்களின் பாராட்டை லஞ்சமின்றி
வஞ்சனையாகப் பெற்ற குற்றம்
பத்திரிகைகள் கிசுகிசுக்க இயலாமல்
கை நெறித்துச் சபிக்கச் செய்த குற்றம்!
ஒட்டு மொத்த நூறு கோடி மக்களிடம் செலவில்லாமல்
மனம் என்னும் வாக்கைப் பெற்று வெற்றிபெற்ற குற்றம்
இதற்கெல்லாம் தண்டனையாக
என்றும் இறவாத வரமான
' மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிரீஇத்தாம் மாய்ந்தனரே '
என்ற புறநானூற்றுப் பாடலுக்கேற்ப
இந்திய இமயத்தின் தந்தையாக,
தமிழக அன்னையின் பிள்ளையாக,
மாற்றார் மனதிலும் மனிதராக
பாரத மக்களின் செல்வமாக –
நல்இதயக் கவிஞனாக
என்றும் நிலைபெற்று வாழும்
எனதருமைத் தலைமகனே ! தலை வணங்கி
என் தந்தையின் இந்நூலை
உமக்குச் சமர்ப்பணமாக்குகிறேன்.

வெ.இரா. நளினி
– ஒரு பாமரத் தாய்–

# பார்வை

மகனே... !
என் –
தந்தையின் நூல்கள்
உன்னைப் பெற்றதால்
உலகைப் பார்த்தன.
நான் உன் தாய் !
நன்றி உனக்கு
நவில்தல் கூடுமோ ?

❋ ❋ ❋ ❋

'உங்களுடைய நம்பிக்கைகளும்,
கனவுகளும், லட்சியங்களும்
தகர்க்கப்படும் போது, அந்தச்
சிதைவுகளுக்கிடையே தேடிப்
பாருங்கள் .....
இடிபாடுகளுக்குள்ளே புதைந்து
கிடக்கும் ஒரு பொன்னான
வாய்ப்பு
உங்கள் கண்ணில் படும்'

# பாதை

நீ ........ !.
என் மைந்தனின்
மனைவி !
ஆயினும் என்ன ?
நான் உன் பிள்ளை.
நீ .......
அழகின் அழகு
மௌனம் உன் அழகு !
கோபம் கூட
அழகுதான் உனக்கு !
வழக்கும் வாதமும்
வாழ்வில் வந்தும்
பிரிவும் உறவும்
பிணங்கிய போதும்
நேசக் கரத்தை
நெகிழ்வாய் நீட்டி
பாசப் பிணைப்பைப்
பரிவாய்ச் சொல்லி
இயற்கை நியதி
இதுவென இயம்பி
கடமைச் சுமையைக்
கருத்தாய் ஏற்றாய் !

நீ ............

வாழ்வில் வந்ததும்

வசந்தம் வந்தது

வானம்பாடியின் கீதம் பிறந்தது

நின் ....

காலடிச் சுவடுகள்

கனமாய் பதிந்ததும்

என் ....

இதயக் கதவுகள்

எளிதாய்த் திறந்தன

பின் ....

உன் தோளில் என் துன்பம்

உன் சொல்லில் என் அமைதி

உன் மடியில் என் மரணம்

நான் .......

மீண்டும் பிறப்பேன்

உன்னிடமே!



# பிறப்பு

கவிஞன் நீ
என்னைப் பெற்றதும்
பிறந்தது ஞானம்.
நாட்டின் சுமையோ
நாற்பது கோடி.
நலிந்த நிலையில்
நானும் ஒன்றா ?
என .... நீ....
உயிர்த்த மூச்சு
உலர்ந்திடும் முன்பே,
பசியில் அலறிய
பாவச் சுமை நான்.
பசுமை அறியாப்
பாவை என் வறட்சி,
அள்ளக் குறையா
அமுத சுரபி !

# பேச்சு

நான்...... !
காதலிப்பது
கவிஞனை மட்டுமே!
ஏனெனில்
படைப்பு,
அவனது பிறப்பு.
நானோர் பசி !
என் கிசு கிசுப்பில்
அவனது படைப்பின் ஆற்றல்
பன் மடங்காகும்.
நான்...... !
அவன் திறவுகோல்
கனவுகளின் விழிப்பு !
இழந்த
காதலின் கீதம்!
அவன்
என் புகலிடம் !
என்னைப் –
பற்றும் போதே
பற்றை விடுகிறான்.
அவன் ஓர் கவிஞன்
காலத்தின் கல்வெட்டு
ஞாலத்தின் விழிப்பு!
ஞானத்தின் நிலைப்பு?

# புவியரசு

தந்தையின் கவிக்கு,
தோல்வியின் விளிம்பில்,
முடிவுரை எழுத
முனைந்த போது–
முதியவள் நீயே
முகவுரை எழுதுக!
என –
புவியின் அரசு
புகலிடம் கொடுக்க,
நன்றி நவிலவும்
நா ... எழவில்லை
கண்ணீர்த் துளிகள்
காணிக்கை யாக்கி
வானில் தந்தை
வாழ்த்துக்கள் கூற
வணக்கம் கூறி
மனம் நெகிழ்கின்றேன்.....



## திரிலோக சீதாராம்

( ஆசிரியர் : சிவாஜி )

# 'லிரிக்'

# முத்துக் கவிதை

---

காணுவன, நெஞ்சிற் கருதுவன, உட்கருத்தைப் பேணுவன யாவும் சிருஷ்டி ரகசியத்தை அறியத் துடிக்கும் மனித இதயத்தின் ஏக்கக் குரலாக அமைகின்றன. புலன் உணர்ச்சிகளுக்கும் காரண காரிய அறிவுணர்ச்சிக்கும் அப்பால், இதயத்தின் ஆழத்தில் ஊற்றெடுத்துப் பெருகும் அனுபவங்களை அழகுணர்ச்சியுடன் வெளியிடும் கலைகளை மென்கலைகள் அல்லது லலித கலைகள் என்று கூறுகிறோம். இவற்றின் பயன் கலைஞனுடைய ரஸானுபவங்களை ( மெய்ப்பாடுகளை) ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் வரப்பெற்று, ரஸிகனுடைய உள்ளத்தில் உறைந்து கிடக்கும் அழகுணர்ச்சி புட்குரல் எழும் விம்மித நிலைக்கு உயர்ந்து தற்போது இன்பம் துய்த்தலாகும்.

இனிய ராகத்தின் மூர்ச்சனையிலும், அற்புதமான சிற்பத்தின் அங்கக் குழைவுகளிலும், ஓவியத்தின் வர்ணக்கலை கலவையிலும் தோன்றும் இதய ஏக்கத்தை, தாளக்கட்டுடன் எழுத்தில் வார்த்தெடுக்கும் வழிதான் கவிதை.

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியில் கவிதைத் துறை இப்போது வளர ஆரம்பித்திருக்கிறது. கடவுளின் பல அவசரங்களைப் போல இதய ஏக்கத்தின் பல அவசரங்களையும் தனித்தனி வடிவங்களில் வார்த்தெடுக்கும் முறை நமக்குப் புதிது. குறிப்பிட்ட ஒரு அனுபவம்,

ஒரு எழுச்சி, ஒரு குழைவு, ஒரு நெகிழ்வு, ஒரு பொறி, ஒரு ஏக்கம், ஒரு வியப்பு, ஒரு தோற்றம், ஒரு மின்னல், இவற்றிற்கு அழுத்தமாக எழுத்தில் வண்ணம் கொடுத்து வெளிப்படுத்தும் கவிதை வடிவுக்கு 'லிரிக்' என்று ஆங்கில இலக்கியத்தில் அடையாளம் கூறப்படுகிறது. தமிழ்க் கவிதைத் துறையில் முத்தகம் என்றும் குளகம் என்றும் கூறப்படும் வகைகள் இந்த இனத்தைச் சேர்ந்தன வாயினும் அவை லிரிக் ஆகிவிடமாட்டா. இதைக் குறிக்கும் தமிழ் வார்த்தை இனிமேல் கண்டுபிடிக்கப்படவேண்டும்.

பாரதிக்குப் பின்னரே 'லிரிக்' எழுதும் முயற்சி நம்மிடை தோன்றியிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட அனுபவ நிலையைப் பிறந்த மேனியாக அழகுணர்ச்சியுடன் வெளியிடும் முத்துக் கவிதைகள் இவை.

வெள்ளியங்காட்டானுடைய கவிதைகள் சிலவற்றை ' தியாகி ' யில் வெளியான போதே படித்துப் பார்த்த போது அவரிடம் லிரிக் கவிதைகளுக்கு வேண்டிய கனல் மூண்டிருப்பதை அறிந்தேன்.

அவருடைய கவிதைகள் தொகுக்கப்பட்டு வெளியாவது குறித்து மகிழ்கிறேன். கவிதைகளில், கவிஞனுடைய வியப்பு வேதனைகள் வெளியாகும் போது, அவற்றின் ஊடே உயிர் ஏக்கம் ஆழத்தில் இழைந்து சுருதி கூட்டுவதே 'லிரிக்' கின் தனிச்சிறப்பு. அந்த எல்லையைத் தாண்டி "பலச்ருதி" கூறுவது போல "எனவே இப்படி செய்க... அல்லது இதன் பயன் இன்னது" என்பது போன்ற அறவிளக்கம் அல்லது பயன் கூறல் கவிதையில் வருமாயின் கலைமாற்று சற்று குறையத்தான் செய்யும், பிரசாரக் கவிதைகளில் இது தவிர்க்க முடியாதது தான். கலையே ஒரு நிலையில் உயிர்த் துடிப்பின் பிரசாரம் தானே. ஆயினும் பிரசாரம் என்பது தனியாகத் தலையை நீட்டிக் கொண்டு வெளியே வராமல் கலையின் ஜீவ ஓட்டத்துடன் கலந்திருப்பதுதான் மேலான இன்பம் பயப்பதாகும். கலையின் வடிவான உயிர்த் துடிப்பின் உன்னதப் பிரசாரமும் கூட.

வெள்ளியங்காட்டான் அவர்களிடமிருந்து ரஸிகர்கள் சிறந்த கவிதைகள் பலவற்றை எதிர்பார்க்க இடமிருக்கிறது.

# பேராசிரியர் அ. சீநிவாசராகவன்

(கவிஞர் நாணல்)

## 'கலந்துண்ண வாரீர்'

வெள்ளியங்காட்டான் அவர்களை எனக்கு நேரில் தெரியாது. அவ்வப்போது அவருடைய பாடல்களைத் தியாகியில் படித்து மகிழ்ந்திருக்கிறேன். அவ்வளவு தான். ஆனால் பாடல்களை மற்றவர்களுக்குச் சிபார்சு செய்ய இது போதாதா என்று தியாகி ஆசிரியர் எண்ணுகிறார். உண்மைதானே? பாடல்கள் யார் எழுதியவையானால் என்ன, நன்றாயிருந்தால் அனுபவிக்க வாருங்கள் என்று எல்லோரையும் அழைப்பதில் தவறில்லையே? ஒரு வகையில் விமர்சகன் கலந்துண்ணக் கரையும் இலக்கியக் காக்கை தானே!

என்றாலும் காக்கையின் குரலுக்கு இனிமை ஏது? இதோ கவிஞர் வெள்ளியங்காட்டான் பேசுகிறார், மலையைப் பற்றி, கேளுங்கள்:

பருவ காலத் தருணி போலப் பருவதம் துலங்குது
புருவ நடுவில் திலகம் போலப் பொழுதிருந் திலங்குது
கருத்த கூந்தல் விரித்ததென்னச் செறிந்து மேகம் தவழுது
பொருத்தங் கண்டு சிரித்த தென்னங் குருத்து மின்னல் துவளுது

கவிஞருடைய பார்வையில் மலை, மடந்தையாக மாறிவிடுகிறது நம்முடைய பார்வையிலுந்தான், அவருடைய சொற்களைக் கேட்டவுடன். இது போலவே அவருடன் நின்றால், வற்றிச் சுரப்பதே வாழ்க்கையாய்க் கொண்டு – வையக மீதில் இருக்கும் குளத்தையும்

துள்ளும் கன்றெனவே- மண்ணில் - துகளெழுப்பி வரும் பள்ளிப் பிள்ளைகளையும், அரசன் ஆண்டி என்று - அணுவும் பேதமின்றி,- சரிசமான இன்பம்- தந்து-தனது இயல்பு நாட்டும் மலர்களையும் காண்கிறோம்.

இயற்கையின் அழகை அனுபவித்து எடுத்துக் காட்டுவது போலவே மனித வாழ்க்கையின் நன்மை தீமைகளைப் பற்றியும் இலட்சிய வாதியாக நின்று வெள்ளியங்காட்டான் பேசுகிறார். சுயநலமும் போட்டியும் சேர்ந்து அன்பையும் அருளையும் அழிக்க முற்படுவதைக் கண்டு பொருமுகிறார்.

உயிர்கட் குறுதியாய் - அறிஞர்
உண்டுபண்ணின
பயிரழிகிறதே - தருமப்
பயிரழிகிறதே

வயல் வெளிகளிலே - அன்பு
வடிவு நெல்லெல்லாம்
சுயநல எருமை- அந்தோ
சூறையாடுதே

தோட்டக் காட்டிலே - கருணைச்
சுவைக் கரும்பெலாம்
போட்டிக் குறுநரிகள் - கடித்துப்
பொங்கல் பண்ணுதே

என்ன செய்வது?

அயர்வும் மயக்கமும் நீக்கடா - நெஞ்சில்
ஆண்மையறிவினைத் தேக்கடா
உயர்வே உயிரென ஊக்கடா - உன்னை
உண்மை மனிதனா யாக்கடா

அதற்குத் துணிவு வேண்டாமா ? கவிஞர் துணிகிறார் ?

பிஞ்சு நாட்பட முற்றிக் கனிந்ததும்
பிணைப்பு நீங்கி பிரிந்திடும் காட்சியை
நெஞ்சி லூன்றி உணர்ந்ததன் பின்புதான்
நீணிலந்தனில் வாழத் துணிகிறேன்.

இதெல்லாம் இலட்சியங்களைப் பற்றிய பேச்சு. சாதாரணமான வாழ்க்கைச் சம்பவங்களில் தோய்ந்து, அதனால் ஏற்படும் உணர்ச்சிகளையும் கவிஞர் வெளியிடுகிறார். ஏழை ஒருவன் வறுமையின் காரணமாகத் தன் குழந்தை கேட்கும் பொருளை வாங்கித் தர முடியாமல் இல்லை என்கிறான். குழந்தை அழுதுகொண்டு வெளியே செல்கிறது. திரும்பி வரவில்லை. பெற்ற மனம் பித்தாகிறது.

கொத்தாரும் பூம் பொழிலில் ஓடியாடி
குடுகுடுவென வந்தெனது மடியில் குந்தி
செத்தாருக் குயிரூட்டும் தமிழ்வாய் தன்னில்
தேனொழுக இளங்குதலை மொழியால், அப்பா !
முத்தாரம் வாங்கித்தா என்றாள், அம்மா
முடியாதென் னாலென்றேன். உடனே பொத்தல்
சித்தாடை யால்கண்ணை ஒற்றிக் கொண்டே
சென்றவள்தான் வரவில்லை எங்கோ காணோம்!

உண்மையான உணர்ச்சியைத் தாங்கி வருகின்றன இச்சொற்கள். அடுத்த பாட்டிலே, தீராத, யாராலும் தீர்க்க முடியாத ஆசையின் துயரம் தோய்கிறது. உணர்ச்சி கவிதையாகி விடுகிறது.

மண்ணிடையே வெண்ணிலவில் வட்டம் சுற்றி
மலர்க்கரத்தின் இதழ் விரலால் சுட்டிக்காட்டி
விண்ணிடையே மிளிர்கின்ற தங்கத்தட்டு
விலையில்லை எடுத்துத்தா, அப்பா என்றாள்.

பண்ணிடையே தெறிக்கின்ற இன்பச் சொற்கள்
பரவசமாய் எனை வருத்த, இயலா தென்றேன்.
கண்ணிடையே கருமணிகள் கசங்கும் வண்ணம்
கைகொண்டு பிசைந்தாளைக் காணோம், காணோம் !

இத்தகைய பாடல்களின் தொகுதியே இனிய கவி வண்டு என்ற இப் புத்தகம். இது உயர்ந்த கவிதையா, பாரதிக்கும் கம்பனுக்கும் சமானமாகுமா என்றெல்லாம் விமர்சனக் கலைஞர்கள் ஆராய்வார்கள், ஆராயட்டும். நம்முன் படைக்கப்பட்ட உணவை அதனினும் உயர்ந்த உணவு எங்கேயோ இருக்கிறது என்ற காரணத்திற்காக நாம் ஒதுக்கலாமா? எளிமையும், உண்மையான உணர்ச்சியும் உள்ள பாடல்கள் பல இங்கே இருக்கின்றன, வாருங்கள், அனுபவிக்கலாம் என்று அழைக்கிறேன். என் குரலிலே இனிமை இல்லை. உண்மைதான். ஆனால் பாட்டின் இனிமையை உணர்ந்த தமிழ் அன்பர்கள் வாராமலா இருப்பார்கள்?

(1948)

# கொத்தமங்கலம் சுப்பு

## 'கவிதைக் கோயில்'

கோபுரங்களைப் பார்க்கும் போது வெறும் அழகு மட்டும் தென்படுவதில்லை. கோயில் மணியைக் கேட்கும் போது வெறும் ஒலி மட்டும் செவி புகுவதில்லை. இரண்டிலும் இதயத்திற்கு இன்பமளிக்கும் ஏதோ ஒன்று இருப்பதைக் காண்கிறோம்.

பாடலும் இந்த இனத்தைச் சேர்ந்ததுதான். சொல் அழகு மட்டும் இருந்தாலும் போதாது. கருத்து மட்டும் இருந்தாலும் போதாது. சொல்லும், கருத்தும் அளவோடு கலந்து, சுவையும் பொருளும் உடையதுதான் பாடல்.

இந்தப் பாடலிலே எத்தனையோ விதங்கள்இருக்கலாம். இருந்தால் என்ன? காசிக்கோயிலும், காஞ்சிக் கோயிலும் பர்மாவிலுள்ள புத்த விஹாரமும், வேளாங்கண்ணிக் கோயிலும், நாகூர் பள்ளியும் உருவத்தில் வேறுபட்டவைதான். ஆனால் கருத்தழகில் ஒன்றுக்கொன்று குறைந்தவை அல்ல என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுவோம்.

கடவுள் உலகத்தை வாழ வைக்கிறார் என்பது நம்பிக்கை. கருத்து, உலகத்தை வாழ வைக்கிற தென்பது கண்கண்ட உண்மை. கடவுளுக்குக் கல்லாலே கோயில் கட்டி அணிமதிலும் ஆயிரக்கால் மண்டபமும் எடுக்கிறோம். மிகவும் சிறிய இடத்தில் இருளும் ஒளியும் கலந்து விளையாடக் கடவுளைப் பிரதிஷ்டை செய்கிறோம்.

கருத்துக்கோ ஆதாரங்களை அஸ்திவாரமாக்கி, இலக்கணக் கோயில் கட்டி, சிப்பிக்குள் வைத்த முத்தைப் போல அதை வைக்கிறோம்.

ஆனால் பேய்க்கும் பிரம்மத்திற்கும் கோயில் கட்டுவது வழக்கமில்லை. அதைப் போலவே எவ்வளவு தான் உடனே மனதில் பதியக் கூடிய நிகழ்ச்சியாயிருந்தாலும் மனதில் மாசை வளர்க்கும் கருத்துகளுக்கும் கவிதை இடம் கொடுத்து விடுமானால் அது மக்களைக் கெடுத்துவிடும்.

கவிதையின் சக்தி அதிகம். வசனம் பாடமாவதில்லை, தீங்கைத் தரும் கருத்துக்கள் வசனத்திலிருந்தால் தப்பித் தவறிப் படித்தாலும் மறந்து தொலைத்து விடலாம். கவிதையில் புகுந்தாலோ படித்தவர்களால் மறக்கவே முடியாது. சிறுபிள்ளை விளையாடி வீட்டுக்குத் தீ வைத்தது போலாகும். நரி இடத்திலோ வலத்திலோ போகட்டும். ஆனால் மேலே விழுந்து பிடுங்காமல் போனால் போதும் என்று சொல்லுவார்கள். இது நரிக்கு மட்டுமல்ல. நமக்கும் பொருத்தந்தான்.

சுதந்தர இந்தியாவில், வருங்கால வாழ்விற்கு வழிகள் வகுக்க வேண்டிய இந்தச்சமயத்தில் எழுதுவோர்களும் பாடுவோர்களும் மிகவும் ஜாக்ரதையாக இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் எழுதாவிட்டாலும் பாதகம் இல்லை. நல்லவை அல்லாதவையை எழுதிவிட்டோமானால் பாதையிலே முள்ளை அள்ளிப்போட்ட பாவத்திற்கு ஆளாவோம்.

மேற்கண்டவைகள் என் அறிவு, எனக்குச் சில சமயம் சொல்லும் புத்திமதிகளாகும். அறிவுக் கிணங்க மனம் நடக்கும் பெருமையை நான் அடையவில்லை. "சிருஷ்டி தான் உனது கடமை. விமர்சனம் உன்னுடையதல்ல, நீ கற்றது கைமண் ணளவு, கல்லாதது உலகளவு,
வெள்ளியங்காட்டான் கவிதைப்படி. அதிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடியதைக் கற்றுக் கொள். படிக்கும் மாணவன் நீ. பாராட்டிப் பேசத் தகுந்த பேராசிரியன் அல்ல" என்று அறிவு கூறுகிறது.

ஆனால் மனமோ "சும்மா எழுது. கௌரவத்தைக் கைவிடாதே" என்று கூறுகிறது. இந்தப்போராட்டத்துக்கிடையே அகப்பட்டுத் தவிக்கிறேன் நான்.

வெள்ளியங்காட்டான் பாடல்கள் நாட்டிற்கு நன்மை செய்யக்கூடிய கருத்துக்களுடையவை. அவைகளில் நாட்டின் பண்பு நன்றாக இருக்கிறது. உண்மைகளையே சொல்லியிருப்பதனால் பாட்டுகள் பொருளுடையனவா யிருக்கின்றன. இவற்றைப் படித்துப் பாடிப் பயனடைவது நமது கடமை என்று உங்களிலே ஒருவனாகிய நான் எண்ணுகிறேன். படித்துப் பாருங்கள். நீங்களும் அப்படியே எண்ணுவீர்கள்.

குறிப்பு –

வெள்ளியங்காட்டான் என்னும் பெயருடையவர் யார் என்று எனக்குத் தெரியாது. அவருக்கும் எனக்கும் பழக்கமில்லை. அவர் பாடலுக்கும் எனக்கும் தான் பழக்கம்.

# டாக்டர் மா. இராமலிங்கம்

**(கவிஞர் எழில் முதல்வன்)**

## 'தலைவன் - ஒரு மதிப்பீடு'

---

கவிஞர் வெள்ளியங்காட்டானின் தலைவன் என்னும் பாவியம் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப் பெற்றுள்ள வெண்பா யாப்பிலான இனிய நூல். மிகச்சிறந்த மரபுக் கவிஞரான வெள்ளியங்காட்டான் தன் வாழ்வில் பட்டறிவினையும் கல்வியறிவினையும் இணைத்து இந்நூலை யாத்துள்ளார். நாட்டை நன்னெறிக்குய்விக்கும் நூல்கள் அண்மைக்காலத்தே தோன்றாத குறையினைப் போக்கி நிறைவு செய்ய வல்லது, தலைவன் என்னும் நூல். அறநெறிச் சிந்தனைகளையும் ஆன்மீகச் செய்திகளையும் ஆய்ந்து தெளிந்து எளிய வெண்பாவின் வாயிலாக வெளியிட்டுள்ள கவிஞரின் சமுதாயப் பணி போற்றுதற்குரியது.

அரசியல், பொருளியல் நோக்கில் தடம் புரண்டுவிட்ட இன்றைய உலகை நெறிப்படுத்த வேண்டும், என்ற கவிஞரின் உள்ள வேட்கையை இந்நூல் தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

என்னும் புறநானூற்றுப் பொன் மொழியை நெஞ்சில் கொண்டு நோக்கின், தலைவனின் சிறப்பும் பண்பும் தெற்றெனப் புலப்படும். இந்நூல் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது.

ஒவ்வொரு பிரிவும் இருபது உட்தலைப்புகளையும் ஒவ்வொரு தலைப்பும் பன்னிரண்டு வெண்பாக்களைக் கொண்டும் நூல் சிறப்புற்றுள்ளது. நூல் முழுமையும் பல்வேறு வகையான கருக்களைக் கொண்ட வெண்பாக்களைக் கொண்டிருந்தாலும் அவற்றிலெல்லாம் சமுதாயத்திற்குத் தேவையான நல்வழிச் சிந்தனை உயிரோட்டமாகத் திகழக் காணலாம். கொள்ளுவார் கொள்ளும் வண்ணம் நல்ல நடைநலம் சிறக்க இந்நூலைக் கவிஞர் யாத்துள்ளார். உபநிடதக் கருத்துக்களும் ஆன்மீகக் கருத்துக்களும் திருக்குறட் சிந்தனைகளும் இடையிடையே இந்நூலில் பயின்று வரக் காணலாம். இதற்கு இன்றைய ஆரவாரமிக்க உலக அமைதியை இழந்துவிடக் கூடாது என்ற கவிஞரின் ஆர்வப் போக்கே காரணமாகும்.

உபநிடதக் கருத்துக்களை எளிமையாக்கி ஆசிரியர் எடுத்தாண்டுள்ளமைக்கு

வேதத்தைக் கற்று விரித்து விளக்கிடினும்
பூதத்தைப் பற்றிப் புகழ்வது – சாதத்துக்
கானதொரு தந்திரமே ஆத்மிகமன் றென்கிறது
கேனோ வுபநிசத் து

இந்தஎன் ஆத்மாவே ஈசனெனும் வேதாந்த
விந்தைக் கருத்து விளக்கமுற – வந்துமற்
றோமெனும் ஒற்றை ஒரு சொல் உணர்வே நா
னாமெனும் பற்றை யறிந்து

ஆற்றற் கரியவொரு ஆன்மீக வாழ்வில் நாம்
போற்றக் கருதல் புகழொன்றே – சாற்றின்
அதுவே அமிழ்தம் அழிவின்மை ஆயின்
அதுவேநா மாவ தறிந்து.

ஆகிய வெண்பாக்கள் காட்டுக்களாகின்றன. இறைவனைப் பற்றியும்

உயிர்களைப் பற்றியும் உபநிடதங்கள் சாத்திரங்கள் கூறும் கருத்துக்களைத் தெளிந்து கவிஞர் விளக்கியுள்ள திறம் சிந்தித்தற்குரியது. தத்துவச் சாரச் செய்திகளைத் தொகுத்து விளக்கியுள்ளார். நான் என்னும் தன்முனைப்பை அடக்கி நலம்பெற வேண்டும் எனவும் அழியுமுடலைக் கொண்டு அழிவற்ற புகழைத் தேடவேண்டும் எனவும் உயிர் ஊக்கச் செயல்களைக் கவிஞர் உலகுக்களித்துள்ளார். வாழ்வுக்குறுதி பயக்கும் நல்லொழுக்கமும் நற்செயல்களும் நல்சிந்தனைகளும் மனிதகுலம் முழுமையும் ஏற்றுப் போற்றிக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் பாங்கில் இந்நூல் அமையக் காணலாம்.

இவரது பாடல்களில் சித்தர்களின் சிந்தனைகளும் இடையிடையே விரவிக் காணப்படுகின்றன.

அன்றே அறிஞர் அறிவித்தார் அக்னிகள்
ஒன்றா யுடலின்மூன் றுண்டெனவே - ஒன்றால்
உணவு செரித்தல் உயிர் காத்த லொன்றால்
குணம் கூட்டவொன்றால் குறித்து.

இப்பாடலில் சித்தர்களின் கருத்து உட்புதைந்துள்ளமையை உணரலாம். ஆன்றோர் தங்களது வாழ்வில் கண்டு தெளிந்ததை இலக்கியமாகவும், வாழ்விலக்கணமாகவும் வகுத்தும் தொகுத்தும் பல்வேறு வடிவங்களில் விட்டுச் சென்றுள்ளனர். அவற்றைக் கற்றோர் கற்றுணர்ந்தோர் கலைத்திறகேற்ப மீண்டும் வழங்க வேண்டுதல் சமுதாயக் கடப்பாடாகக் கொள்ளலாம். அவ்வகையில் கவிஞர் வெள்ளியங்காட்டான், திருக்குறட் கருத்துக்களையும் உரிய இடங்களில் இணைத்துள்ளார்.

ஓமெனும் சொல்லுக் கொருகுறள்பா - வாமெனவே
வெள்ளத் தனைய மலர்நீட்டம், மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு

மேற்கண்ட வெண்பா திருக்குறளை நூலாசிரியர் எடுத்தாண்டுள்ள திறத்தினை விளக்கும் சான்றாகிறது. குறளையேோ, தொடரையோ, கருத்துக்ளையோ அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

திருக்குறள் கற்றுத் தெளியாதான் சிந்தை
செருக்கிருள் பற்றிச் செறிந்து - கருக்கிருளாய்
வீடெங்கும் வெட்கம் விளைவித்து விட்டுளதால்
நாடெங்கும் நட்பு நலித்து

இவ்வெண்பா கவிஞர் திருக்குறள் மீது கொண்டிருந்த பற்றினை விளக்கும் சான்றாகிறது. இவரது நோக்கம் குறட்கருத்துக்களை மக்கள் அறிந்து தெளிய வேண்டும் என்பதேயாகும். தலைவன் எனும் காவியத்தில் இழையோடிச் செல்லும் இப்பண்பு விளைவிக்கும் பயன், சமுதாயத்தின் கடைத்தேற்றம் என்ற ஒன்றேயாகுமெனில் மிகையில்லை. இவற்றோடன்றி இந்நூலில் அணியிலக்கணம் கூறும் உவமை, உருவகம் முதலான அணிகளும் பயின்று சிறந்துள்ளன. இலக்கிய இன்பம் காணவிழைவோர்க்கும் இன்பப் புதையலாகுந் தன்மைக்குச் சில காட்டுக்களைக் காணலாம்.

காலைக் கமலம் கதிரோன் வரவேற்கச்
சோலைக் குயில்வாழ்த்தச் சூக்குமமாய் மாலைக்
கலையைத்தன் காதலிக்குக் கற்பித்தான் கண்கள்
தொலையாய்த் தொலைக்கும் துயில்.

இவ்வெண்பா உருவக அணி பொதிந்து சிறந்துள்ளது.

மாதர்கள் மாந்தி மகிழுமெழில் மார்புக்குள்
தீதரும் பாத திருக்கமலப் - போதரும்பிப்
பூத்துப் பொலிதலெனப் பொன்னிதயம் பூத்த புகழ்
முத்துப் பொழியும் முகம்.

இவ்வெண்பா உவமையணிக்குக் காட்டாகின்றது. இதைப்போன்று பல்வேறு அணிகளும் பாங்குடன் பொதிந்து பொலிவு பெற்று விளங்குகின்றன.

நூலாசிரியர் உலகியல் தன்மைகளை மிகவும் நுணுக்கமாக நோக்கி விளக்கியுள்ள திறமும் போற்றத் தக்கதாகவுள்ளது.

சோறுகா ணாதான் சுதந்திரமும் சோறிருந்தும்
பேறுகா ணாதான் பெருமிதமும் - பேறிருந்தும்
வீறுகா ணாதான் விகசிதமும் வீறிருந்தும்
ஆறுகா ணாதான் அவம்.

குடல்பசியை யாற்றிக் கொளக்கூடும் கூடின்
உடல்பசியை யாற்றிக் கொளக்கூடும் - கடல்பசிபோல்
போதுமெனக் கூறாப் பொருள்பசியை யாற்றுவது
நீதமெனக் கூறும் நிலை.

மேற்கண்ட வெண்பாக்கள் உலகியல் சிந்தனை வயப்பட்ட செய்திகளை விளக்கும் தன்மையுடைய இவரது பாக்களுக்கோர் காட்டுக்களாம்.

கவிஞரின் தமிழ்ப் பற்றினை இந்நூலில் காணலாகும் பல பாடல்கள் பறைசாற்றுகின்றன.

அமிழ்ததனை யாராதா ரென்ன, அருமைத்
தமிழ்த்திறனை யோராது தாழ்ந்தார்.

என்ற அடிகள் அவர் தமிழின்பால் கொண்டுள்ள காதலைப் புலப்படுத்த வல்லன. உரிய இடங்களில் பழமொழிகளையும் கதைக் குறிப்புகளையும் பயன்படுத்தி வெண்பாக்களை யாத்துள்ளார். தான் எடுத்துக்கொண்ட கதைக்கேற்ற வகையில் நிகழ்ச்சிகளை அமைத்து எளிமையான தெளிந்த நீரோட்டமாகத் தலைவன் எனும் இப்பாவியத்தை நடத்திச் செல்கிறார்.

முடிவாக கூறுவமாயின் தலைவன் எனும் இந்நூல் வழி இன்றைய உலகுக்குத் தேவையான கருத்துக்களான சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் எனும் மூன்று நிலைகளை மக்கள் உள்ளபடியே துய்த்திட வேண்டுமாயின் சமுதாயத்தில் அமைதி நிலவ வேண்டும். அந்த அமைதி நிலவிட ஊறுவிளைவிக்கும் சக்திகளைக் களைந்து மக்கள் நன்னெறி நிற்க வேண்டும். அந்த நெறியைப் பற்றிட அவர்களுக்குத் தேவை ஆன்றோர்கள் விட்டுச் சென்ற அரும்பெரும் கருத்துக்கள். அக்கருத்துக்களைத் தொகுத்து கதையோட்டத்துடன் ஆசிரியர் காவியமாக்கியுள்ளார். இந்நூல் இருபதாம் நூற்றாண்டில் தோன்றியுள்ள வெண்பா இலக்கியங்களில் குறிக்கத்தக்கதாகத் திகழ்கிறது.

மக்கள் முன்னேற்றத்தினையும் வாழ்க்கைச் சிக்கலுக்கான காரணங்களைப் பற்றியும் கவலைப்படாத இலக்கிய படைப்பாளர்களிடையே கவிஞர் வெள்ளியங்காட்டானின் தலைவன் உண்மையிலேயே அனைவருக்கும் தலைவனாகுந் தகுதியைப் பெறுவான். உண்மையான உழைப்பு, நற்சிந்தனை, நல்லொழுக்கம், நற்பண்பு ஆகியவற்றை வலியுறுத்தும் இந்நூலின் ஆசிரியரின் நோக்கமும் முயற்சியும் தமிழ்கூறு நல்லுலகம் போற்றிப் பயன் கொள்ள வேண்டும். பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் என்ற பொய்யா மொழிக்கேற்ப இந்நூலாசிரியரின் சீரிய நேரிய குறிக்கோளிற்கேற்ப இந்நூல் நின்று நலம் பல நல்கவல்லது.

(1990)

# கவிஞர் சக்திக்கனல்

## ' கவிஞரும் கலைமணியும் '

---

முதுபெரும் கவிஞர் வெள்ளியங்காட்டான் அவர்கள் என் மதிப்புக்கும் அன்புக்கும் உரியவர். நல்ல சிந்தனையாளர். பகுத்தறிவாளர். அழகுத் தமிழில் இனிமை தவழ்ந்திடக் கவிதை தரும் கவிஞர். நாங்கள் 1964-ல் கோவை தமிழ் எழுத்தாளர் மன்றம் என்ற இலக்கிய அமைப்பை நிறுவி நடத்தி வந்தோம். அவ்வப்போது இளைய தலைமுறையின் எண்ணங்களை வெளியிடும் வண்ணம் சுமார் 50 கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டோம். பல பிரபல கவிஞர்களின் கவிதைகளையும் அதில் சேர்த்தோம். 'எழுக கவிஞ! ' என்ற அந்தக் கவிதைத் தொகுப்பில் சிறப்பிடம் பெற்றது கவிஞர் வெள்ளியங்காட்டான் அவர்களின் 'துணிவு' என்ற கவிதை.

" வாழ்வும் சாவும் உண்மைகள்
பிஞ்சு கனியாகிறது-கனி உதிர்கிறது
இதை நான் நன்கு உணர்ந்து கொண்டேன்.
எனவே எனக்கு இனி வாழ்க்கையில் அச்சமில்லை,
ஆம் என் எண்ணங்கள் உயர்ந்தவை.
நான் ஒரு சிறுசெடி நிழலில் இளைப்பாறி
அற்ப மகிழ்ச்சி எய்த மாட்டேன்.
கொதிக்கும் சூரியன் என்னைச் சுட்டெரித்தாலும் சரி - எனக்கு
வேண்டியது கற்பகத் தருவின் நிழல்- அதை நான்
அடைந்தே தீருவேன் ".

இதோ! கடல் : நான் ஆழ் கடலில் மூழ்கி முத்தெடுக்கத் துணிந்து விட்டேன். ஆழமான இக்கடலில் குதிக்கத் துணிந்து விட்டேன். கரையில் நின்று கொண்டு, நீ இறந்து விடுவாய் எனக்கதறும் கோழைகளைப் பற்றி எனக்குக் கவலையில்லை. என்னிடம் உள்ளது காண்டீபம். அது வேறொன்றுமல்ல எனது கவிதை வரையப்பட்ட ஏடுதான் ! இந்த வில்லிலிருந்து புறப்படும் சொற்கணைகள் மூடர் மனத்திலே உலாவரும் மூர்க்கப் புலிகளைச் சங்கரிக்கும் ".

இப்படியெல்லாம் சொல்லி வந்தவற்றுக்கு முத்தாய்ப்பாக நான்கே வரிகளில் துணிவுமிக்க ஒரு மாவீரனாக மாறி விடுகிறார் கவிஞர்.

தீட்டி வீசிடும் கத்திக் கெதிர் செலின்
தீமை நேரும் என்றுள்ளம் உணரினும்
நாட்டு நன்மையைக் கோரி யழைத்திடின்
நகை முகத்துடன் தாங்கத் துணிகிறேன்.

இந்த அருமையான கவிதையை, கவிஞர் வேமா முதலிய நண்பர்கள் அடிக்கடி சொல்லி மகிழ்வதுண்டு. டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் இக் கவிதையை உருது மொழியாக்கம் செய்வித்து ஒரு [illegible]து மாத இதழில் வெளியிடச் செய்தார். இவரது முதல் கவிதைத் தொகுப்பான இனிய கவி வண்டு ஒரு அற்புதமான கவிதைப் பூக்காடு. புதிய மாற்றத்தை வரவேற்கும் கவிதைகளால் மலர்ந்தது அது.

இது புதுக்கவிதையின் ஆட்சிக்காலம். இன்று அரசியலில் ஆட்சியிலுள்ளவர்கள் கூட அறிஞர்களை வணங்கி ஆசிபெறல் சாதாரண நிகழ்ச்சி. அம் முறையில் இன்றைய கவிஞர்கள், கவிஞர் வெள்ளியங்காட்டான் போன்றவர்களைப் புரிந்து கொள்வது நல்லது. எங்கோ தனியாக ஓடிக்கொண்டிருக்கும் இனிய நீர் கொண்ட சிற்றாறுபோல, கொதிக்கும் வெயிலில் குடை விரித்து விசிறும் ஒரு [illegible]மரம் போலக் கவிஞர் வெள்ளியங்காட்டான் விளங்குகிறுர். இவரிடம் புல்லும் கதை சொல்லும். நெல்லும் பேசும். ஆலமரமும் அங்கு வரும் காற்றும், சித்திரை வெயிலும், ஐப்பசி மழையும் கூட நமக்கு அறிவுரை கூறும்.

குறிப்பாக மனிதாபிமானமே இந்நூலின் சாராம்சம். சத்திய ஆவேசமே இதன் தாக்கம். இதுவே பரிசைப் பற்றிய விளக்கம்.

இந்தப் பரிசு நூலை என் அன்புக்கும் மதிப்புக்கும், மரியாதைக்குமுரியவரும் மனிதாபிமானமும் தெளிந்த சிந்தனையும் அளவு கடந்த நிதானமும் வழிகாட்டும் தன்மையும் படைத்தவரும் கோவை இந்திய சோவியத் நட்புறவுக் கழகத் (இஸ்கஸ்) தலைவருமான கலைமணி நிறுவனங்களின் தலைவர் திரு. எஸ். மணி அவர்கள் அச்சிட்டுள்ளார்கள். இது கலைமணி கல்வி அறக்கட்டளை கவிஞருக்குக் கொடுக்கும் பரிசு. இதன் மூலம் கலைமணி கல்வி அறக்கட்டளை, நூற்றுண்டுக் கவிஞன் பாரதியை உண்மையாகவே கௌரவிக்கிறது. ஒரு நல்ல கவிஞரை இனம் புரிந்து பாராட்டுவதன் மூலம். வாழ்க கவிஞர்! வெல்க கலைமணி கல்வி அறக்கட்டளை!

(1982)

*" நீ தேர்ந்தெடுத்தால் ஒரு கவிஞனைத் தேர்ந்தெடு*

*தத்துவ ஞானியைக் காட்டிலும் அவனே உண்மையைத் தொடக்கூடியவன்."*

– **ஓஷோ** –

# முகவுரை

# நினைவுச் சுழலில்...

---

**வெ.இரா. நளினி**

முகவுரை என்றால் என்ன? அதைப்பற்றி நான் ஏதும் அறிவேனா? நடுங்கும் இதயமும், நீர் வழியும் விழிகளும், விம்மி வெடிக்கும் கதறல்களுமே நான் இந்நூலுக்குத் தரும் முகவுரை -யாகும். ஆம், அதுவே இந்நூல்கள் பிறந்த கதையும் கூட.

இன்னும் சரியாகச் சொல்வதென்றால் சந்தர்ப்ப வசத்தால், ஏதுமறியாச் சிறு பெண் தன் தாயின் பிரசவத்தை எதிர்கொள்வது போல, இதுவும் ஒரு அச்சம் தரும் அனுபவமே !

நானோர் பாமரப்பெண். எனக்கு எதற்கு இத்துணை சுமை? கன்னித் தமிழ்க் கடலில் கண்டெடுத்த நல்முத்து மின்னின், கதிரோன் மெலிவான் – என எண்ணும் ஆழ்கடல் நம் தமிழ்க்கடல். இக்கடலில் நீந்தத் தெரியாத நான் – நானா முத்துக் குளித்து முகவுரை எழுதுவது? இல்லையில்லை அது என்னால் முடியாதது தான்.

என் நான்காண்டுக் கல்வியும், நாற்பதாண்டு நூற்பாலை உழைப்பும் நூலின் தரம் பார்க்க உதவுமேயன்றி, தமிழ் நூலைப் பதம் பார்க்க உதவாது. ஆயினும் குரல் வளமுள்ள ஒருவன் ஒரு பாடலை மனமுருகிப் பாடினால் நாம் அதில் ஒருகணம் லயித்து விடுவது போல என் தந்தையோடு வாழ்வில் பகிர்ந்து கொண்ட அனுபவங்களும், துன்பங்களும், துயரங்களும், ஆங்காங்கே பாலைவனச் சோலையைப் போல், சிறுசிறு மகிழ்ச்சியும் எழுத்து வடிவாக உயிர் பெறும் போது, ஒருகணம் நீங்களும் நின்று கேட்பீர்கள் ! ஆனால், பகிர்ந்து கொள்ள நினைப்பதைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சாதுரியமற்ற பெண் நான் !

மரணம் என்னவோ நம்முன் மீண்டும் வருவேன் எனக் கள்ளச் சிரிப்போடு கண் சிமிட்டிக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், இதயத்தில் எழுந்து தாக்கிக் காயப்படுத்திய – படுத்திக் கொண்டிருக்கிற, இன்னும் காயப் படுத்துமோ என அச்சப் படுகின்ற இதைப் பற்றிப் பேசித்தான் ஆக வேண்டும்.

வேகமாகச் சுழலும் இன்றைய உலகில் மரபுக் கவிதையா? அதை யார் பார்க்கிறார்கள்? யார் படிக்கிறார்கள்? யாருக்கு நேரமிருக்கிறது? எனப் பரவலாகப் பேசப்படும் உண்மை, சுடுகின்றது. மனம் நொறுங்கி ரணப்பட்டுப் போகிறது. நல்லவை தெளிவான ஒரு பாதையைச் சொல்லும் சிறந்த நூல் கூட அது மரபுக் கவிதை என்றால் மறுத்துவிடக் கூடுமோ?

கடல் அழிவில் துன்புற்ற மக்களுக்காக, உலகம் முழுவதும் உதவிக் கரம் நீட்டுகிறார்கள். ஆனால் தமிழகத்தில் மட்டும் கடந்த காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி, நல்ல பல கவிஞர்களும்,

கலைஞர்களும் அல்லல் பட்டார்கள் என்பதைக் கூட, சகித்துக் கொள்ளலாம். ஆனால், அவர்களின் படைப்புகள் புறக்கணிக்கப்படும் அவலம், அதுவும் குறிப்பாகத் தமிழகத்தில் அன்றைய புலவர்கள் அரசனின் தயவை நாடியது போல, இன்றைக்கு அரசியல் வாதிகளின் தயவை நாடும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள்.

எல்லா இன, மத மக்களும் போராடித் தம் உரிமைகளைக் கோரிப் பெறும் இக்கால கட்டத்தில் இலக்கியவாதிகள் மட்டும் தமக்குள் ஒன்றுபட்டு உரிமைகளைக் கோராவிடினும், சரியான தங்கள் படைப்புகளை ஒற்றுமையாக மக்களிடம் கொண்டு செல்லும் வழி வகைகளையாவது ஆய்வு செய்யலாம் அல்லவா?

சமீபத்தில் நான் படித்த சில வரிகள் – குறிப்பாக, " தமிழில் எழுத வந்தவர்கள் எப்போதும் எந்தக் காலத்திலும் நிரந்தரப் பிரச்சனைகளில் மூழ்கி, கயிற்றின் மீது நடக்கும் வித்தை போல்தான் வாழ்க்கையை வாழ்ந்து வந்திருக்கிறார்கள் ". இந்தத் திக்கற்ற நிலை உலகில் வேறு யாருக்கும் இல்லை. எழுத வந்தவனுக்குப் போராட்டம் – ஒரு முனையல்ல, இரு முனை ! வாழவும் போராடியாக வேண்டும், எழுதவும் போராடியாக வேண்டும். இரண்டும் எதிரெதிர் விளைவுகளைத் தரும் என்பதனை அறிந்து உழன்றாக வேண்டும்.

ஆயினும் கூடப் பட்டினி கிடந்தும், செத்தும், எழுத்தாளன் எழுதிக் கொண்டுதான் இருக்கிறான். பசி, பிணி, மூப்பு, சாக்காடு என எல்லாவற்றையும் பார்த்துச் சிரித்தபடி எழுதிக் கொண்டே இருக்கிறான் – என்ற இந்த வரிகள், அரை நூற்றாண்டுக்கு முன் என் தந்தை எழுதிய கடிதத்தை நினைவூட்டியது.

"குழந்தாய்! அரசனுடைய வயிற்றில் பிறக்க வேண்டியவளான நீ, ஒவ்வொரு நாள் மாலையும், காலை உணவுக்கு என்ன செய்வது? எனும் கவலை மிக்க கவிஞனின் வயிற்றில் வந்து பிறந்து விட்டாய். விதி, 'கவி' என்னும் கயிற்றை என் கழுத்திலிட்டு இறுக்கும் இப்பேய்க் கூத்தில் உன்னை ...."என்ற அந்தக் கடிதம் வாழ்க்கை அறிஞனுக்கு வயிற்று வலி போன்றது என்பதை உணர்த்துகிறது.

உண்மை என்றும் பனித்துளியாக இருந்ததில்லை. அது கனன்று எரியும் நெருப்புத்துண்டு. பொசுக்கி விடும் தன்மை கொண்டது. ஆயினும் அதில் எரிவதும் கூடச் சுகம் தருமோ என்னவோ?

"என் செல்வமே! பணக்காரனாவது மிகவும் சுலபம். அதற்குப் பல வழிகள் உள்ளன. ஆனால் கவிஞனாவது மிகமிகக் கடினம். அதற்கு ஒரேயொரு வழிதான்! அது சத்தியத்தைப் பின்பற்றுவது மட்டுமே! சாதிக்க நினைப்பவன் எத்தகைய கொடிய துன்பங்களையும் ஏற்றுக் கொள்வான். அன்று லெபனான் நாட்டு ஞானி, நாடு கடத்தப் பட்டான். இன்று உலகம் முழுவதும் போற்றப் படுகின்றான். நானும் ஒரு கவிஞனாவதையே விரும்புகிறேன் என்பதை மறந்துவிடாதே!"

எனது இந்த நீண்ட முகவுரை உங்களுக்குச் சலிப்பை ஏற்படுத்தக்கூடும். ஆயினும் ஒரு கவிஞனின் காலடி ஓசையை நீங்கள் தயையுடன் கேட்டாக வேண்டும். அந்த கரிய இரவுகளின் தாக்கம், என் குழந்தை உள்ளத்திலேற்படுத்திய அச்சம், இன்னும் கூட அகற்றப்படாத நிலையில், இலக்கியவாதிகளான உங்களிடமல்லாது நான் யாரிடம் கூறுவது? என் போன்ற படிப்பறிவற்ற பாமரர்களிடமா? இல்லை. மொழி தெரியாத அண்டை மாநிலத்தில் உள்ளவர்களிடமா? இல்லை, அயல் நாட்டினரிடமா? சொல்லுங்கள்! மனித நேயம் என்பது அனைவரிடமும் குறைவாகவோ, நிறைவாகவோ இருக்கலாம். ஆனால் இலக்கிய நேயம் அதை அறிந்த இலக்கியவாதிகளிடம் மட்டுமே உள்ளதல்லவா?

"என் காவியங்களே என் வாழ்க்கை.
என் வாழ்க்கையே என் எழுத்து.
என்னைப் பற்றிச் சொல்வதற்கு
என் இலக்கியங்கள் உயிர் வாழ்தல் மட்டுமே! '

என தந்தை தம் இதயத்தை மிகச் சுருக்கமாகத் திறந்து விட்டார். ஆனால், இன்றைய நிலையில் எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் நெருக்கமானவர்கள் யார்? இப்படிக் கேட்கும் தகுதியும் உரிமையும் எனக்கு இல்லைதான். ஆயினும் என் தந்தையின் மறைவுக்குப் பின்

சான்றோர் என நான் நினைத்த சில பேராசிரியப் பெருங்குடி மக்களைச் சந்தித்து, உரையாடிய போதுதான்,நான் கற்ற,பெற்ற, அவமானமும், கசப்பும் உவர்ப்போடு கூடிய கண்ணீரும் என் தந்தையைப் பற்றி எழுதத் தூண்டின.

முகத்தின் அழகைக் கண்ணாடியில் கண்டு ரசிக்கத் தெரிந்த நமக்கு, நம் இதயத்தின் அழகையும், குற்றமற்ற அதன் தன்மையையும் கண்டு கொள்ளவும், கண்டு களிக்கவும் கூடத் தனி ஒரு கண்ணாடி வேண்டும்.

வாழ்வின் உண்மைகள் கற்பனைகளல்ல. அவை கசப்பு மாத்திரைகள். நாங்கள் அவற்றை மென்று விழுங்கி விட்ட போதிலும், அதன் தன்மை என்னவோ இன்னும் ஒட்டிக் கொண்டுதான் உள்ளது. அதன் வெளிப்பாடே இவ்வெழுத்துக்கள். இது நயமற்று, நளினமற்றதாயினும், இதில் உள்ள குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டுங்கள். ஏனெனில் உண்மையை அலங்கரிக்க முடியாது. அதன் அழகும் எழிலும், பரிபூர்ணமான நிர்வாணத்தில் மட்டுமே பரிணமிக்க முடியும்.

விவேகானந்தர் சொன்னதுபோல, "பழைய சமுதாயம் ஆனாலும், புதிய சமுதாயமானாலும், உண்மை எதற்கும் தலை வணங்காது. சமுதாயம்தான் உண்மைக்குத் தலை வணங்க வேண்டும் ! அல்லது அழிந்து போக வேண்டும் !"

" தாழ்வின் எல்லை நமக்கு மிக அருகில். ஆனால் உயர்வின் எல்லையோ மிக மிகத் தொலைவில்! இந்த எல்லையைச் சென்று சேர, இடைவிடாத முயற்சியும், எச்சரிக்கையும் தேவைப்படுகிறது. புகழ் என்பது உண்பதிலும், உடுப்பதிலும் இல்லை. அயராத உழைப்பில், பாலில் வெண்ணெய் போல் அது கலந்திருக்கிறது " என்ற என் தந்தை, சென்ற நூற்றாண்டில் இதே காலகட்டத்தில், மணற் பரப்பே கரும் பலகையாக, விரலே பலப்பமாக எழுதிப் படித்த ஆண்டுகள் மூன்றாக இருக்க........எப்படி முடிந்தது,இப்படி ஒரு சிகரத்தை எட்டிப் பிடிக்க?

கொலைக்குக் கூடத் தம் கூடப் பிறந்தவர்
கூடமாட உதவும் உலகினில்
கலைக்குக் கைதர முற்றும் மறுத்தும் - நான்
கலக்கமின்றி முயன்று முன்னேறியும் -

என்ற இந்தக் கவிதை வரிகள் போதுமே! கொலையை யாரும் தன்னந்தனியாகச் செய்வதில்லை. தூக்குக் கயிற்றில் தொங்குவதற்குக் கூடத் தங்களைத் தயார்ப் படுத்திக் கொண்டே கூட்டுச் சேர்கிறார்கள். அகப்பட்டுக் கொண்டாலும், அவர்களை மீட்க ஒரு கூட்டமே முயல்கிறது. ஆனால் ஒரு கவிஞனைக் கண்டு கொள்ள யாரிருக்கிறார்கள்?

கவிஞனாவதற்கு ஏன் யாருமே உதவுவதில்லை யென்றால், பாழாய்ப் போன உலகில் அவன் வாழ்க்கை கந்தலாகி விடுவது மட்டுமல்ல, அவனை அண்டியிருப்போர் கூடக் கந்தலாகிப் போவதால்தான். இது என் இதயத்தின் எதிரொலி. இதைக் கேட்க உங்களுக்கு விருப்பமில்லாமலிருக்கலாம். ஆனால் நான் இதற்காகவே காத்திருந்தேன். பலவீனமான என் இதயம் நினைவுகளின் சுமை தாங்காமல் வெடித்து விடுமோ என நான் அஞ்சினேன். நீங்கள் இதை நிராகரித்தாலும், அடுத்த தலைமுறை, இல்லை அதற்கும் அடுத்த தலைமுறை, அதுவும் இல்லையேல் பிகாஸோவின் ஓவியங்கள் பல நூற்றாண்டுகளுக்குப்பின் பார்க்கப்பட்டது போல இதுவும் கேட்கப் படக் கூடும் அல்லவா? உலகம் முழுவதுமுள்ள மக்களில் எவரேனும் ஒருவரின் இதயத்தில் இது புகுந்து வெளிப்படும். ஒரேயொரு விதை, ஒரேயொரு மரம், மீண்டும் ஆயிரமாயிரமாக.......!

" குழந்தாய்! ஒவ்வொரு மனிதனுக்கும் போதுமான ஆற்றல் இயல்பாய் அமைந்திருக்கிறது. ஆனால் அதை எல்லோரும் கண்டு கொள்ள வேண்டும். காலம் எதற்காக இருக்கிறது? ஆற்றல் எதற்காக இருக்கிறது? செயல்படவே அல்லவா? ஆகவே நீ செயல்படு. ஒவ்வொரு கணமும் செயல்படு. ஓடாமல் உட்காராமல் நிமிர்ந்து நட! உன்

உன்னதமான குறிக்கோளை நோக்கி மனம் தளராமல் உறுதி குலையாமல் நடந்து கொண்டேயிரு! உன் குறிக்கோள் உயர்ந்ததாக இருந்தால், அதை அடைவதில் நீ வெற்றி பெற்றால், உனக்கு மட்டும் தானா மகிழ்ச்சி? அனைவருக்கும் – ஆம் அனைவருக்குமே அது மகிழ்ச்சி அளிக்கும்.

“எழுது! எழுது! மேலும் மேலும் எழுது! எழுதிக் கொண்டேயிரு; கற்றுக்கொண்டேயிரு ; உன் ஒவ்வொரு கணமும் செயலில் கழியட்டும். உழைப்புச் செல்வம் தான் நம் குறிக்கோளை அடைய உள்ள அரிய சாதனம். அறிவுதான் நமது உண்மையான நண்பன். ஆற்றல்தான் நமது பரம்பரை மூலதனம் என்பதை மறவாதே.”

இவை போன்ற என் தந்தையின் கடிதங்களை இங்கு எழுதுவதன் மூலமாக, அவரின் உள்ளத்தை வெளிப் -படுத்தவும்,என்னால் சொல்ல இயலாததை அவரின் எழுத்துக்கள் மூலமாகச் சொல்லவும், அதன் மூலமாக அவருக்கும், அவரது எழுத்திற்கும் உள்ள தொடர்பை உறுதிப்படுத்தவும் நினைக்கிறேன்.

என் தந்தை, பத்துப் பெண் குழந்தைகளின் மூத்த குடிமகன்! உழைத்து வாழ நிலமோ, குந்தி வாழ குடிலோ அற்ற விவசாயக் குடும்பம். இதில் தமிழின் மீது தணியாத தாகம் ! அதனால், அதன் பால் விளைந்த முயற்சிக்கும், உழைப்பிற்கும் முடிவுண்டா?

நீர் இறைத்துக் கொண்டிருந்த தாத்தா,
புத்தகத்தில் ஆழ்ந்திருந்த அப்பா !
பாத்தி நிறைந்து உடைப்பெடுத்து ஓடிய தண்ணீர்
முதுகை ஒரு களிமண் கட்டி கடுமையாகத் தாக்க

ஆ... வெனத் திரும்பியவர், மண்வெட்டியைத் தூக்கி எறிந்து விட்டுச் சொன்னார்: “இனி இந்த நிலத்தில் நான் கால் வைக்க மாட்டேன்” என்று. கோவைக்கு வந்தார். தையற்கலையைக் கற்றுத் தேர்ந்தார். சால்அநுசூர், கண்டியூர், சீலியூர் போன்ற கிராமங்களில் தங்கி, துணிகளைத் தைத்துக் கொண்டே இளைஞர்களுக்கு மாலையில் கல்வி கற்றுத் தந்தார்.

பிடிவாதம் அவரது பிறப்புரிமை ! மிகச்சிறு வயதில் ஒரு தவறான வார்த்தையைக் கூற, பிரம்பால் உடம்பை ரணமாக்கிய போதும், அதையே திரும்பச் சொல்ல, சினம் கொண்ட தாத்தா, இடுப்பில் கயிற்றைக் கட்டி கிணற்றில் இறக்கிய போதும், நீரைத் தொட்ட பிறகும் கூட, அந்த வார்த்தைகளையே திரும்பத் திரும்பச் சொன்னதாகப் பாட்டி சொல்லக் கேட்டிருக்கிறேன்.

" ஒரு தத்துவ ஞானி ரோஜாவைப் பற்றி நினைக்க மட்டுமே செய்வான். ஒரு கவிஞன் ரோஜாவை முழுமையாக உணர்வான். நீ தேர்ந்தெடுத்தால் ஒரு கவிஞனைத் தேர்ந்தெடு! தத்துவ ஞானியைக் காட்டிலும் அவனே உண்மையைத் தொடக் கூடியவன்" என்கிறார் ஓஷோ.

ஆனால் அந்த உண்மையோடு வாழ்வது மரணத்தோடு வாழ்வது போல என்பதை அவர் அறிய மாட்டாரா என்ன?

1945-46 ல் வரதராஜபுரம் என்ற இடத்தில் ஒரு மாட்டுக் கொட்டகை, குறுக்கே சில தடுக்குகள், அதுதான் எங்கள் குடியிருப்பு ! சுனாமியைப் போல, கொத்துக் கொத்தாய் அள்ளிக் கொண்டு செல்லும் காலரா நோய் பரவியிருந்த நேரம் அது.

பால் ஒன்றே எங்கள் வாழ்க்கையின் ஆதாரம். ஒரு நாள் பால் கறந்த பாத்திரத்தில் சிறிதே நீர் தெளித்து பாலில் ஊற்றியதைப் பார்த்த அப்பா, அதை உதைத்த உதையில் குடிசைக்கு அன்று பாலாபிஷேகம்! தான் 'ஒரு கவிஞனுக்கு மனைவியாகிப் பாலிலே நீர் கலக்கும் பாதகத்தைச் செய்கிறாயே, இந்த பாவத்தை எங்குச் சென்று தீர்ப்பது?' என்ற அப்பாவின் கத்தலில் அம்மா விக்கித்து வெருண்டு போய் நின்றாள். வெள்ளமாகக் குடிசையில் பரவிய பாலைப் பார்த்து மனம் வெதும்பினாள். அது அவளின் ஓயாத உழைப்பு ! எங்களின் உணவும் கூட ! ஆனால் என்ன செய்வது?

எங்கள் குடியிருப்புக்கருகில் தோட்ட வேலை செய்து கொண்டிருந்த தம்பதிகளைக் காலரா தொற்றியது. அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட, பாதையிலிருந்த அவர்களை அப்பா

அழைத்து வரச்செய்து, எங்கள் 'சுவர்க்கத்தில்' தங்க வைத்தார். ஆனால் பரிதாபம், ஒருவர் பின் ஒருவராக விடைபெற்றுக் கொள்ள, சங்கத்து இளைஞர்கள், தொட்டில் கட்டி எடுத்துச் சென்று அவர்களை அடக்கம் செய்தனர். அது அம்மாவையும் விட்டு வைக்கவில்லை. ஆயினும் தர்மமோ, தரித்திரமோ, அவரை அன்று காப்பாற்றிவிட்டது. ஆனால்–

நாங்கள் அந்தத் தோட்டத்திலிருந்துதான் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தோம். இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, தண்ணீர் மறுக்கப்பட்டது. வேறு வழியின்றி மாடுகளை நண்பர்களுக்கு கொடுத்து விட்டு, அந்த இடத்தைக் காலி செய்தோம். மீண்டும் வாழ்க்கை கேள்விக் குறியானது.

மனிதாபிமான உதவிகளே, மக்களுக்கு எதிராகத் தோன்றி –னால், அதன் விளைவுகளை அனுபவிக்கும் போது, வி.ஸ. காண்டேகர் போன்றோரை நினைவு கூறி ஆறுதல் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. " இவ்வுலகில் மனிதத்தன்மைக்கும் சுகத்துக்கும் சம்பந்தமே இல்லை. சுகமாக இருக்க வேண்டுபவர் புலியைப் போல் மற்றவர் ரத்தத்தைக் குடிப்பதையே ஆனந்தமாகக் கருத வேண்டும். நியாயம், தியாகம், நாணயம், நம்பிக்கை, மனிதத் தன்மை ஆகிய சொற்களை எவனால் மறக்க முடியாதோ, அம் மனிதன் இந்த உலகில் சுகம் அனுபவிக்கத் தகுதியானவன் அல்லன்" என்ற உண்மைதான் அது !

நண்பர்களே ! இது முன்னுரையா? அல்லது சுயசரிதமா? என அலுத்துக் கொள்ளாதீர்கள். இது ஒரு குயிலின் கீதமல்ல. அடிபட்ட மானின் தீனக் குரல். திருமண வீட்டில் மங்கல இசையை ரசிக்கும் நம்மால், மரணம் நிகழ்ந்த வீட்டின் அவலக் குரலைக் கேட்பது கடினமே.

" எனதருமைக் குழந்தாய் ! நீ என்றும், எந்த நிலையிலும், மல்லிகை மலராகவே இரு. உன்னிலிருந்து கமழ்வது நறுமணமாகவே இருக்கட்டும். பிறரைப் பற்றி வருந்தாதே. மற்றவர்களும் மல்லிகையாகவே இருக்க வேண்டும் என

எதிர்பார்க்காதே. உன் கடமையை மௌனமாகச் செய். ஆனந்தம் அன்பில்தான் உள்ளது என்பதை அறிந்து கொள்" , என்பது அப்பாவின் வாக்கு.

இன்று எனக்கு எல்லாச் சௌகர்யங்களும் உள்ளன. இல்லை என்று சொல்வதற்கு என் தந்தையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனால், அவரின் பத்துக்கும் மேற்பட்ட காவியங்கள் இதயத்தில் சுமையாக அமர்ந்து கொண்டு,"நீ சுகமா? நான் இங்கு சுகமில்லையே" என்று நையாண்டி செய்வதைத் தவிர.

கெம்பனூரிலிருந்த லிங்கையா என்பவர் மிகச் சிறந்த காந்தியவாதி. என் தந்தையின் மிகச் சிறந்த பக்தரும் கூட . இதோ நான் இருக்கிறேன், என அபயக்குரல் கொடுத்து அழைத்துச் சென்றார். தம் ஊரில் தந்தைக்கு ஒரு நல்ல பள்ளியை உருவாக்கி, எங்களைக் குடியமர்த்தினார். அம்மாவின் முகத்தில் சற்றே மலர்ச்சி! ஆனால் தொடர்ந்து வரும் விதியின் சிரிப்பை அவர் அப்போது உணர்ந்தாரில்லை.

"குழந்தாய்! என் பழைய செருப்புகளுக்கு என் மேல் அளவு கடந்த கோபமும், வெறுப்பும் இருப்பதை அறியாமல் தொடர்ந்து அதைத் துன்புறுத்த, அதுசமயம் பார்த்து என்மேல் பலமாக வஞ்சம் தீர்த்துக் கொண்டது. வலதுகால் பெருவிரல் ரணமாகிவிட்டது," என்றார்.

"அப்பா! செருப்பு மட்டுமா உங்களை வஞ்சித்தது? வஞ்சித்தது வாழ்க்கையையே அல்லவா?" எனக் கேட்கத் தோன்றியது.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண், கணவரிடம் கருத்து வேற்றுமை கொண்டு தாயின் வீட்டிலிருந்தாள். அவர்கள் வீட்டில்தான் நாங்கள் குடியிருந்தோம். கணவன் பலமுறை அழைத்தும், மாமியார் மனைவியை அனுப்ப மறுக்க, சினம் கொண்ட அவன் மாமியாரைக் கத்தியால் குத்திவிட, ஐயோ என்ற அலறல் கேட்டு ஓடிவந்த அம்மா ,அவளைத் தாங்கிப் பிடித்ததும், உயிர் என்னவோ ஓடிப்போய் விட்டது.

எங்களுக்குப் பிடித்தது சனி, அவனுடைய மனைவியும்,இரண்டு குழந்தைகளும் அனாதையாகி விடுவர், "சாட்சி சொல்லாதே" என்று சிலரும், அவனைத் தூக்கு மேடையில் ஏற்றியே ஆகவேண்டும், "சாட்சி சொல்" , என்று சிலரும் அம்மாவைப் பந்தாடினர்!

" நீங்கள் ஒரு கௌரவமிக்க எழுத்தாளரின் மனைவி. எதிர்க்கட்சி வக்கீல் கேட்கும் கேள்விகளைத் தாங்க மாட்டீர்கள்" என்ற அறிவுரை வேறு வழங்கப்பட்டது. யாருக்காகப் பேசுவது? இரவோடு இரவாக கொலையாளிகளைப் போல ஊரை விட்டு ஓடி வந்தோம்.

கோர்ட்டில் அம்மா சொன்னார். "நான் சரியாகக் கொலையாளியைக் கவனிக்க வில்லை", என்று! நன்மை பயக்குமானால் பொய் சொல் என்ற வள்ளுவர் வாக்கின்படி அவன் விடுதலையாகி மனைவி மக்களோடு சுகமாகக் குடித்தனம் நடத்துகிறான். ஆனால் எங்களின் கதி !

மீண்டும் எந்த ஊர், எந்த நாடு என்ற தேடல். சாஸ்திர சம்பிரதாயமற்று, மலர்மாலைகள் இன்றிக் கதர் மாலைகளோடு சீர்திருத்தத் திருமணம், என் சகோதரிக்கு மிகச் சிக்கனமாக நடந்தேறியது. ஒரு பெண்ணைக் கடைத்தேற்றி விட்டோம் என்று என் அன்னை பெருமூச்சு விட, அந்தக் காற்றையும் அபகரிக்கக் காலன் காத்திருந்தான். அங்குச் சுற்றி இங்குச் சுற்றி சந்தேகவுண்டன்பாளையம் என்ற கிராமத்தில் அப்பா அடைக்கலமானார்.

எவ்வளவு அழகான கிராமம் அது ! நொய்யல் நதியின் தெளிந்த நீரும், கரையில் அடர்ந்த மாமரங்களும், தென்னை, பாக்கு, வாழை, மஞ்சள் என்று எங்கு காணினும் பச்சைப் பசேல் என்ற பசுமை.

சம்மந்தக் கவுண்டர் என்ற பெரியதனக்காரர் வீட்டிலிருந்து அப்பாவுக்கு உணவு வந்தது வகை வகையான பதார்த்தங்களோடு. சில நாட்களில் என்னையும் அப்பா அங்கு அழைத்துச் சென்றார். பதினைந்து குழந்தைகள். முப்பது ரூபாய் மாதவருமானம். நான் போய் ஒரு வாரம் போல இருக்கும். அந்த வீட்டுப் பெண்ணும் என்னோடு படித்துக் கொண்டிருந்தாள். அவளோடு அவர்கள்

வீட்டுக்குச் சென்றேன். அவர்கள் அன்றைய உணவை என்னிடம் கொடுத்து, "இனிமேல் நீயே வந்து சாப்பாடு வாங்கிக் கொண்டு போய் விடு " என்று சொல்ல, மறுநாள் அப்பா என்னை அங்கு அனுப்பவில்லை. வெறும் சோறும், மோரும் எங்களைப் பார்த்துப் பல்லிளித்தது. தன்மானமோ, சுயமரியாதையோ அப்பாவின் சொத்தானபோதும், சில நாட்கள் கிடைத்த உணவின் சுவை என் நாக்கில் ஊர்ந்து கொண்டிருந்த தென்னவோ நிஜம்.

ஏழு மணியளவில், லாந்தர் வெளிச்சத்தில் நானும் அப்பாவும் மெதுவாக நடப்போம், கூப்பிடு தூரத்தில் உள்ள தோட்டத்திற்கு. இரண்டு புறமும் அடர்ந்த வேலி. பாதையில் சில சமயம் சுருண்டு கிடக்கும் பாம்புகள் ! இரவு நேரம் இளைஞர்களுக்குப் பாடம் நடத்துவார் அப்பா. ஏனெனில் பகலில் அவர்கள் நிலத்தில் உழைப்பவர்கள்.

நொய்யல் நதியில் குளிக்கும் சுகம் ! அங்கு விளையும் அரையணா அரைக்கீரை தரும் சுவை ! புறநானூறு, இராமாயணம், நளவெண்பா போன்ற பாடல்களின் நயம் எனச் சில மாதங்கள் இனிமையாகக் கழிய, அம்மாவைக் காசநோய் தொற்றியது.

அம்மா எவ்வளவு அழகானவள், எளிமையானவள், பொன் போன்றவள்! பொறுமையே அவளின் அணிகலன். வேறு அணிகலன் இல்லை என்பதால் அதையே அணிந்து கொண்டாள் போலும்.

இப்போதும் கூட, காலையும் மாலையும் தன் குஞ்சுகளை வரிசையாக அழைத்துச் செல்லும் தாய் மயிலைப் பார்க்கும் போது, தாயின் அன்பும், பாசமும், கடமையும் நினைவுக்கு வரும். எனக்கு அவை ஏதும் கிடைக்கவில்லை, என்றாலும் அன்னை எங்களை விட்டுச் செல்ல, தேவையற்றுப் பிறந்த நானும் ஒரு காரணமோ? நானும் ஒரு சுமையோ, என எண்ணுவதுண்டு.

"குழந்தாய்! இம்மண்ணுலகில் இறக்கப் பிறந்தவர்களாகிய நாம், இறப்பதற்கு ஏன் பயப்படவேண்டும், என்று எனக்கு விளங்கவில்லை. இறப்பதற்குப் பயப்படக் கூடியவர்கள் உலகில்

வாழ்வது எப்படி? நான் என்ன சொல்கிறேனென்றால், இருக்கும் வரை கடமையாற்ற வேண்டும். இதில் நாம் தவறிவிடக்கூடாது. நோயாளியான அன்னைக்கு நீ எந்த விதத்திலும் மனக்குறை தோன்றும்படி நடந்து கொள்ளக்கூடாது. அவளது அமைதியையும் நம்பிக்கையையும் பாதுகாப்பது நமது கடமையாகும்", என்று அப்பா கூறிய போதிலும் மரணம் என்னவோ நிகழவே செய்தது.

சீன ஞானி சொன்னதுபோல, பிறப்பதற்கு முன் எங்கேயிருந்தாளோ அங்கே சென்று விட்டாள். வாழ்வின் நியதியும் அதுவே. இலையுதிர் காலம், வசந்த காலம் என்ற இயற்கையின் மாற்றமே மனிதர்களின் மாற்றமும். இதில் துக்கப்பட என்ன இருக்கிறது?

வாழ்வு
அது ஒரு அழகான மணம் பரப்பும் மலர் !
ஒருநாள் காலையில் மலர்ந்தது
கொஞ்சம் மகிழ்ந்தது – பிறகு
மெல்ல மெல்ல வாடியது
காற்று வீசியது
மலர் உதிர்ந்தது

வாழ்க்கை என்பதும் அம்மலர் போன்றதே.

அம்மலர் தான் வாழும் காலம் வரை
தன் நறுமணத்தைப் பரப்பியது
காற்று மரணத்தைக் கொடுத்தபோது
களிப்போடு ஏற்றுக் கொண்டது
இது தான் வாழ்கை
இது தான் மரணம். பின்
அழுது புலம்புவது எதற்காக?

என்கிறது ஒருக் கன்னடக்கவிதை.

என் தாயும் அவ்வாறே வாழ்ந்தாள் மணம் பரப்பி மறைந்தாள்.

"என் செல்வமே!

"செய், அல்லது செத்து மடி" என்றார் அண்ணல் காந்தி.

அவ்வண்ணமே வாழ்ந்தும் காட்டினார். அவரது காலத்தவராகிய நாம், அவரது கொள்கைகளைக் கடைப்பிடிக்காது வாழ்ந்தோமே -யானால் நம்மை யாரோடு ஒப்பிடுவது? கொலைகாரன் கோட்சேவோடு ஒப்பிட்டாலும் சரியாக ஒப்பிடுவதாகாது. ஏனெனில், அவரது கொள்கைகளைக் கொன்று வாழ்ந்த நம்மைக் காட்டிலும் கோட்சே ஒரு காலத்தில் உயர்வாக மதிக்கப்பட்டு விடலாம்! " என கொள்கைப் பிடிப்புள்ள ஒரு கவிஞன் தன்னை ஒரு கொலைகாரனோடு கூட ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள முடியும் போலும்.

" நான் ஒரு கவிஞன் - அதனால்
நான் ஓர் அந்நியன் "

என்றார் கிப்ரான்.

'இலட்சியத்திற்காக உயிர் கொடு-
மண்ணுக்காக அல்ல'
என்றார் ஒரு மராட்டிய கவி.

தான் பிறந்த நாட்டில் அந்நியனாகி, இலட்சியத்திற்காகவே உயிர் கொடுத்த என் தந்தை......... வயிறு நிறையாத போதும், மனம் விரும்பி நேசித்த காதலியைப் போல், தமிழை- தமிழ்நாட்டை - நெகிழ்ந்து, நிறைந்து அணைத்துக் கொண்ட என் தந்தை-

இறைவா ! எனக்கு என் தந்தை வேண்டும். அவரிடமிருந்த வறுமை வேண்டும். அது ஒரு மிகச் சிறந்த பள்ளி. அங்குத்தான் அற்புதமான பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும். எழுத்தாளர்களுக்கே வறுமைதான் மூலதனம். அதிலிருந்து பெருகும் ஜீவநதியே எழுத்தின் உயிர்நாடி. அந்த அனுபவமே அவர்கள் பெற்றெடுக்கும் குழந்தை. அதன் அழகும், அறிவும், ஆழமும் வறுமை கொடுத்த நன்கொடையே.

நான் ஒரு முட்டாள் ! அருமையான தந்தையைப் பெற்றேன். அவர் இதயத்தோடு உறவாடும் வாய்ப்பைத் தவற விட்டேன். அதன் சத்துக்களை, அளவு கடந்த ஆற்றலை, துணிவை, அறிவைப் பெறும்

பேற்றை இழந்தேன். அவரின் எதையும் எதிர்கொள்ளும் இயல்பும், கடுமையும் என்னை அச்சமுறச் செய்தது. அன்று விலையுயர்ந்த வைரங்களைத் தவற விட்டுவிட்டு இன்று பாமரப் பெண்ணாக அவரின் புதையல்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

"தண்டவாளத்தை விட்டு இறங்கும் இரயில் வண்டி தரையில் ஓடாது" . வாழ்வுக்கும் சரியான பாதை உண்டு. அந்தப் பாதையை விட்டு நாம் விலகிச் சென்றால் பயணம் தடைபட்டு விடும். மனிதன் ஆறறிவு என்பதற்கு ஏற்ப வரையறுக்கப்பட்ட ஒழுக்கங்களுக்கு இணங்க வாழ்தல் வேண்டும். அதுவே மனிதன் என்ற பெயருக்குக்குரியதாகும்" .

என்ற இம்மாதிரியான தந்தையின் எழுத்துக்களால் வயிறு என்னவோ நிரம்புவதில்லை. ஏழைகள் உணவைத் தேடுவதும், செல்வந்தர்கள் பசியைத் தேடுவதும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

அம்மாவின் மறைவிற்குப் பிறகு, வயிற்றுப்போர் அதிகரித்து விட்ட நிலையில் அத்தையின் முணுமுணுப்போடு வாங்கி வந்த அரைப்படி ரவையையும், உப்பிட்டு, கஞ்சி வைத்துக் குடித்து முடித்தாயிற்று.

என்னை அப்பா அழைத்தார். வந்தேன்.. எங்கெங்கோ கடன்பட்டு, துயர்பட்டு, எப்படி எப்படியோ, யார் யாரின் மூலமாகவோ அசுர முயற்சியோடு அச்சாகி வந்த கவிதைத் தொகுப்பு அது. பிரசவ வலிக்குப்பின் குழந்தையின் முகம் பார்க்கும் தாயைப் போன்ற மகிழ்ச்சியும், மலர்ச்சியும் தந்தது அப்பாவிற்கு.

புத்தகங்கள் விற்பனையானால்,
வறுமையின் பிடியிலிருந்து சற்றே விடுதலை
என்ற அவருடைய நம்பிக்கை,
கவிதைகள் மக்களைப் பெரிதும்
கவர்ந்து விடும் என்ற அவரின் கனவுகள்,
புரட்சிகரமான கருத்துக்கள் உள்ளதால், சிலரின்

மனமாற்றத்திற்கு உதவும் என்ற அவருடைய எதிர்பார்ப்பு, அனைத்தும் புதைந்து போய் விட்டதைக் காண நான் வந்தேன்.

தராசுத் தட்டோடு பழைய பேப்பர்காரன்
குவிந்து கிடந்த புத்தகக்குவியல் கிழிக்கப்பட்டு
கிழிப்பதற்காகவே நான் அழைக்கப்பட்டு
திகைப்பும், கலக்கமும் கண்ணீராய் வர

அப்பா சிரித்தார் ! "எதற்காக அம்மா நீ அழவேண்டும் ? ஒரு காசு செலவில்லாமல் நம் கவிதைகளுக்கு விமர்சனமும், விளம்பரமும் கிடைக்கப் போகிறது. கடையில் சுண்டலோ, கடலையோ வாங்கிக் கொறிப்பவன் சும்மா கொறிப்பானா? நம் கவிதைகளைப் படித்துச் சுவைத்துக் கொண்டல்லவா கொறிப்பான்? ஆகா! என்ன அருமையான கவிதை எனப் பாராட்ட மாட்டானா? அடுத்து வரும் கவிதைத் தொகுப்பு சக்கை போடு போட்டு விற்பனையாகப் போகிறது பார். நீ அட்டைப் படங்களை கிழித்து கொடு" என்றவர் கிலோ ஆறணாவிற்கு அவைகளை விற்ற கொடுமையைக் கண்ணீரோடு காண வேண்டியதாயிற்று.

உண்மையுள்ளவர்களுக்குக் கவலைகள் இல்லை.
அறிவிற் சிறந்தவர்க்குத் தயக்கமில்லை.
உள்ளத்துணிவு உள்ளவர்க்கு அகத்தில் அச்சம் இருக்க
இடமே இல்லை, என்ற பழமொழி இவர்களைப்போன்றவர்
-களுக்காகத்தான் கூறப்பட்டதோ?

தாய் தந்தையோடு கூடிய அட்டைப் படங்கள் திகு திகு வென்று மனதைப் போலவே எரிந்து சாம்பலாயிற்று. நெஞ்சம் கனக்க என் மூச்சை இழுத்து உள் வாங்கிக் கொள்கிறேன். எதிரே இருள் பரவிக் கிடந்தது.

அடிமையாக மாட்டேன் - எவர்க்கும்
அடிமையாக மாட்டேன்.
கொடுமை கோடி செய்து என்னைக்
கொன்றுவிட்ட போதும்...

என நெஞ்சு நிமிர்த்திய கவிஞன், தேவைக்கு மேல் பிறந்த

எனக்காகவும், என் அண்ணாவுக்காகவும் வேலை தேடலானார்.

மூன்றாண்டுகளே படித்த அந்த மனிதருக்கு யார் தருவார் வேலை? 'நவஇந்தியா' என்ற நாளிதழில், நீண்ட காலமாகக் கவிதை எழுதிக் கொண்டிருந்தார். அங்கே அவருக்கு ப்ரூப் ரீடர் வேலை தரப்பட்டது.

சிங்காநல்லூரிலிருந்து காலை ஏழு மணிக்குப் புறப்படுவார். பகல் 12 மணிக்கு வருவார். உணவு என்ற பெயரில் எதாவது உண்டுவிட்டபின் மீண்டும் நடையைக் கட்டுவார். மாலை ஆறு மணிக்குத் திரும்புவார். ஆக, இருபது கிலோ மீட்டர் நடந்து பெற்ற வருமானம் மாதம் முப்பது ரூபாய். ஆயினும், அன்று கிடைத்த வேலைக்கு நன்றி கூறினாலும், தமிழகத்தைத் தவிர உலகில் வேறு எந்த மூலையிலும், ஒரு கவிஞனுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டிருக்க முடியாது என்றே நினைக்கிறேன். ஒருவேளை என் தந்தை என்பதால் எனக்கு ஏற்பட்ட கழிவிரக்கமோ, என்னவோ?

ஆனாலும் இது கதையல்ல நிஜம். அந்த நிஜங்கள், மீண்டும் ஒரு முறை எழுத்தாளனின் வாழ்வில் நிகழ்ந்து விடுமோ என்ற அச்சம்! அப்படி நிகழ்ந்தால், அதற்குத் தங்களைத் தயார் படுத்திக் கொள்ளச் செய்யும் எச்சரிக்கையும் கூட...

சரி, மீண்டும் நிஜத்திற்கு வருவோம்.

பற்றாக்குறை வருமானம். இரவு மூட்டைப் பூச்சிகளின் ஓயாத கடி, காலுக்குப் போதாத விரிப்பு ! இரவு கந்தல் துணிகளை நனைத்து லேசாக முறுக்கி அதன் மேல் தூவும் சாம்பல் என்று அதன் கடியிலிருந்து தப்பிக்க ஏக தடபுடல் தான். பிறகு மூட்டைபூச்சிக்கு ஒரு பாட்டு வேறு! வாழ்க்கையில் அனுபவித்த துன்பங்களின் நினைவுகளால், சுய பட்சாதாபத்தில் நெகிழ்ந்து போய் அனைவரையும் சபித்ததுண்டு. உண்மையை நேசிப்பவனுக்கு இத்தகைய சோதனையா என்று. ஆனால் உண்மையை நேசிப்பவனுக்கு மட்டும் தான் இத்தகைய சோதனை என அறிந்து கொண்ட போது......

ஒரு நாள் தந்தை படும் பாட்டைச் சகிக்க முடியாமல், நான்

கேட்டேன். " அப்பா ! நானும் வேலைக்குப் போகிறேனே", என்று. " வேலைக்கா ? நீயா ? எங்கே போவாய்?"

மூன்றாண்டு படித்த அப்பாவிற்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் சம்பளத்திற்கு வேலை கிடைத்த போது எனக்குக் கிடைக்காதா என்ன?

அப்பா என்னை ஏறிட்டார்.

" பக்கத்து வீட்டுப் பெண் போகிறாளே , அவளோடு போகிறேன்".

"அது தான் என்ன வேலைக்கு என்று கேட்கிறேன்".

" கட்டிட வேலைக்கு. சித்தாளாக"

என் தாயின் மரணமோ, வறுமையின் கொடுமையோ, எதிர்கொண்ட தோல்விகளோ, இருபது கிலோ மீட்டர் நடையோ, மூட்டைபூச்சிகளின் கடியோ, எதுவுமே அசைக்க முடியாத அவரின் இதயத்தை என் சொற்கள் நொறுக்கிப் பிழிந்திருக்க வேண்டும். அதன் கடினமான வலியின் வேதனையை அவரின் கண்களில் காண நேர்ந்தது.

அதன் பின்பு நூற்பாலையில் எனக்கு வேலை கிடைத்தது. ஆனாலும் அதிலும் ஒரு நாள் கரிநாளாக-

என் சகோதரியிடம் நான் சொன்னேன்." அக்கா இந்த நூலில் என் புடவையைத் தைத்து தா " என்று.

"இந்த நூல் ஏது ?"

"நூல் கண்டிலிருந்து சிக்கலான நூலை உருவி எடுப்போம். அப்போது வீணாகும் நூல் தான் இது. புடவையைத் தைக்கச் சிறிது நூலை விரலில் சுற்றிக் கொண்டு வந்தேன்."

என் தந்தையின் செவியில் இது விழுந்திருக்க வேண்டும்.

" இங்கே வா அம்மா! " என்றார்.

வயிற்றில் ஏதோ உருண்டது. கால்கள் பின்னின.

"என்ன சொன்னாய். வீணாகும் நூல் என்றா?"

தலை தானாக அசைந்தது.

" சரி தான் ! நீ செய்தது ரொம்பச் சரி, ஆனால் காலையில்

ஆபீசில் இந்த நூலைக் கொடுத்து விட்டு வேலை செய்."

அவரது பிடிவாதம் எனக்கு தெரியும். நான் நடுங்கினேன். அழுகை முட்டி மோதியது.

" ஏன் அழுகிறாய் வீணாகும் நூல் தானே? புடவை தைப்பதற்காக எடுத்துச் சென்றேன், என்று உண்மையைச் சொல்லி விடு அதனால் என்ன " ?

கடவுளே இரண்டு மீட்டர் நூலுக்காக இரண்டாயிரம் பேர் வேலை செய்யும் இடத்தில் திருடி விட்டேன் என்று நான் போய் நிற்பதா?

பீறிட்ட அழுகையோடு சொன்னேன். "என்னை வேலையை விட்டே நீக்கி விடுவார்கள் அப்பா ! "

"வேலை போனால் போகட்டும். நீ இந்த நூலை கொண்டு போய் கொடுத்து விட்டு வா !"

நான் அழுது கொண்டே, "நூலைக் கொடுத்து விட்டுத் திரும்பி உயிரோடு வீட்டுக்கு வரமாட்டேன்", என்றேன்.

" உயிரையே விடும்படியான தவறை நீ செய்திருக்கிறாய். அப்படித்தானே?"

" இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன் அப்பா " ! என்று நான் கதறினேன்.

அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. என் சகோதரியை அழைத்தார். "நூலை எடுத்த அந்தக் கையை அடுப்பில் வையம்மா, அது எரியட்டும்!" என்றார்!.

அக்காவின் தயவால் அதிலிலிருந்து நான் தப்பியபோதும்,

பல மணி நேரம் ஒற்றை காலில் நிற்கும் தண்டனை எனக்கு வழங்கப்பட்ட பிறகே, நீதி தேவதை திருப்தி உற்றாள் !

கவிஞன் ஒரு நெருப்பு... ! அவனோடு வாழ்வது நெருப்பில் வாழ்வது போலத்தான்.

அவரது நடைப்பயிற்சியும், வறுமையும் வீடு மாறியதாலும், இருபது ரூபாய் அவரது சம்பள உயர்வினாலும் விடை பெற்றன. புதிய வீட்டில் ஒரு கயிற்றுக் கட்டிலில் அவரின் கால்கள் அனாதையாக வெளியே நீண்டிருக்கும் ஆஜானுபாகுவான உடல் சற்று மெலிந்து விட்ட போதும், உயரம் என்னவோ குறைவதாக இல்லை. உட்கார்ந்து, உட்கார்ந்து குழி விழுந்த கட்டிலில் நாளிதழை இட்டு நிரப்புவார்.

என் தந்தை ஒரு மண்ணின் மைந்தர். மிகச் சிறந்த விவசாயியும் கூட! மண்வெட்டி அவரது உடலை உரமேற்றியிருந்தது. ஆதித்யனின் சூடு ஆரோக்கியத்தை முழுமையாக்கியிருந்தது. ஆஜானுபாகுவான உடலும், நல்ல உயரமும், சாட்டை போன்ற கரங்களும், செவ்வரியோடிய விழிகளுமாக .

அவர் இந்த அன்னை பூமியை நேசித்திருந்தால், அவரின் அயராத உழைப்பு எங்கள் அனைவரது பசியையும் போக்கியிருக்கும். தையல் இயந்திரத்தில் வேகமும், லாவகமுமாக இயங்கிய கைகள், தொடர்ந்து அதையே செய்திருந்தால் குறைந்த பட்சம் ' இல்லை' என்ற சொல்லே எங்கள் வாழ்வில் இல்லாமல் போயிருக்கும் !

அதுவும் வேண்டாம். கலை நயத்தோடு ரசனை சொட்டச் சொட்ட, எங்களை மயக்கிய கவிதைகள், பட்டி மன்றங்களிலோ, அரசியல் மேடைகளிலோ முழங்கியிருந்தால், புகழோடும், பொலிவோடும் கொடிகட்டிப் பறந்து கொண்டிருப்போம். ஆனால் ஐயகோ ! "பிழைக்கத் தெரியாதவன்தான் பேனாவைப் பிடிப்பான் ", என்று பேசும் இந்தச் சமுதாயம், அவரைப் பிழைக்க விடாமல் விரட்டியடித்ததே!

1959-ல் பத்திரிக்கையாளர் சட்டம் அமலுக்கு வந்தது. பூருப் ரீடரின் வேலைக்கு,ரூபாய் 150 என்ற இலக்கை அரசு நிர்ணயித்தது. ஆனால் அப்பாவுக்குப் படிப்பில்லை எனக் கூறிச்சம்பள உயர்வு மறுக்கப்பட்டது.நியாயமற்ற இம்முடிவால் இருநூற்று ஐம்பது ரூபாய் வருமானத்திற்கும் அப்பா முற்றுப்புள்ளி வைத்தார்.

எங்கள் இருவரின் திருமணம் முடிந்த கையோடு கன்னட மாநிலத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். நான்காண்டுகள் வனவாசம் முடிந்து, கன்னட மொழியைக் கற்றுக் கொண்டு நலம் குறைந்த உடல் நிலையோடு வந்தவர், அண்ணாவோடு தங்கி எழுத்துப் பணியைத் தொடர்ந்தார்.

இலக்கியம் என்பது உயர்ந்த சிந்தனைகளின் உறைவிடம். அது மட்டுமல்ல, மக்களை உருவாக்கும் ஆற்றல் மிக்க ஒரு சக்தியும். அவர்களின் வழி காட்டியும் கூட . அதைச் சரியாக உருவாக்க வில்லை என்றால், நாட்டில் என்ன முன்னேற்றம் இருந்தாலும் அது பயனற்றதே என்பது பெரியோர் வாக்கு !

அப்பா தம் புதிய கவிதைத் தொகுப்பு ஒன்றைப் புத்தகமாக வெளியிட விரும்பினார். அதைக்கேட்டு நான் திடுக்கிட்டேன். பல கவிதைத் தொகுப்புகள் நினைவில் வந்து நெஞ்சை நெருடின. அதன் வலி கண்களை நனைத்தது. ஜீவ மரணப் போராட்டத்தோடு பதிப்பிடப்பட்ட பலப் புத்தகங்கள் அட்டைக்குக் காசில்லாமல் பதிப்பகத்திலேயே பதுங்கி விட்டதை நினைத்த போது ஏற்பட்ட வேதனை – மீண்டும் ஒரு கவிதை தொகுப்பா? என்று கேள்வி எழுப்ப முகத்தை திருப்பிக் கண்ணீரைச் சுண்டி எறிந்தேன். தந்தையின் விழிகளோ எதிர்ப்பார்ப்போடு ஒளிர்ந்தன.

நான் இதைச் சகோதரியிடம் கூறியபோது "அதற்குப் பெயர்தான் கவிஞன் என்பது. தோல்வி மேல் தோல்வியைத் தழுவினாலும் அதனின்றும் பின் வாங்காமல் உறுதியோடு இருப்பதே அவரை நம்மிலிருந்து வேறுப்படுத்துவது ஆகும்" என்றார்.

ஒரு நாள் புத்தகம் போடும் அப்பாவின் விருப்பத்தைச் நிறைவேற்ற திரு. ஜி.கே. எஸ் அவர்கள் உதவியை நாடி அவர் வீட்டு முன் காத்திருந்தேன். மணி மேல் நிலைப்பள்ளி மேலாளர் அங்கு வந்து "என்ன?" என வினவினார். சொன்னேன்.

" புத்தகம் போடுவதற்கா ? இங்கு ஏராளமான புத்தகங்கள் ஏற்கனவே குவிந்து கிடக்கின்றன. என்னைக் கேட்காமல்

திரு. ஜி.கே.எஸ் அவர்கள் எதுவும் செய்ய மாட்டார். நீங்கள் போகலாம்" என விரட்டினார். என்றாலும் நான் என் முயற்சியைக் கைவிட வில்லை. என் வேண்டுகோள் திரு. ஜி.கே.எஸ் அவர்களிடம் சென்றடைந்த மறுநாளே அந்த மேலாளர் வெட்கமுறும்படியும் நான் வியப்படையும் படியும் செய்தி வந்தது. அப்பாவை ஆபீசில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளும்படி... நானோ... மகிழ்வின் உச்சியில்... ஏனெனில் ஏமாற்றங்களே வாழ்வு என்றான பிறகு முதன் முதலாகக் கிடைத்த வெற்றியல்லவா....ஓடினேன்... அப்பாவிடம்! ஒரே கல்லில் வீழ்த்திய மாம்பழத்தை ஆனந்தமாகச் சுவைக்கும் சிறுவனைப் போல...

" அப்பா உங்கள் புத்தகம் வெளி வந்து விட்டது போலத்தான்... நாளை நீங்கள் வந்து பணத்தைப் பெற்றுக் கொண்டதும், வேலையைத் தொடங்கி விடலாம்" என்றேன் உற்சாகமாக...

அவரோ மௌனமாக குறுக்கும் நெடுக்கும் நடக்கலானார்... சற்றுப் பொறுத்து, " என்னால் இந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது அம்மா" என்றாரே பார்க்கலாம்!

" என்ன ! என்னப்பா சொல்கிறீர்கள்? பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதா! " என்றேன் பதட்டத்தோடு...

"ஆம் அம்மா ! புத்தகத்துக்காகப் பணம் கொடுப்பது என்றால் அதை எழுதியவர் யார்? அந்தப் புத்தகம் மக்களுக்குப் பயன்படுவதற்காகவா? அல்லது வெறும் பணம் பண்ணுவதற் காகவா? என்றெல்லாம் ஏதும் அறியாமல் என்னையும் பார்க்காமல் கொடுக்கும் பணத்தை நான் எப்படியம்மா பெற்றுக் கொள்வது?"

அடக்கடவுளே ! கொடுப்பது என்பதே மறந்து போய்விட்ட கால கட்டத்தில், கொடுத்தும் இப்படி ஒரு இடையூறா? என்று என் விதியை நொந்தபடி, " அப்பா புத்தகம் வெளியிட உதவிட வேண்டும் என்று தானே கேட்டேன். கேட்டதும் உதவிய அந்தப் பெருந்தன்மையும் உயர்வும் இப்படி மறுக்கப்படுவதால், அர்த்தமற்றதாகி விடாதா? " என்றேன்.

" அம்மா ! நான் ஒரு கவிஞன் என்பதையே நீ மறந்து விடுகிறாயே! கேட்டது நீ என்றால் உன்னிடமே கொடுத்திருக்கலாமே!" என்றார்.

" உங்களிடமே அப்பணம் கொடுக்கப்பட வேண்டும். எதற்கு கேட்கப்பட்டதோ அதற்கே பயன்பட வேண்டும் என்று, அவர்கள் நினைத்திருக்கலாமல்லவா? அப்படி இல்லையென்றால் பணத்தை உடனே கொடுக்கச் சொன்னது எதற்காக ?" என்றேன்.

" உதவிய நோக்கம், உயர்ந்ததும் பாராட்டுக்குரியதும் தான் அம்மா! கவிஞன் என்ற நிலையில் அதை பெற்றுக் கொள்ள என் மனம் இடம் தரவில்லையே" என்றார் !

குன்றும், மலையும் பலபின் ஒழிய-

என்ற பாடல் சங்க காலப் புலவர்களுக்கு மட்டுமே சொந்தமில்லை, இன்றும் கொங்கு நாட்டில் -

காணாமல் கொடுக்க ஒரு வள்ளலும்-
காணாமல் பெற மறுக்கும் ஒரு கவிஞனும்-

இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதென்னவோ உண்மைதான்.

அது மட்டுமல்ல, ஒரு காலத்தில் வறுமையின் பிடியிலிருந்து விடுதலைபெற ஆலையில் பணியைக் கொடுத்ததன் மூலமாக எங்களை மீட்டு உதவிய உயர்ந்த உள்ளம் கொண்ட,திரு. ஜி.கே. எஸ் அவர்களுக்கு இந்நூலின் மூலமாக என் நன்றியைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1979-ல் கிடைத்த எண்பது ரூபாய் பென்ஷன் 1981-ல் அதிகரிக்கப்பட்டது! ஆசிரியரான என் அண்ணாவின்வருமானத் -தோடு பென்சன் தொகையைப் போட்டால், சில ரூபாய்கள் அவர்கள் நிர்ணயித்ததைக் காட்டிலும் அதிகமாக வருகிறது என்று அந்த பென்ஷன் தொகையும் மறுக்கப்பட்டது. ஆனால், ஒரே ஒரு பொய் - நான் தனியாகத்தான் இருக்கிறேன், என்று கூறியிருந்தால், அந்தப் பென்சனையாவது பெற்றிருக்கலாம். ஆனால்

நான் நொய்யலாற்றில் குளித்துத், திளைத்துக் காவியம் எழுதுகிறேன், என ஓரிரு மாதத்தில் மீண்டும் தன்னந்தனியாக அவர் சென்ற போது, அந்தப் பென்சன் மிகவும் உதவிகரமாக இருந்திருக்கும். ஆனால் அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த மனிதருக்கு அதுவும் வாய்க்கவில்லை. அரசு பணத்தைத் தின்னவும் கொஞ்சம் அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டுமே !

அவரைப் புற்று நோய் தாக்கியபோது, நான் பரிவோடு கேட்டேன், " ரொம்ப வலிக்கிறதா அப்பா !" என்று,

" நான் ஒரு கவிஞன் அம்மா! இந்த நோய் எனக்கு ஒரு பொருட்டல்ல! இதை எதிர்த்துப் போராடுவேன். வெற்றியும் பெறுவேன். ஆனால் நீ ஒரு சாதாரண மனிதனைக் கேட்பது போன்ற ஒரு கேள்வியை என்னைப் பார்த்து எப்படிக் கேட்கத் தோன்றியது ? நீயே என்னைப் புரிந்து கொள்ள வில்லை என்றால்,யார் என்னைப் புரிந்து கொள்வார்கள்?" என்ற இதயத்தைத் தொடும் அந்த குரல் -

சந்தேகவுண்டன்பாளையம் கருப்புசாமிக் கவுண்டர் அவர்களின் தோட்டத்து வீட்டுத் திண்ணை மீது தடுக்கு வைத்து மறைக்கப்பட்ட சிறிய அறை ஒன்று. அருகிலே ராசு, பழனிசாமி என்பவர்கள், அப்பா அங்குத் தங்கியிருந்த போது, அவருக்கு சிறுசிறு உதவிகள் செய்து கொடுத்தனர். அங்குத்தான் சில காவியங்களையும் எழுதினார். அவர் நொய்யலைக் காதலித்தார். தன் உடல் அதன் கரையில் உறங்க வேண்டும் என மிகவும் விரும்பினார். நொய்யலைப் பற்றிய நினைவுகளைக் கவிதை ~களாக்கினார்.

"இலக்கணத்தை என்னிடம் கற்றுக்கொள் !. உன்னிடம் ஆற்றலிருக்கிறது. அறிவிருக்கிறது. அதைச் சிறந்த முறையில் பயன்படுத்த, முறையான கல்வி இலக்கணம் அவசியம்" என வலியுறுத்தினார். ஆனால் அவர் அதைக் கற்பித்தபோது உணவும் உடையும்தான் என் முதல் தேவையாக இருந்தது. வயிறு காலியாகும் போது இலக்கணம் உணவாக முடியுமா என்ன?

அவர் தமிழில் விரும்பியது எல்லாம் தொன்மை இலக்கியங்களே! வள்ளுவம், புறநானூறு போன்றவை இரத்தத்தோடு மட்டுமல்ல அவரது உயிரோடும் கலந்து விட்டது எனலாம்.

கலீல் ஜிப்ரானை மிகவும் நேசித்தார். ஒவ்வோர் எழுத்தும் ஒரு வைரம் எனப் புகழ்ந்துரைத்தார். சரத்சந்தரர், வி.ஸ. காண்டேகர் போன்றவர்களின் இலக்கியங்களை விரும்பினார். ரஷ்ய நாவல்கள் அவரைப் பெரிதும் ஈர்த்தன. வே. மா. என்னும் இளைஞர், கவிஞர், இம் மாதிரியான இலக்கியங்களைக் கொடுத்து உதவினார். மூடப் பழக்க வழக்கங்கள் எப்போதும் அவருக்கும் பெரும் சினத்தை மூட்டியது. அது தவறு என்று சுட்டிக்காட்டி, விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த, தந்தை பெரியாரைப் போல மேடைகளில் அல்லாது தம் எழுத்துகளின் மூலம் அறிவுறுத்தப் பெரிதும் முயன்றார். தமக்குப் புற்றுநோய் எனத் தெரிந்து கொண்டதும், தான் அறிந்து கொண்டதை மக்களுக்கு ஆதாரத்தோடு விளக்க, மீண்டும் சந்தேகவுண்டன்பாளையம் என்ற கிராமத்திற்குச் செல்ல நேர்ந்தது. உதாரணமாக 1980 செப்டம்பர் மாதம், கஸ்தூரி என்ற கன்னட மொழிப் பத்திரிக்கையில், தான் படித்த செய்தி பற்றிக் கூறுகிறார்:

" கிருஷ்ணா ! நான் எத்தகைய பேரழகியாக இருந்தேன் தெரியுமா? எங்கள் காந்தார நாட்டுப்புரத்துச் சாரல்களில், குறை கூற இயலாத படிகம் போன்ற நீர் நிலைகளின் அருகில் நின்று கொண்டு என்னை நானே பார்த்துப் பிரமித்து விடுவேன். தோழிகள் என் அழகில் மயங்கி, என் எதிர்காலக் கனவுக் கதைகளையும் பின்னிக் காட்டுவார்கள். அந்தோ அங்கேயே முடிந்து போயிற்று என் பேரழகு. அதற்குப் பிறகு நான் என்னைப் பார்த்துக் கொள்ளவில்லை. இது விதிவசமன்று ! வீட்டுமனின் படை பலமாம் ! யுத்தம் வந்தால் மக்கள் வீணாக மடிய நேரிடுமே என்று, இரக்கம் மிகுதியால் என் தந்தை என்னை இக்குருடருக்குத் தாரை வார்த்துத் தர நேரிட்டது.

"பிறகு என்ன வேண்டியிருந்தது? அன்றே நானும் அஸ்தினாபுரியின் அரசியானேன். அரண்மனைத் தாசி ஒருத்தி அறிவுறுத்திய பிறகே, தனக்கு ஒரு மனைவி இருந்தது அவருக்குத்

தெரிந்ததாம். பிறகு நானும் குழந்தைகளைப் பெறத் தொடங்கினேன். ஒன்றுக்குப்பின் ஒன்றாக. அதே காலகட்டத்தில் அரண்மனைத் தாசிகளும் அரசனைக் கூடி, குழந்தைகளைப் பெற்றார்களாம். எல்லாம் சேர்த்து நூறு குழந்தைகள் என்கிறார்கள். யார் கண்டார்கள் இந்த குட்டிகளின் கணக்கை?

"ஆனால், என் உதிரத்தில் உதித்த குழந்தைகள் பதினான்கு. அதன்பின் ஒரேயொரு பெண் குழந்தை"

கன்னட பாரதக் கதை இவ்வாறிருக்க தமிழ் பாரதக் கதையில் நூறு தொட்டிகளில் எங்கிருந்து உதிரத்தைப் பெற்று நிரப்புவது? அது எப்படிக் குழந்தைகளாக உருப்பெறுவது? மகாபாரதம் புகாத வீடொன்று உண்டா? இதனை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டாமா? முக்கியத்துவம் உண்மைக்கு மட்டும் உரியது என்பது எல்லா நாட்டு மக்களுக்கும் பொதுவான அறமல்லவா?சைத்தான் அரசாளத் துவங்கினால் சத்தியம் தங்குமிடம் காணது தடுமாறும் என்பது தமிழ் வல்லுநர்கள் அறியாத ஒன்றா - என்ற இந்த மொழி பெயர்ப்பின் மூலம்அவருக்கு மூட நம்பிக்கையின் மேலிருக்கும் சினத்தைப் பார்த்திருப்பீர்கள். இம்மாதிரியான சில நூல்களை மொழி பெயர்த்து, நம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்பினார். புற்று நோய் என்று அறிந்த பிறகும் தன்னந்தனியாக அவர் மீண்டும் அந்தக் கிராமத்திற்குச் சென்று வேலையைத் தொடர்ந்தார்.

தொண்டையில் விழுங்க முடியாது. இளநீரும் குடிநீருமே அவரது உணவு. கருப்புசாமி அவர்களும், அவரது மைந்தர் ராசு, பழனிசாமி போன்றவர்களும் அவருக்கு உதவியாக இருந்தார்கள்.

கூப்பிடு தூரத்தில், அன்னம்மா என்ற பெண்மணி அப்பா கூறும் கன்னட மொழி பெயர்ப்பைத் தமிழில் எழுதிக் கொடுத்துப் பெரிதும் உதவினார். மதமாற்றம் ஏன் நிகழ்ந்தது? முன்பு ஆண்ட அரசர்களின் வாழ்வின் உண்மைகள் என்ன? என்பன பலவும் தமிழ் அறிஞர்களுக்கும், மக்களுக்கும் எடுத்துச் சொல்லியே ஆக வேண்டும், என்ற உறுதியோடும் வேட்கையோடும் அவர் அங்குத் தங்கினார்.

நோயின் கொடிய வலி -
பசியில் புரண்டு துடிக்கும் வயிறு
வலுவிழந்து தள்ளாடித் தடுமாறும் கால்கள் -

என ஒவ்வொரு நாளும் அவர் அந்தக் கூப்பிடு தூரத்தைக் கடக்க, எத்தனை முறை உட்கார வேண்டியிருந்தது! மீண்டும் எழுந்து நடக்க எவ்வளவு துன்பப்பட வேண்டியிருந்தது, என்பதை இன்றும் அங்கு உள்ளவர்களிடம் நீங்கள் சென்று வினவுவீர்களேயானால் அந்த உண்மை உங்களை நெக்குருக வைக்கும்.

தமிழ் மக்களின் நலனில் அவர்களின் விழிப்புணர்வில், அந்த மா... மனிதன் தன் உயிரையே துச்சமாக மதித்து, தன் எழுத்துப் பணியைத் தொடர்ந்தார். ஆனால் அந்த எழுத்துகளும் அவரைப் போலவே இன்றும் உறங்கிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையின் கசப்பை நான் யாரிடமும் சொல்ல?

ஒரு தேசத்தின் தலைவனாக இருப்பதைக் காட்டிலும், சத்தியத்திற்கு அடிமையாக இருப்பதையே மிகவும் விரும்புகிறேன், என்ற அந்தப் பொன் மொழிக்கேற்ப வாழ்ந்தார்.

“சகோதரி ! அப்பாவின் கையெழுத்துப் பிரதிகளைப் பத்திரமாகக் காப்பாற்றி வை ! அதுவே நீ இந்த நாட்டுக்குச் செய்யும் பேருதவியாகும்'' என்ற என் சகோதரனின் வார்த்தைகள்! அண்ணாவுக்கு ஆங்கில இலக்கியங்களில் நல்ல ஆர்வமிருந்தது போலவே தமிழிலும் பேச்சாற்றலில் சிறந்து விளங்கினார்.

மாணவர்களுக்குப் பெரியோர்களின் கருத்துக்களை வேடிக்கையாகச் சொல்லி விளக்குவதில் கை தேர்ந்தவர். அவரின் வகுப்பு என்றால் மாணவர்களுக்கு மிகவும் குதூகலமாக இருக்கும் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.

கோவையில், சி.ஏ.பாலன், எல்.ஜி.கீதானந்தம் அவர்களோடு ஜெயகாந்தன் அவர்களும் எங்கள் வீட்டுக்கு வருகை தந்திருந்தார்கள். பாரதிக்குப் பின் தேசப்பற்றோடு பாட ஒரு கவிஞன் இல்லை என்ற போது, என் தந்தையின் பாடல்களைக் கூறி அவரை வியப்படைய

வைத்ததாக அண்ணா கூறக் கேட்டிருக்கிறேன். இன்று அப்பாவின் கவிதைகளை எடுத்துக் கூற அண்ணாவும் இல்லை என்பது ஒரு பேரிழப்பே.

வாழ்வாங்கு வாழ்ந்த என் தந்தையின் உழைப்பு, விருப்பு, விடுதலை வேட்கை அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராய் வீணாகி விடுமோ என நினைத்து நான் துயருற்றேன். ஏறக்குறைய அரை நூற்றாண்டு கடந்துவிட்ட நிலையில் நம்பிக்கை இழந்து நின்ற என்னை புவியரசு எனும் கவிஞர், சகோதரராக நின்று நீர் வார்த்து உயிர்ப்பித்தார். நன்றி எனும் ஒரு ஒற்றைச் சொல் அதை நிறைவு செய்து விடாது. என் ஆன்மாவின் குரலாக அது என்றும் ஒலிக்கும்.

" குழந்தாய் !

என் அனுபவங்கள் என்னை அப்போதைக்கு அப்போது செலுத்திக் கொண்டு செல்வதில் இருந்து நான் எப்படியும் ஒதுங்கி நிற்க முடியாது. எனக்காகவும் சரி, மற்றவர்களுக்காகவும் சரி இவற்றைப் புறக்கணித்து விட்டு, உயிர் வாழ்வதில் பயன் இருப்பதாக என்னால் நினைக்க முடியவில்லை. என் மனதில் அச்சம் எப்போதேனும் தோன்றுகிறது என்றால் என் கொள்கைகளைப் புறக்கணிக்க எண்ணும் நிர்ப்பந்தம் ஏற்படும்போது மட்டுமே" எனப் பேசும் தந்தை.

'தமிழ் வளராதா? தமிழ் உணர்வை மக்கள் பெற மாட்டார்களா? தமிழ் உணர்வு மக்களை ஒன்றுபடுத்தாதா? என்ற ஆழமான ஆதங்கமான உணர்வு பூர்வமான, இக்குரல், சென்ற முதல்வராயிருந்த கலைஞரின் குரலே! சிங்காநல்லூரில் நடைபயின்று, அவர் திரைக்கதை எழுதிய, அந்தக் காலகட்டத்தில் எங்கள் குடியிருப்பும் அங்குதான் இருந்தது. ஆனால் இன்று நான் கலைஞரைச் சந்திக்க இயலுமா? கொடிசியாவில் நிகழ்ந்த நிகழ்ச்சியில் என் தந்தையின் இரண்டு கவிதைத் தொகுப்புகள் அவரிடம் சேர்க்கும்படித் தரப்பட்டன. ஆனால் ...?

கலைஞரின் சமகாலத்தில் வாழ்ந்த ஒரு கவிஞரைப் பற்றி, தமிழைச் செம்மொழியாக்கப் பாடுபடும் இந்த நேரத்தில் இக் கவிஞனைக் கண்டு கொண்டு, அவரின் கவிதைகளைப் பற்றிய தம்

ஆய்வை வெளிப்படுத்தினால், அந்நன்றியைச் சொல்ல வார்த்தைகள் இல்லை.

ஒரு சாதாரண மனிதன் அல்லது ஒரு கவிஞன் வறுமையால் வாடலாம். அல்லது சாகலாம். ஆனால் அவனின் இலக்கியங்கள் செத்து விடக்கூடாது. ஏனெனில் அவன் அதற்காகக் கொடுக்கும் விலை, விலைமதிப்பற்றது என்பதைக் கலைஞரைப் போன்று தமிழைக் கரைத்துக் குடித்து எழுதி, திளைத்து உணர்ந்து மகிழ்ந்தவர்கள் அறியாததா? அவர்களே உண்மைக் கவிஞர்களைக் கண்டு கொள்ளவில்லையென்றால், தமிழை யார் கண்டு கொள்வார்கள்? கவிதைகளை அனைவரும் படித்துச் சொல்லட்டும் என் தந்தையின் நூல்கள் நாட்டிற்கு பயன்படுமா,இல்லையா என்று.

உண்மையின் உயர்வைப் பாமரர்கள் அறியாது இருப்பது இயல்பு. ஆனால் இலக்கிய வாதிகளும் அதை அலட்சியப்படுத்தினால் சத்தியம் செத்துவிடாதா? நாடு நாறிவிடாதா? பிறகு எங்கே எதைச் செம்மைப்படுத்துவது?

குஜராத்தில் மீன் பிடிப்பவன் ஒருவன் உப்பிட்டுக் காய வைத்த மீன் துண்டுகளைக் காக்கைகள் எடுத்துச் செல்லாமல் இருக்க, சில மீன்களை விஷம் தோய்த்து வீசினானாம். பொத், பொத்தென்று பல காக்கைகள் இறந்து விழுந்தன. மீன் பிடிப்பவனுக்குச் செம மகிழ்ச்சி. எப்போதும் போல் வலையோடு மீன் பிடிக்கச் சென்றான். ஆனால் எல்லாக் காகங்களும் ஒன்று சேர்ந்து அவனைச் சல்லடைக் கண்களாகக் கொத்திக் குதறிவிட்டன! அன்று மட்டுமல்ல, எப்போது வெளியே வந்தாலும் அவனை விரட்டத் தொடங்கின. அவனும் பிறகு நல்ல மீன்களைப் போட்டுப் பார்த்தான். அவற்றை அவை திரும்பியும் பார்க்கவில்லை.காகங்கள் தன் இனத்தை அழிக்க முயன்றவனை அழிக்கத் தொடங்கிவிட்டன - என்பன தினமலரில் நான் படித்த வரிகள்.

ஐந்தறிவு படைத்த காக்கைக் கூட்டத்தின் முன், மனித இனம் தோற்றுப் போவதா? அதன் ஒற்றுமையின் முன் நாம் பின்னடைவதா? இல்லை இல்லை ! நண்பர்களே, நாம் வெற்றிப்

பெற்றாக வேண்டும். இந்தப் பாமரப் பெண் சிறுமி இல்லை. அனுபவத்தின் மொத்த உருவம் ! மரணத்தை அழைக்கும் வயதில் மலர்ந்த இதயம் ! அது உங்களை வாழ்த்துகிறது. நாமும் நம் இனத்தை அழித்துக் கொண்டிருக்கும் அனைத்தையும் நம் எழுத்தின் மூலமாக, அந்த நிகரில்லா ஆயுதத்தின் மூலமாக அழிக்க முயல்வோம். நம் எழுத்துகள் உண்மையை நோக்கிச் செல்லட்டும் !

நன்மையும் தீமையும் கலந்தவனே மனிதன் என்ற போதிலும், நம் பேனா முனையின் ஆழம் அவன் இதயத்தைச் சென்று சேரட்டும். நம் தொன்மையான தமிழகப் பெருமையும் புகழும் அவன் செவியை அறைந்து தாக்கட்டும். மனித நேயம் அவன் கண்களில் சுடர் ஒளியை பரப்பட்டும். உழைப்பை ஊக்கத்தோடு அவன் கரங்கள் தொடரட்டும். கால்கள் உறுதியோடு தன் காலச் சுவடுகளைப் பதிக்கட்டும்.

மரணம் எடுத்துச்செல்லும் வரை ஒரு சிறு உதவியைக் கூட யாரிடமும் என் தந்தை பெற்றுக் கொள்ளவில்லை. மரணத்திற்கு முந்தைய நாள், மாடி அறையில் அவர் கீழே விழுந்த சப்தம் கேட்டு நாங்கள் ஓடினோம். முதுகை நிமிர்த்தி அமர வைத்த அந்த உதவி கூட அவருக்கு ஏற்புடையதாக இல்லை. அவராகவே கால்களை மடக்கினார். பேப்பர் கொண்டு வா என்று ஜாடை காட்டினார். உட்கார்ந்தவாறே பேப்பரைப் படித்தார். மூச்சை இழுத்து உள் வாங்கினார். மிகமிக மெதுவாக யாரையும் அனுமதிக்காமல் எழுந்தார். ஜாக்கிரதையாக நடந்து கட்டிலுக்குச் சென்று படுத்தார். மறுநாள் நிரந்தரமாக உறங்கி விட்டார்!

' சாவிலிருந்து என்னைச் சாகாமைக்கு அழைத்துச் செல் ; இருளிலிருந்து என்னை ஒளிக்கு அழைத்துச் செல்; நரகத்திலிருந்து என்னைச் சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்.'

அசத்திலிருந்து சத்துக்குச் செல்லவேண்டினும்,இருளிலிருந்து ஒளிக்கு செல்ல வேண்டினும், நம்மைப் பிறர் யாரும் அழைத்துச் செல்ல முடியாது. தட்டுத் தடுமாறிக் கொண்டேனும் அவற்றை நாடி நாமேதான் செல்ல வேண்டி உள்ளது.

அவரோடு இருந்த நாட்கள் மலரும் நினைவுகளா? இல்லை மரணத்தின் நிழல்களா, என யோசிக்கிறேன். முகவுரை எழுத முனைந்த நான் முடிவுரை எழுத மறந்தேன். காலம் என்னுள் ஏற்படுத்திய காயங்களைப் பசுமையாக வைத்துக் கொள்ளவே நான் விரும்புகிறேன். அது என் வாழ்வின் உன்னதமான பரிசு !

மக்கள் ' சுகம் ' என நினைக்கும் வாழ்க்கையை இன்று வாழ்ந்துக் கொண்டிருக்கும் நான், மீண்டும் பிறப்பதாயிருந்தால், இயற்கையிடத்தும், பஞ்ச பூதங்களிடத்தும், " இன்றுபோல் என்னை பலவீனமான பெண்ணாகப் படைக்காதே! என் தந்தையைப் போன்று எதையும் தாங்கும் எஃகு இதயத்தோடு படைத்துவிடு " என்றே வேண்டுவேன்.

ஆம் ! அந்த வலி மிகுந்த வலிய நோயால், இவரை ஒரு சிறு முக்கலோ, முனாங்கலோ, 'ஆ அம்மா' என்ற ஆறுதலுக்கான புலம்பலோ, ஒரேஒரு முறை ஆம் ஒரேயொரு முறை கூடக் கூறவைக்க அந்த வலிய நோயால் முடியவில்லையென்றால், அந்நோய் அவரிடம் தோற்றுப்போய் விட்டது என்றுதானே பொருள்? நான் அதை வெற்றி கொள்வேன் என்ற அந்தக் கவிஞனின் கூற்றும் மெய்தானே !

சில நாட்களுக்கு முன்பும் ஒரு முறை கீழே விழுந்திருக்க வேண்டும். நெற்றியில் பலமான காயம். இரத்தம் உறைந்து போய் இருந்தது. " இது என்னப்பா காயம் ! எப்படி ஆயிற்று? " என பதறிப் போய்க் கேட்டேன். அவர் பதில் சொல்லவே இல்லை. கீழே விழுந்து விட்டேன் என்று சொல்வதுகூடத் தன் ஆண்மைக்கும், உறுதிக்கும், துணிவிற்கும் இழுக்கு என அவர் நினைத்திருக்க வேண்டும்.

மரணத்தின் கடைசி நாட்களில் அவர் சொன்னார், "கவிஞன் என்பவன் மரணத்தையும், வாழ்க்கையையும் ஒன்றாய்ப் பார்ப்பவன். காலத்தையும் வென்று நிற்பவன். நீ ஒரு கவிஞனின் பெண் என்பதை மறந்து, பாமரப் பெண் போல் கண்ணீர் விட்டு அதைக் களங்கப் படுத்திவிடாதே" என்று. ஆனால் நான் அழாமல் இருக்கத்தான் முயன்றேன், பெரும் இழப்பு என்னும் அக்னிக்

குழம்பை சுமந்து கொண்டு.

முகவுரையைப் படிப்பவர்கள் கவிஞனையும் படியுங்கள். காலம் அவன் மீது ஏற்றிய சுமையையும், அவன் இதயத்தையும் படியுங்கள். உங்கள் கருணை நிறைந்த உள்ளத்தால் அவரை அளக்க முடியுமானால் அதுவே நீங்கள் அவருக்குத் தரும் மிக உயர்ந்த பரிசாகும்.

உண்மையை அடிப்படையாகக் கொண்டு ஆன்மாவோடு இணைந்து வரும் சொற்கள் ஜீவன் உள்ளது. மட்டுமல்ல, அவை என்றும் உயிர் வாழ்வதற்கு உரியதும் கூட . தாமஸ் கிரே என்ற அறிஞர் கூறியது போல, " ஆழ்கடலுக்குள் எத்தனையோ ஒளி மணிகள் புதைந்துக் கிடக்கலாம். காட்டில் மலர்ந்த எத்தனையோ வண்ண மலர்கள் முகர்வாறின்றி வீணாகலாம். அதுபோல, எத்தனையோ கவிஞர்களும், கலைஞர்களும் ஏழைகளாய்ப் பிறந்து விட்ட ஒரே காரணத்தால் விளம்பரம் இன்றிப் பாராட்டுவாரின்றி உலகுக்குத் தெரியாமல் மறைந்து போகிறார்கள். அவர் தம் ஆற்றல்கள் உலகுக்கும் பயன்படாமல் போய்விடுகிறது" என்ற உண்மை சுடுகிறது.

நம் இலக்கியங்கள் உண்மையான சரித்திரச் சான்றான இலக்கியங்கள். வீரமும், தீரமும் கருணையும் கொடையும் கொண்ட நம் முன்னோர்களின் வாழ்க்கைச் சிறப்பையும் வாழ்வாங்கு வாழும் வகையைக் கூறும், வள்ளுவம், புறநானூறு போன்ற உண்மை வரலாற்றை நம் மக்களுக்கு நாம் முறையாகப் போதித்திருந்தால் ஒரு இலக்கிய வாதியின் இதயத்தில் இருந்து இப்படி ஒரு வார்த்தை பிறந்திருக்க முடியாது.

'மனிதனுக்கும் மிருகத்திற்கும் பசியும் காதலும் ஒன்றே. ஆனால் மனிதனை வேறுபடுத்துவது அவனது ஆன்மா. அதுவும் இருபதாம் நூற்றாண்டில் மரண வழியைப் பார்த்துச் சென்று கொண்டிருக்கிறது' .

என் தந்தை 'வெள்ளியங்காடு' என்ற கிராமத்தில் பிறந்ததால் 'வெள்ளியங்காட்டான்' என்ற பெயரில் கவிதைகளை எழுதத்தொடங்கினார். அவரது இயற்பெயர் என். இராமசாமி என்பது.

ஏறக்குறைய 1942-லிருந்து 1950 வரையிலான அவரின் கவிதைகள், தியாகி, தமிழன்,இந்துஸ்தான், வினோதன்,சுதர்மம், தமிழுலகம், பிரசண்ட விகடன், மதுர மித்ரன், சேரநாடு, நவ இந்தியா போன்ற பத்திரிக்கைகளில் வெளி வந்துள்ளன. அதன் பின், பத்திற்கும் மேற்பட்ட காவியங்களை எழுதினார். அதுவுமின்றி, கன்னட மொழியின் தமிழாக்கமாக குறுநாவல்கள் சில, நீதிக் கதைகள் பல, பழமொழிகள் ஆயிரத்துக்கும் மேல் என்று மொழி பெயர்த்து எழுதினார். 1904 ல் பிறந்த அவர் எண்பத்தியேழு ஆண்டுகள் எழுதிக் கொண்டே இருந்தார். 1991ல் அவரது கனவுகளும் நிறைவேறாமல் நனவுகளும் நிறைவேறாமல் காலமாகி விட்டார். காலமானார் - என்ற சொற்கள் அடி வயிற்றைச் சுண்டத் துடித்த வார்த்தைகள் .....

நல்ல எழுத்தாளனுக்கு எட்டுத் திக்கும் சோதனைச் சாவடிகள்தான். அவன் எழுத்து நசுக்கப்படும் போது அவன் இதய தாகத்தின் தவிப்பை எடுத்துச் சொல்ல வழியுண்டா? அவன் எப்படித்தான் மீள்வது? அவன் சுதந்திரம் எங்கே? சுதந்திரக் காற்று எங்கே? எதைச் சுவாசிப்பது? எப்படிச் சுதந்திர கீதத்தை இசைப்பது...?

இதையெல்லாம் தீர்க்க, முப்பத்து முக்கோடி தேவர்கள்தான் வரவேண்டும். வருவார்களா? இல்லை, 'ஒருகணம்' என்ற அவர்களின் ஒரு லட்சம் ஆண்டுகள் கழித்தா?.

'தர்மம் என்றோ செத்து விட்டது, செத்த தோலைத் தைத்து பூஜித்துக் கொண்டிருக்கிறோம்' , என்பது உண்மைதானே?

சமீபத்தில் படித்த வரிகள்: 'வாசகர்களின் அலமாரிகளில் புத்ததகங்கள் மூடிய படியே இருக்கின்றன. அப்படியே புத்தகங்கள் திறக்கப்பட்டாலும் இதயங்கள் மூடிக் கொள்கின்றன.' என்பது.

என் குழந்தைகளே! கொஞ்சம் இதயத்தைத் திறந்து விடுங்கள்! பாவப்பட்ட ஆத்மாவான நான் வேண்டுகிறேன். நல்லவையெல்லாம் அதற்குள் புக வழி விடுங்கள் என்று புலம்பும் பாமரப் பெண்ணான என்னை மன்னியுங்கள். என் நீண்ட முகவுரையையும் கூட.

வணக்கமும், வாழ்த்துக்களும்,

# முன்னுரை

அவன் ஒரு கவிஞன். கவிஞனுக்கும் உள்ளம் என ஒன்றுண்டு. மற்ற மனிதரைக் காட்டிலும் கவிஞனின் உள்ளம் உணர்ச்சி வசப்படுவது; சத்தியத்திலும் சமத்துவத்திலும் பற்றுடையது. இது இயல்பு.

இந்த உணர்ச்சி அறிவு, அன்பு, ஆற்றல், ஒழுக்கம், இன்பம் போன்ற பல்வேறு பண்புகள் கவிதைகளாகி வெளிப்படும்போது சராசரி மனிதன் அவனைவிட்டு விலகுகிறான். வெறுத்து ஒதுக்குகிறான். ஒரு அறிவறியாச் செல்வனை அண்டி வாழ்வதினின்றும் ஒதுங்கி விடுகிறான்.

உண்மை - மூடனுக்கு என்றும் இனிக்காத ஒன்று. கவிஞனுக்கு அது உயிர் போன்ற ஒன்று. எனவே, கவிஞன் -உண்மையை விட முடியாதவனாகிறான். வாய்மைக்கு மாறாகிய ஒரு கவிஞன்; அவன் மொழி இயலில் எத்துணை ஆற்றல் பெற்றிருப்பனும் அவனுடைய பாடல் பயனற்றதாகி விடும். சாதுர்யமான கற்பனை உவமைகள் சுவைக்க உதவுமேயொழியப் படிக்கும் மனிதனுக்கு அது பற்றுக்கோடாகாது. இது மறுக்க இயலாத (மூட) உலகம் புரிய மறுக்கும் ஒரு அடிப்படை உண்மை.

“உண்மையே பேசு ; அறமறிந்து ஒழுகு” - சத்யம் வத; தர்மம் சர - என்று உபநிசத்து இதைச்சுட்டிக் காட்டுகிறது. இதனை நாம் அறிந்தொழுகுவது நம்மை நாம் அறிந்து கொள்வதாகும். தன்னைத்தான் அறிந்து கொள்வதே ஆன்மீகம். “தன்னை அறிந்தவன் தலைவனை அறிந்தான்” என்பதும் நம் நாட்டில் அருகி வழங்கும் ஒரு பழமொழி! ‘அகம் பிரம்மாஸ்மி’, இது யஜுர் வேத மகா வாக்கியம். இதன் பொருள் ‘நானே பிரம்மமாயுள்ளேன்’ என்பதாம்.

‘தத்வ மசி’ - இது சாம வேத மகா வாக்கியம். இதன் பொருள் ‘‘அதுவே நீ’’ - என்பதாம். இந்த இரண்டு வாக்கியங்களும் மக்களுக்குத் தெரிந்திருந்து வாழ்வில் ஒழுக்கமாகக் கொண்டிருந்தால் இந்த அருமை பாரத தேசம் என்றும் சுவர்க்கமாகவே இருந்திருக்கும்.

சித்தமிசை குடி கொண்டு சித்த மறியா திலகும் திவ்யதே சோமயம் - இதுவே தான். இதை அறிந்தொழுகும் ஒவ்வொருவனும் பிறரால் ஆள முடியாதவனாகிறான். தன்னைத்தான் ஆளுகிறவன் ஆகிறான். தலைவனை (கடவுளை) அறிந்து அடைந்தவனுமாகிறான். ஞானிகள் சாவுக்கு அஞ்சாதவர்கள். சாவை வரவேற்பவர்கள் சாவுக்காகத் -தானே மனிதனின் வாழ்வே அமைந்துள்ளது. கவி.தாகூரும் கூட மரணத்தை வரவேற்கிறார். அவரது கீதாஞ்சலியில் சாவு புகழுக்குரியதாக இருக்க வேண்டும் என்கிறார்.

மனிதனாகப் பிறந்து வாழ்வை வீணாக்கிச் சாவதைக் காட்டிலும் இழப்பு வேறில்லை. மக்கள் மொழியில் எது ‘விபத்து’ எனப்படுகிறதோ, அதுவே தேவ மொழியில் ‘சம்பத்து’ என்பதாம்.

— *வெள்ளியங்காட்டான்*

# பாடு

"நாசூக்கை மறுத்துவிடு. முழுவதும் உண்மையான தையே,
அடிப்படையானதையே பாடு !
வயிற்றை நிரப்புவதைப் பாடு!
இறுதியான நேரத்தில் தைரியம் தருவதைப் பாடு !
தாளக் கட்டையால் அடித்தால் எதிரொலி தருவதைப் பாடு !
தோல்வியெனும் படுகுழியின் ஆழத்திலிருந்து தைரியத்துக்குத்
தட்டி யெழுப்பும் பண்களில் பாடு !
எட்டுத் திக்கும் எதிரொலி யெழுப்பும் குரலில் பாடு !
பாடும் உன்னைத் தாண்டிச் செல்லும்
ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் சம்மட்டி கொண்டு
தாக்கும் வகையில் உள்ள பாட்டுக்களையே பாடு ! "

**நாகானொசி கெரு.**

(ஜப்பானியக் கவிஞர்)

# சமுதாயம்

" புதிய மதி விளைவும்
புதிய விதி விளைவும்
புதிய நிதி விளைவும்
ஆக்குவோம் ! "

# புத்தகம்

எத்தனையோ ஏற்ப இருந்துமிலை யிங்கொருநற்
புத்தகம் போலும் பொருள்.

தத்தம் தருமம், தகுதி – தரமுயர்த்திப்
புத்தகம் நல்கும் புகழ்.

பித்தம் பிடிவாதம் பேதைப் பிணிதீர்க்கும்
வைத்தியன்காண் வாழ்விற் கது.

குத்தும், வழக்கும் குடியழிவு மாய்கழியும்
புத்தகம் புல்லார்ப் பொழுது.

புத்தகத்துள் தோய்ந்து புலன்கூர்மை யுற்றவனைச்
சத்தியாய்க் காணும் சகம்.

சொத்து சுகமனைத்தும் சொப்பனமே என்பவர்க்கும்
புத்தகமே யாகும் புகல்.

நித்தமும் புத்தகத்துள் நெஞ்சம் பதிப்பவனை
வித்துவா னாக்கும் விதி.

புத்தகத்தைப் போற்றிப் புலன்புகுத்தாப் பூதவுடல்
இத்தரைக்கோ ரின்னாச் சுமை.

சத்தியமே சார்பாம் சார்ந்தகருத் தேபாவாம்
புத்தகமே தெய்வம் புவிக்கு.

சித்தத்துள் சீராய்ச் சிறந்ததனைச் சேமித்தோன்
புத்தகமாய்ப் பூப்பான் புறம்.

புத்தகத்தைப் போற்றிப் புதுப்புத் தகமானேன்
புத்தகம்நா னேபுத் தகம்.

புத்தகமாய் மாறுங்கள் புலவர்காள் ! புத்தரைப்போல்,
புத்தகம்பொன் போலும் பொருள்.

# அடிமையாக மாட்டேன்

அடிமை யாக மாட்டேன் – எவர்க்கும்
அடிமை யாக மாட்டேன்
அடிமை யென்ற ழைத்தே – என்னை
அடிமை செய்த போதும்.

அடிமை யாக மாட்டேன் – எவர்க்கும்
அடிமை யாக மாட்டேன்
உடைமை யுள்ள தெல்லாம் – விற்றென்
உருக்கு லைந்த போதும்.

அடிமை யாக மாட்டேன் – எவர்க்கும்
அடிமை யாக மாட்டேன்
குடிமை குன்றி நாளும் – பழைய
கூழ் குடித்த போதும்.

அடிமை யாக மாட்டேன் – எவர்க்கும்
அடிமை யாக மாட்டேன்
மடமை கொண்டு வந்தென் – உரிமை
மறுதளித்த போதும்.

அடிமை யாக மாட்டேன் – எவர்க்கும்
அடிமை யாக மாட்டேன்
கடமை செய்வ தற்கும் – இயலாக்
கடைய னாக்கும் போதும்.

அடிமை யாக மாட்டேன் – எவர்க்கும்
அடிமை யாக மாட்டேன்
கொடுமை கோடி செய்து – என்னைக்
கொன்று விட்ட போதும்.

# துணிவு

பிஞ்சு நாட்பட முற்றிக் கனிந்ததும்
பிணைப்பு நீங்கிப் பிரிந்திடுங் காட்சியை
நெஞ்சி லூன்றி நினைப்பவ னாகியே
நீணி லந்தனில் வாழத் துணிகிறேன் !

அற்ப மான செடியி னடியிலே
அடையு மாறுத லற்பமே யாதலால்
கற்ப கத்தரு நிழலைக் காணவே
கதிர வன்சினம் தாங்கத் துணிகிறேன் !

வீழ்ந்த போதினில் வீய்ந்திடு வா யென
வீணர் கூக்குரல் வீசித் தடுப்பினும்
ஆழ்ந்த கல்விக் கடலிடை முத்துகள்
அடைய வேண்டி யமிழத் துணிகிறேன்!

ஆல காலமி தென்னத் துயரிருள்,
அனைத்து மேகமு மொன்று திரண்டவந்
நீல வானென நெஞ்சில் படரினும்
நிலவு மிழ்மதி யாகத் துணிகிறேன் !

மூடர் தங்கள் முகமெனும் காட்டிலே
மூர்க்க முள்ள புலிகள் முடுகிடின்
ஏடு தன்னையோர் வில்லென ஏந்தியே
இனிய சொற்கணை யெய்யத் துணிகிறேன் !

அருளில் லாமல் பணத்தைப் பெருக்கினோர்
அகத்து தித்து வளர்ந்து நிறைந்தபேர்
இருளெ லாமொன்று கூடினு மஞ்சிடா
தெரியும் நெய்விளக் காகத் துணிகிறேன்!

தீட்டி வீசிடும் கத்திக் கெதிர்செலின்
தீங்கு நேருமென் றுள்ளம் தெளியினும்
நாட்டு நன்மையைக் கோரி யழைத்திடின்
நகைமு கத்துடன் தாங்கத் துணிகிறேன் !

# மனம் போல வாழ்வு

மனம் போல வாழ்வென்று சொல்லடா – இதை
மந்திர மாயெண்ணி செல்லடா
வனம்போலப் பயங்கரச் சூழலில் – நல்ல
வழிகண்டே னென்று நீ சொல்லடா

அயர்வும் மயக்கமும் நீக்கடா – நெஞ்சில்
ஆண்மை யறிவினைத் தேக்கடா
உயர்வே உயிரென ஊக்கடா – உன்னை
உண்மை மனிதனா யாக்கடா

நினைப்ப தனைத்துமே நேர்மையாய்த் – தினம்
நினைத்து நினைத்துப் பழகடா
மனப்பான்மை உயரு மளவிலே – இங்கு
மாந்தர் உயர்வென் றொழுகடா

தேடக் கிடையாத சொத்தடா – நமைத்
தேவர்க ளாக்கிடும் சித்தடா
நாடும் புலமையின் சத்தடா – பெரும்
நன்மை விளைக்கின்ற வித்தடா

எண்ணியெண்ணித் தினம் தேரடா – இதை
ஏணியாய்க் கொண்டுமே லேறடா
மண்ணிற் பிறந்த மனிதரில் – நீயோர்
மாணிக்க மாவதைக் காணடா

எண்ணடா, எண்ணடா, எண்ணடா – என்றும்
ஏற்றத்தை யே நெஞ்சி லெண்ணடா
கண்ணுங் கருத்துமா யெண்ணடா – எண்ணில்
கடைத்தேற லாமிந்த மண்ணிலே.

# கூட்டியெறி

கூட்டி யெறியடா கூட்டியெறி– கூடும்
குப்பைகூ ளங்களைக் கூட்டியெறி !
நாட்டு நலந்தனில் நாட்டமில் லாச்சுய
நாயகக் குப்பையைக் கூட்டியெறி !
வீட்டில் வெறுமை விதிப்பய னேயெனும்
வேதியக் குப்பையைக் கூட்டியெறி !
கூட்டி யெறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பையமே டாய்விடும் கூட்டியெறி !

கூட்டி யெறியடா கூட்டியெறி–கூடும்
குப்பை கூளங்களைக் கூட்டியெறி !
பாட்டைப் பண்பாடு பயந்திடப் பாடாத
பாவலர் குப்பையைக் கூட்டியெறி !
ஏட்டில் இதயத் தியல்பெழு தாத
எழுத்தாளர் குப்பையைக் கூட்டியெறி !
கூட்டி யெறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பைமே டாய்விடும் கூட்டியெறி !

கூட்டியெறிடா கூட்டியெறி – கூடும்
குப்பைகூ ளங்களைக் கூட்டியெறி !
பட்டாளி மக்களைப் பட்டினி போடும்
பகாசுரக் குப்பையைக் கூட்டியெறி !
கூட்டாளி யாகிக் குடியைக் கெடுக்கிற
கொண்டுணிக் குப்பைக் கூட்டியெறி !
கூட்டி யெறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பைமே டாய்விடும் கூட்டியெறி !

கூட்டி யெறியடா கூட்டியெறி – கூடும்
குப்பைகூ ளங்களைக் கூட்டியெறி !
காட்டும் நியதி கடைப்பிடிக் காமலே
கல்லும் கழிவும் கலந்துவிட்டுக்
கூட்டி விலைகளைக் கூறியே விற்கும்
கொடியவர் குப்பையைக் கூட்டியெறி !
கூட்டி யெறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பைமே டாய்விடும் கூட்டியெறி !

கூட்டி யெறியடா கூட்டியெறி–கூடும்
குப்பைகூ ளங்களைக் கூட்டியெறி !
தோட்டந் தொடியில் தொழும்பர்க ளாகித்
தொழில்புரி வோர்களைத் தொட்டுவிடின்
தீட்டெனச் செப்பிதீண் டாமைதிணிக்கிற
தேறலர் குப்பையைக் கூட்டியெறி !
கூட்டி யெறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பைமே டாய்விடும் கூட்டியெறி !

கூட்டி யெறியடா கூட்டியெறி–கூடும்
குப்பை கூளங்களைக் கூட்டியெறி !
நீட்டி முழக்கி யளந்திட என்றுமே
நேர மெனக்கில்லை கூட்டியெறி !
வாட்டும் பசிக்கொரு காரண மாகவே
வந்த தனைத்தையும் கூட்டியெறி !
கூட்டி யெறிந்திடக் கூசிடின் நாடொரு
குப்பைமே டாய்விடும் கூட்டியெறி !

# ஒன்றுபடல்

நாடும் நகரும் நன்றென் போமினி
நாயகர் நாமென்போம் ! – நம்
வீடும் வெளியும் ஒன்றென் போமினி
வேற்றுமை போமென்போம் !

நீயும் நானும் நேரென் போம்நன்
னெறிதனை நீங்காதே ! – கருக்
காயும் நாளைக் கனியென் போம்காய்
கவர்வதற் கேங்கா தே !

உழவும் தொழிலும் ஒன்றென் போமதன்
உறவினை ஒளிக்காதே ! பே
ரழிவும் அழலும் அன்றென் போமினி
யதற்கிட மளிக்காதே !

தாழ்வும் உயர்வும் தவறென் போமது
தவிர்ப்பது கடனென்றே ! – இனி
வாழ்வில் வறுமை வசையென் போமது
வளர்ப்பது மடமென்றே !

எண்ணா ரீயும் இடும்பைக் கிடமிங்
கிலையென் றெதிர்க்கேமோ? – எம்
கண்ணீ ரேசெங் கதிரவ னெனலெங்
கனலை யுதிர்க்கே மோ?

காயும் வெயிலைக் கடிந்திடு மோபயிர்
கலந்துற வாடிடுமோ? – பின்
பாயும் புனலிற் படிந்திடு மோபயிர்
பரிந்துற வாடிடுமோ?

அறிவும் திறமும் அரசா யரணாய்
ஆட்சியி லமர்ந்திடவே – நல்
லுறவும் மறமும் உருவா யுறுப்பா
யுலகு மலர்ந்திடுமே !

# எச்சரிக்கை

செந்த மிழ்மொழி பயிலு கின்ற
சிறந்த நாடுதனில் – நானும்
எந்த வொருசிறு குறையுமின்றி
இருக்க வேபிறந்தேன் !

மனித னென்றுல கிற்பி றந்தபின்
மக்க ளுக்கெல்லாம் – பொதுவாய்
இனிதெ னப்படும் செயல னைத்தையும்
இலங்கச் செய்திடுவேன் !

அரமு டன்பொரு ளின்பம் வீடெனும்
அரிய பேறுகளின் – உண்மைத்
திறமு ணர்ந்து கொண் டொழுகி யின்புறத்
தினமி யங்கிடுவேன் !

அருமை யானஎன் ஆர்வமேயினி
அகிலத் துள்ளளவும் – உனது
பெருமை குன்றிடச் செய்யு மெதனையும்
பேண எண்ணாதே !

புத்தி போகுமப் போக்கில் சித்தமும்
புலன்க ளின்வசமாய் – இவனொரு
பித்த னெனப்பிற ரிகழ நேர்ந்திடின்
பிறவி பழுதாகும் !

புனிதத் தன்மை யிழந்த பின்னுமிப்
பூமி யின்மீதில் – போலி
மனித னென்றுயிர் வாழு வதைவிட
மரண மினியதுகாண் !

எச்ச ரிக்கையி தாகக் கொண்டினி
இருக்கும் நாள்வரையும் – உலகில்
அச்ச மற்றிரு உன்னை யாரும்
அசைக்க இயலாதே !

# நிலைப்பு

தலைநி மிர்ந்து நிற்பேன் – மொழியால்
தமிழ னென்று ரைப்பேன் !
மலைநி மிர்ந்த தென்று – மக்கள்
மகிழ்ந்து பேசு மாறே !

முடியின் மேல்மு கிழ்த்த – மதியும்
முகம்ம லர்ந்த தெனவே
படியின் மேல்மு கிழ்த்த– மதியாய்ப்
பண்பு மேவ வைப்பேன் !

உள்ளு கின்ற வுடனே – உள்ளத்
துவகை யூறுங் கவிதை
புள்ளி மான்க ளென்னப் – புறத்தில்
பொலியு மாறு செய்வேன் !

இனிமை யான சுனையாய் – எனது
இதய மூற்றெ டுத்து
மனிதர் மாந்து மாறே – மாண்பை
மகிழ்ந்து கொள்ள வைப்பேன் !

மணங்க மழ்ந்த மலரைக் – காற்று
மருவிக் கொள்வ தொப்பக்
குணங்க லந்த கூற்றைக் – கூட்டிக்
கொள்ளு மாறு செய்வேன் !

முகில்கள் கூடி மொய்த்து – மழையாய்
முழங்கிப் பெய்தல் போல
அகிலம் கூடி மொய்த்தால்– மொழியாய்
அறிவு பெய்ய வைப்பேன் !

ஒளிமி குந்த கதிரோன்– உதித்தே
உலகை யோம்பு மாறு
களிமி குந்த வாழ்வை – உலகம்
காணச் செய்கு வேனே !

# காலம்

நீல வானம் சிவக்கவே–பருதி
நேர் கிழக்கினி லே
காலை யாகி யுதித்தது–உலகம்
கவின் மிகுந்தி டவே !

காலம் மிகமிக அரியது–வீணாய்க்
கழித்தல் கூடாது ;
சால வும்பயன் படுவதென்–றறிஞர்
சாற்று வதனா லே,

மண்ணில் மனிதரென் றுள்ளவர்–மலர்போல்
மணங் கமழ்ந்திட வே
எண்ண வுள்ள தனைத்தையும்–பலகால்
எண்ணி முடித்தேன் நான் !

நேசர் பகைவரென் றின்றியே–நெஞ்சில்
நேர்மை யுள்ளவனாய்ப்
பேச வுள்ள தனைத்தையும்–ஆய்ந்து
பேசி முடித்தேன் நான் !

வேட்கை மிக்கவ னாகவே–சான்றோர்
விரும்பி விள க்கினதில்
கேட்க வுள்ள தனைத்தையும்–கூர்ந்து
கேட்டு முடித்தேன் நான் !

வெய்யில் மழையென வீட்டிலே–வீணாய்
வீற்றி ருக்கா மல்,
செய்ய வுள்ள தனைத்தையும்–திருந்தச்
செய்து முடித்தேன் நான் !

மாலை யாகிய காலமே–இன்று
மகிழ்ந்து நீ சென்று
வேலை செய்திடக் காலையாய்–நாளை
விடிய மறவா தே !

# நாடு

நான்பி றந்ததமிழ் நாடு போன்றவொரு
நல்ல நாடுலகி லில்லையே !
தேன்பி றந்ததமிழ் போன்றி னிக்குமொரு
தெளிவு தந்தமொழி யில்லையே !

மருதம் முல்லையெழில் குறிஞ்சி நெய்தலிவை
மாறும் பாலைநில மைந்துமே
கருதும் பொதிகைகொடைக் கான லானைமலை
காக்கும் நீலகிரி சொந்தமே !

பொன்னி வைகையரும்பெண்ணை பொருநையெனப்
புனித நதிகளிவை போதுமே
சென்னை தஞ்சையொடு திருச்சி மதுரைபெருஞ்
செல்வக் கோவைநகர் மீதமே !

நான்குநூறு புறம்நான்கு நூறுஅகம்
நனியு நல்லதிருக் குறளொடும்
வான்கண் மீன்களென வைகி யொளிருகிற
வகையில் சங்கத்தமிழ் நூல்களே !

இதய மென்ற நிலத் திசைவி ளங்கிடவும்
இனிய கலையெழிலைத் தேக்குவோம் !
புதிய மதிவிளைவும் புதிய விதிவிளைவும்
புதிய நிதிவிளைவு மாக்குவோம் !

புனித மானபொழில் பூக்கள் பூத்துலகில்
புகழ்ப டைத்திடுதல் போலவே
மனிதர் மாட்சியெனு மகிழ்ச்சி பூத்துலகில்
மணக்கும் வாழ்வுதனைக் கோலவே,

உலர்ந்து திர்ந்தசரு கொப்ப வுயிருடலை
யுதிர விட்டுவிட் டோடினும்
மலர்ந்த நெஞ்சில்படு மண்ணும் மக்கிமலர்
மணங்க மழ்ந்திடுதல் கூடுமே !

# குப்பை

'ஏரினும் நன்றெரு விட' லென வள்ளுவர்
இயம்புவ தெண்ணீரோ? –இந்தப்
பாரினிற் குப்பையைப் பக்குவப் படுத்தியே
பயிர்களைப் பண்ணீரோ?

எப்பொழு தும்மெரு வாவதற் கிருப்பதை
ஏசி யிகழ்கின்றீர்–தினம்
குப்பையோ குப்பையென் றொருகுறை கூறியே
கூட்டியு மெறிகின்றீர் !

வீடுமுன் வாசலைக் கூட்டியே குப்பையை
வீதியி லெறிந்துவிடின்–வெறும்
காடுபின் கழனியும் காலமெல் லாமது
கலந்திடக் காத்திடுமே !

'காண்பவர் கண்கவர் கலையினைக் குப்பைதான்
கற்றிட விலை' யெனினும்–அது
மாண்புறப் பயிர்களைக் காண்புற வளர்த்திநம்
மனம்மகிழ் வித்திடுமே !

நீரிருந் தும்விளை நிலமிருந் தும்மன
நிறைவிருந் துழுதிடவே – நல்ல
ஏரிருந் தும்மிடும் எருவிருக் காதெனில்
எதுவுமி ராததிலே !

ஊட்டி வளர்க்கிற பாட்டிகை யுணவென
உரம்பயிர்க் குதவிடுமே ! – உரம்
போட்டறியாதவர் வீட்டினில் பெருந்துயர்
புகுந்திட விதிவிடுமே !

நிலத்தினி லுரமிலையெனின்நிறை மாந்தர்தம்
நெஞ்சினி லுரமிலையே ! – உமும்
குலத்தின ரேயிதை யுளத்திற் கொள்ளாதவர்
குடித்தனம் தரமிலையே !

# உணவு

உணவுண் டாக்கிட வேண்டும் நம்முடல்
ஊறில் லாதிருந் துண்ணவே !
துணிவுண் டாக்கிட வேண்டும் தோன்றிடும்
தொல்லை யறத்தொழில் பண்ணவே !

குஞ்சு வளர்ந்திட வேண்டி ஒருசிறு
குருவி பற்பல ஊர்கள்போம் !
பிஞ்சு வளர்ந்திட வேண்டிப் பெருநிலம்
பிளக்க மரம்செடி வேர்கள்போம்

இன்ப மெய்திட எண்ணின் முன்புழைத்
திருக்க வேண்டுமென் போமினித்
தென்பு டன்வயல் தோட்டம் காடெனத்
தேர்ந்து சென்றிடு வோம்நனி !

நெற்றி நீரெழில் நித்தி லம்மென
நீணி லந்தனில் சிந்தவே,
உற்ற முறைகளி லுதவி யொத்துழைத்
துழுது பயிரிட முந்துவோம் !

'பசியி னாலொரு மனிதன் துஞ்சினன்
பாரி' லெனும்மொழி தோன்றிடின்
வசியி னாலிடி பட்டதென்ன
வருந்து மறிவுள மூன்றிடின் !

உடலி லேவலு வுள்ள மனிதர்கள்
ஓய்ந் திருந்திடு வாரெனில்,
'கடமை தவறிவிட் டீரெ' னில்சொல்லக்
காரணம்இல்லை பாரினில் !

செய்யும் வேலைகள் சரிவரத் தினம்
செய்து கொண்டிருப் போமெனில்
உய்யும் முறையது வாய மைந்திடும்
உலக மெங்குமுள் ளோர்களே !

# அளவளாவுதல்

வீர ரெனப்படு வோர்வி யந்திடும்
வீர னானவன் யார் ?
பாரி லெளியவர் பயம கன்றிடப்
பலத்தை யூட்டி னவன் !

இனிய ரெனப்படு வோரி சைத்திடும்
இனிய னானவன் யார்?
பனியில் வெம்மையும் வெயிலில் தண்மையும்
படிய மூட்டி னவன் !

பக்த ரெனப்படு வோர்ப கர்ந்திடும்
பக்த னானவன் யார்?
யுக்தி முழுவதும் சக்தி யாக்கியே
உலகுக் கூட்டி னவன் !

அரிய ரெனப்படு வோர றிந்திடும்
அரிய னானவன் யார்?
உரிய சுதந்தர வொளியை யேற்றியே
உரிமை மீட்டி னவன் !

புனித ரெனப்படு வோர்பு கழ்ந்திடும்
புனித னானவன் யார்?
மனித குலநலன் தனது நலனென
மனத்தில் நாட்டி னவன் !

தலைவ ரெனப்படு வோர்த ரித்திடும்
தலைவ னானவன் யார்?
நிலைபெ றும்நலம் புரிய வைத்திடும்
நெறியைக் காட்டி னவன் !

இத்த னைக்குண மொத்த மொருவனென்
றிங்கி ருந்தவன் யார்?
சத்தி யத்தினில் சித்தம் வைத்தநம்
சாந்தன் காந்தி மகான் !

# தலைமை

ஒன்று கூறு கின்றேன் – முற்றும்
உண்மை யான வார்த்தை !
நின்று சற்று நீங்கள்– கேட்டு
நேர்ந்து கொள்ள நெஞ்சில் !
இன்று நேற்றொ டன்று – நன்றாய்
எண்ணி நோக்கு வோமேல்
தொன்று தொட்டு நம்பங்–கிற்குத்
துன்பம் மட்டு மேதான் !

செல்வ மென்ப வெல்லாம் – சிலரே
சேர்க்கு மாறு செய் தார் !
கல்வி யென்ப வெல்லாம்–சிலரே
கற்கு மாறு வைத்தார் !
கொல்வ போன்றெ மக்கேன்–இந்தக்
கொடுமை யென்று கேட்டால்
தொல்வி னைப்ப யன்தான்–தொடர்ந்து
துய்க்க வேண்டு மென்பார் !

அன்பி லாத பேச்சு ! – வாழ்வே
அவல மாகிப் போச்சு !
என்பு தோலு மாச்சு – உடலில்
இருப்ப தோய்ந்த மூச்சு !
துன்ப மென்னு மதனை – இனிநாம்
எய்த வேண்டு மாயின்,

குலைய நின்ற வாழ்வை – ஒன்று
கூட்டி வைக்க வல்லோன் ;
மலைக லங்கி னாலும் – துளியும்
மனங்க லங்கி டாத
கலைஞ னாயி யிருந்து – வாய்மை
கண்ட றிந்து கொள்வோன்
தலைவ னென்று ரைப்பேன் ; – அவனைத்
தான றிந்து கொளவே !

# பாட்டன்

சின்ன வயதில் சிறுமை யுறாதொரு
செல்வக் குழந்தையென – வளர்ந்தேன்
சீரும் சிறப்புட னே !
என்னை யியல்புட னேந்தி மகிழ்ந்தனர்
இல்லத்தில் யாவருமே – என்றன்
இதயம் இனித்திட வே !

வீட்டி லிருந்தவர் வேக விரட்டியே
வேலையை வாங்குபவர் – எல்லா
விவரமு முள்ளவரென்
பாட்டனா ரென்பதை யூட்டி வளர்த்திடும்
பாட்டியும் நன்கறிவான் – பாயும்
பசுவும்கன் றும்மறியும் !

பருத்துச் சரிந்த வயிறும், வழுக்குப்
பனம்பழம் போல் தலையும் – கண்கள்
பாக்குப் பழங்களுமாய்,
நரைத்த புருவம் முறுக்கிய மீசை
நமுட்டுச் சிரிப்புடனும் – சிவந்து
நன்கு வளர்ந்திருப்பார் !

ஆசை முழுவதும் காசுமேல் வைத்தவர்
ஆயினும் அன்புடனே – என்மேல்
ஆருயிர் வைத்திருந்தார் !
‘ காசு பணத்தினில் பாசம் படியவே
கற்றுனக் குத்தருவேன் – வாடா
கண்மணி ’ யென்றழைப்பார் !

‘இருளை யொளியென் றியம்பலாம் நல்ல’
இனிப்பைக் கசப்பெனலாம் – ஏழை
இதயம் மயக்கிடலாம் !

பொருளைத் திரட்டின் பெறலரி தில்லையிப்
பூதல மீதி லென்பார் ! – இதனைப்
புத்தியில் வைத்திரென்பார் !

'பணமுள்ள வன்பல வானெனும் பண்டைப்
பழமொழி யைப்பகர்வார் ! – அதன்
பயனையும் பன்னிடுவார் !
குணமுள்ள வன்மணம் கூட்டக் கருதிடின்
கொள்க இதனை யென்பார் ! – குறிக்
கோளிது வென்றுரைப்பார் !

இல்லாத வல்ல இறைவ னியங்குதல்
என்னும் படியெனது – சிறிய
இதயமெல் லாம் தனது
பொல்லாத ஆசை புகுத்தப் புகுந்தஅப்
போக்கினி லேவொருநாள் ; – கொஞ்சம்
புதிரான நாளதுவே !

படுத்த படுக்கையில் பந்து சனங்களும்
பார்த்துப் பதறிடவே, காலன்
பக்கத்தில் வந்திடவே,
கொடுத்தது வாங்கின தவ்வள வும்சொல்லிக்
கொண்டு குலைபவராய்ப் – பாட்டன்
குற்றுயி ராய்க்கிடந்தார் !

நீட்டிய கைகளும் கால்களு மான
நிலையில் நிலைகுலைந்து – பாட்டன்
நினைவு மறக்கையிலே,
' பாட்டனே ! இந்தவுன்சாவைத் தவிர்த்திடு
பத்துப் பவுன்கொடுத்தே' – என்றேன்
பரபரப் பாய்ப்பரிந்தே !

# விளக்கற்ற வீடு

உலகி லிருள்புக உதவி செய்துவிட்
டொளிந்து கொண்டனன் கதிரவன் – இருள்
விலக அகல்விளக் கேற்றி அன்னை
வெளிச்ச மாக்க விரும்பினாள்.

அந்தி வேளையில் வந்து சேர்ந்தெமை
யடக்கி யாள்பவன் சீறினான் ; – இனி
இந்த அகல்விளக் கேற்றி டேலிதற்
கெண்ணை வார்ப்பதற் கிலையென.

' வீடுங் கூடவுன் விதியைப் போன்று
வெளிச்ச மற்றிட வேண்டுமா? – அட
கேடு கெட்டவ னே ! இதற்கொரு
கேள்வி முறையென இல்லையா? ...'

பெற்ற வயிறது பற்றி யெரிந்தது ;
பிள்ளை யெனுனம்பிணிப் பின்றியே – தாய்
குற்றங் குறைகளைச் சுட்டிக் கூறிக்
குரல்கொ டுத்தனள் கோபமாய் !

' எண்ண றந்தெளிந் தெழுத்த றப்படித்
திருந்த போதிலு மென்ன நீ – ஒரு
பெண்ணெ ணும்மடப்பிறவி ! புத்தியும்
பேத மைத்' தெனப் பேசினான்.

' வேறு விளக்கெது மில்லை ; விரைவில்
வெளிக்கி ளம்பிடும் வெண்ணிலா ! – நீ
மாறு கூறியுன் மனது மாழ்கல்
மறந்தி டென்றனள் தங்கையும் !

தமயன் தானிவன் தம்பி நான் ; – ஒரு
தாயின் பிள்ளைகள் ! தரணியில் – ஈன்
றமுத மூட்டிய அன்னை யின்றெமது
அவலங் கண்டழு கின்றனள்.

சீட்டுக் கையுடன் பகலைக் காசொடு
சேர்த்தி ழுந்திடச் செய்கிறான் ; – மதுப்
பாட்டில் கையுடன் இரவை மாசொடு
பாழ டித்தெமை வைகிறான்.

மூத்த வன்முகம் பார்த்த வன்செயல்
முறையைக் கண்டெமை யீன்றவள் – நூல்
கோத்த முத்தறுந் தென்னக் கண்ணில்நீர்
கொட்டி முதுமையைக் கூட்டினாள்.

பருவ மெய்திய தங்கை பதைத்தொரு
பதரு டன்பிறந் தே' னெனத்–தன
துருவம் பையவே குன்றி நொந்துளம்
உருகி யுலர்ந்துகொண் டுள்ளனள்.

ஒத்த வுடன்பிறப் பெனினு முள்ளம்
முடைமை முற்றும் தொலைத்தவன் – தலை
கொத்தி யெறிந்திட வேண்டு மென்றுளம்
கொதித்தெ ழும்புதென் கோபமும் !

ஊரை நரகென மாற்றி யமைக்கிற
உடைமை யாளனு மொருவன்வந் – தட
பாரில் தமயன்சொல் படிந டப்பது
பார தப்பண்' பென்கிறான்.

விரச மானசச் சரவி தென்று
வெறுப்பு வேதனை யோடுநான் – ஒரு
அரச மரத்தடிப் பிள்ளை யாரென
அமர நேர்ந்தது வீட்டிலே !

காடு போச்சுது, சுழனி போச்சுது
காசு கண்ணியம் போச்சுது ! – இந்த
வீடு மாத்திரம் மிச்ச மாச்சுது
விரும்பி இருளர சோச்சவே !

# விளக்கம்

எந்தை தேடிய இல்லத்தி லேயிருள்
இரவு தோறு மிருந்திடு மாயினும்
சிந்தை யென்னுமென் சொந்தஇல் லத்தினைச்
செப்ப னிட்டுச்சீ ராகத் திருத்தினேன்.

உறுவ தோரவு முள்ளதை யோரவும்
உலக மூர்ந்த இயல்பினை யோரவும்
அறிவ தறியு மவசிய மாகவே
ஆய்வெ னும்விளக் கேற்றினேன் நானிதில் !

இமயந் தொட்டுக் குமரி முடியவும்
இன்று மக்க ளுறுதுயர்க் கேதென்
றமைதி யாக அமர்ந்ததில் பார்க்கவும்
அகமும் புறமு மடங்கக் கொதித்தன !

தந்தி ரத்தில் தலைமை வகித்தவர்
தமது சொந்த நலத்தின் நிமித்தமாய்
மந்தி ரம்மதம் தெய்வம் விழாவெனும்
மாண்பி லாமை பரப்பினர் மாளவே !

தண்டந் தன்னில் தலைமை வகித்தவர்
தமது சொந்த நலத்தின் நிமித்தமாய்ச்
சண்டை சச்சர வாட்சிச் சனியனால்
சாவு துக்கம் பரப்பினர் சாலவே !

தங்கள் காசில் தலைமை வகித்தவர்
தமது சொந்த நலத்தின் நிமித்தமாய்
எங்கும் வாங்க லிறக்கியே விற்றலை
ஏற்றி யேழ்மை பரப்பின ரேங்கவே !

தட்டிப் பேசஆ ளற்ற தரணியில்
தலைமை தாங்கிய மூவின மாக்களும்
சட்டம், சாதி, சமயங்கள், சந்தையால்
சாது மக்களைச் சார்ந்து பிணித்தனர்.

ஆனை போன்ற அரும்பெரும் மக்களை
ஆட்சி யென்கிற அங்குசம் மாட்டியே
பூனை போன்றவ ராக்கி யொடுக்கினர்
புவியி லுள்ள தொழில்கள் புரியவே !

அஞ்சித் தாழ்ந்தவ ராண்டுபல் லாயிரம்
ஆயுள் தீர வுழைத்து மடிந்தனர்
கஞ்சி கந்தல் குடித்த துடுத்தது
கண்ட தன்றிவே றொன்றுங் காணாமலே

' நீதி யன்றிது ' வென்று பகர்திடின்
நெறியை மீறிய தோர்பெருங் குற்றமாம் !
வேத பாரகர் தீதுகள் செய்யினும்
வெறுத்து நீங்கி விடுவதும் பாவமாம் !

சேவ கன்னனு மானெனச் சிந்தையில்
சிறிதும் மாசு மறுவுமில் லாமலே
ஏவும் வேலையைச் செய்து முடிப்பதும்
ஈந்த கூலிகை யேந்தலும் புண்யமாம் !

கஞ்சி யின்றிக் களைத்துயிர் போயினும்
காலன் மேல்பழி போடவும் வேண்டுமாம் !
டஞ்சை யாயினும் பக்தி பசனைகள்
பண்ண வேண்டுமாம் பாரத நாட்டிலே !

பொய்பு ரட்டுப்பொ றாமை யகத்திலே
புன்சி ரிப்பும் பொலிவும் முகத்திலே
வைய கத்தைக் காக்கிப் பிழிந்துதம்
வாழ்வை வஞ்சகர் வைப்பர் சுகத்திலே !

இனைய சூழ்ச்சிக ளாலறி யாமையோ
டேழ்மை யெங்கு மிணைத்தன ரென்பதும்
தினையி னளவும் புனைவென லின்றியே
தெரிய வைத்ததென் சிந்தை விளக்கமே !

# பட்டினிச்சூழ்

உலகெலா முணர, உண்மை
உணர்ந்தவ ரியம்ப வுள்ள
அலகிலாத் தொழில்கள் கண்டும்,
அருமந்தத் தமிழர் வாழ்வில்
விலகிலா வெறுமை, யின்னல்,
வேலையில் லாமை யாலே
நலிகிற மக்கட் குள்ளே
நானுமின் றொருவ னானேன்.

மழைவள மருகிற் றில்லை
மலைகளி லிருந்து மண்ணில்
கழைவளம் மாய்க்கப் பாயும்
காவிரி காயக் காணோம் !
தழைவள மிழக்க வில்லை
தாவரம், தலைமை மாந்தர்
பிழைவள முறவே நாட்டில்
பெருந்துயர் பிறங்கிற் றந்தோ !

ஆலய மருமை நாட்டில்
அறியாமை வளர்க்க, ஆளும்
நூலையும் நுணுகிக் கல்லார்
நூக்குவோ ராக, நோற்கும்
சீலமில் லாதார் செல்வம்
சேர்ப்பவ ராகிச் சேர,
வேலியில் லாமல் செய்த
வேளாண்மை யானோம் நாங்கள் !

அங்கமோ அறிவோ ஊனம்
அணுவள வில்லா ராயும்,
கங்கையி லிருந்தும் தண்ணீர்

காணாத கதையாய்க் கற்ற
தங்கையும், தாயும், நானும்
தவிப்பவ ராகித் தாங்காப்
பங்கமுற் றேங்கல் பாரின்
பண்பிலா அமைப்பா லன்றோ?

பிரிகின்ற கதிரோன் பின்னால்
பேதுற விரட்டிப் பேய்போல்
வருகின்ற இருள்சூ ழுங்கால்,
வாழ்கின்ற, மனையில் வைத்தாங்
கெரிகின்ற விளக்கை யேற்கா
' தெதற்கிது? வென்போர் தாம்யார்?
புரிகின்ற கொடிய துன்பப்
பூரியர் புல்ல ரல்லார் !

உள்ளுவா ருள்ளப் பூவில்
உவகைத்தே னூறுஞ் சொற்கள்
தெள்ளுவார் புலமை யென்னத்
தித்திக்கும் திங்கள் தன்னை,
எள்ளுவார் தாம்யார்? புக்கோர்
இல்லத்தில் பொருளைக் கொள்ளை
கொள்ளுவா ரன்றி மற்றிக்
குவலயத் துள்ளோர்க் குள்ளே !

தன்னிடம், தாகந் தீரத்
தண்ணீரை யருந்திச் செல்ல
மன்னிய சுனைதா னெந்த
மனிதனை யழைத்த தங்கே ?
இன்னிசை பயிலும் வண்டை
இணைத்ததார் மலரி னூடே?
என்னையின் றிவ்வா றிங்கே
எவர்பேசு மாறு செய்தார்?

அன்பிலா அறிவு மில்லா
அதிகாரி யாயா தித்தன்
முன்பிலா முறையில் மூண்டு
முகந்தெரி சொரியின், முற்றும்
என்பிலா – விரைந்து செல்லும்
இயல்பிலாப் புழுவுங் கூடத்
துன்பிலாப் புதரில் பூதத்
தொடங்குதல் தொன்மைத் தன்றோ?

போற்றுவா ரின்றிப் பொல்லார்,
' புரட்சிசெய் கின்றான்' என்றே
தூற்றுவா ரேனும், நானும்
துணிந்தின்று தொடங்கித் தொட்டுத்
தேற்றுவா ரின்றித் தீராத்
திக்கற்றோர் துயரம் தீர
மாற்றுவோ ணாதற் கேற்ற
மனத்திட்ப முற்றேன் மன்னோ !

❈

அரைக்கால் பொய் கால்பொய்
அரைப்பொய் அனைத்துமே
நிறைக்காதீர் ! நேமிநேர் என்னக்
–குரைக்கும்
முழுப் பொய்யில் வீழ்ந்துகண்
மூடியநம் நாடு
விழிப்பெய்தல் என்று விடிந்து?

# கோரிக்கை

குமரியங் கோட்டி லிருந்துபன் னூறு
கோலக் குவடு குளிர்புன லாறு !
நிமிர்ந்திடும் தென்னை நிகரற்ற வாழை !
நெல்கரும் பேரி நிலைகளில் தாழை !
இமயம் முடியத் திகழ்ந்திடு மன்னை !
எங்கட் குறைவிட மாகிய வுன்னை !
தமிழில் வினவுகின் றோம்தவித் தின்று !
' தரும மெதுவென்று சாற்றினி ' யென்று !

நீரினைக் கண்டு நிலத்தினில் தேக்கி,
நீசச் செடிகொடி நில்லாது நீக்கி,
ஏரினைப் பூட்டி யுழுபவர் நாங்கள் !
ஈரத்தில் நாற்று நடுபவர் நாங்கள் !
கோரும் பொருள்விளை விப்பவர் நாங்கள் !
குவலய முண்ணக் கொடுப்பவர் நாங்கள் !
பாரில் படுகின்ற துயர்களி லொன்று
பகரினும் பாரத மாய் விடு மின்று !

ஏதுக்குப் பெற்றனை யெங்களைத் தேவி !
ஏழைக ளாகி யிறக்கவோ பாவி !
சாதிக்குச் சாதி யுயர்வென்று சாற்றி,
சாத்திரம் சட்டம் சதிநிறை வேற்றி,
சூதுக்குள் ளாக்கிச் சுதந்தரம் தாழ்த்தி,
சூத்திரப் பட்டமும் சூட்டினர் வாழ்த்தி !
நீதிக்கும் நெஞ்சுக்கும் நேர்பட நின்று
நேர்மை யெதுவென்று கூறுக இன்று !

இரும்பினைக் காய்ச்சி யுருக்குவோர் நாங்கள்
எந்திர மாக்கி யியக்குவோர் நாங்கள் !
கரும்பினில் சாற்றைப் பிழிபவர் நாங்கள் !
கற்கண்டு சர்க்கரை செய்பவர் நாங்கள் !

துரும்பு மலம்சலம் துப்புர வாக்கும்
தொழில்புரி கின்றவ ரெம்முயிர் காக்கும்
வரும்படி பார்த்து வயிறெறி யும்மே !
வாழ்க்கைத் துணைவியர் கண்கலங் கும்மே?

இமயம் முதற்கொண் டெளியவர் தாயே !
இங்குள்ள மாநக ரெங்கணு மேயே !
குமரி முடியக் குடியிருக் கின்றோம் !
கூழுக்குஉப் பின்றிக் குடித்தழு கின்றோம்
அமிழும் கடலி லலைதுரும் போயாம் ?
அனலி லெறியப் படும்புழு வோயாம் ?
எமதுதுன் பங்களுக் கெதுபரி காரம் ?
இனிச்சகி யோமிந்த ஏமாற்றுப் பேரம் !

ஆலையமைத்துத் தருபவர் நாங்கள் !
அல்லும் பகலதில் நூற்பவர் நாங்கள் !
சேலையும் வேட்டியும் நெய்பவர் நாங்கள் !
செங்கல் சுவர்மனை கட்டுவோர் நாங்கள் !
வேலைசெய் வோர்களே ஏழைகள் ! வீசம்
வீணர்க ளேபணக் காரர்கள் ! நீசெங்
கோலிது வென்றுரை ! அன்றெனில் கோறும்
கோலைப் பறித்தெறி யும்படிக் கூறே !

# கந்தலுங் கூளமும்

' இந்த இளைஞன் இயம்புவ '
தென்னடி தோழீ ! – ' இங்கே
ஏழைக ளும்இனி வாழட்டும்
என்கிறான் தோழா !'ஓ கோ !
தொந்தர வைத்தொலைத் தோமெனச்
சொல்லடி தோழீ !- ' தூ தூ
தொல்லை தொடுக்கச் சுயநலம்
முந்துது தோழா ! ' – அந்தோ !
கந்தலுங் கூளமாய்க் காணப்
படுகிறோம் தோழீ – ' இந்தக்
கதியற்ற நிலைமைக்கு காரணம்
கண்டறி தோழா !'

' மந்திரப் பேச்சை மறுப்பவர்
யாரடி தோழீ ' ! – ' இங்கே
மக்க ளுழைப்பினில் முக்குளிப்
போர்சிலர் தோழா !' ' நன்கு
சிந்தித்து நல்லது செப்புவோ
ரில்லையா தோழீ !' – 'முன்பே
செல்வர் வலைகளில் சிக்கிவிட்
டாரவர் தோழா !' – 'அந்தோ
கந்தலுங் கூளமாய்க் காணப்
படுகிறோம் தோழீ !' – 'அந்தக்
காரணம் நீக்கிடும் கட்சியைக்
காணடா தோழா !' –

' தந்திரந் தன்னில் தலைசிறந்
தாரெவர் தோழீ !' – 'இங்கே
தாழ்ந்தவர் பாட்டில் தழைக்கும்
தனஞ் செயர் தோழா !' – ' இந்தச்

செந்தமிழ் நாட்டைச் செழித்திடச்
செய்ததார் தோழீ !' – 'வாழச்
சேரியில் தோன்றியே சோறின்றிச்
செத்தவர் தோழா !' – ' அந்தோ !
கந்தலுங் கூளமாய்க் காணப்
படுகிறோம் தோழீ !' – 'அந்தக்
கட்சியில் சேர்ந்துன்றன் கைவலு
வாக்கடா தோழா !

நொந்தவர் நோயைத் துடைப்பதன்
றோஅறம் தோழீ !' – ' இங்கே
நோயுண ராப்பணப் பேய்களும்
உண்டடா தோழா !' – 'இங்கே
வெந்தபுண் மீதினில் வேலெறி
வாரெவர் தோழீ !' – ' அது
வேதங்க ளோதிய விற்பனர்
வேலைதான் தோழா !' – ' அந்தோ
கந்தலும் கூளமாய்க் காணப்
படுகிறோம் தோழீ !' – ' அந்தக்
கைவலு வாயின் களத்தில்
இறங்கடா தோழா !'

# உரிமை

உழைப்ப வர்க்கு மட்டு முலகம்
உரிமை யுள்ள தென்றுதான்
எழுப்பு கின்ற வோசை எங்கும்
இடிமு ழங்கு தின்றுதான் !

காலம் முழுதும் வேலை செய்தும்
கையில் காசில் லாதவர்
மேலும் மேலும் காய்ந்து பானை
மீதில் பொங்கும் பாலென (உழைப்ப)

நாற்றை நட்டும் சோற்றுக் கின்றி
நலிந்த மக்கள் தமருடன்
காற்று மோத ஆற்றிடாமல்
கடலெ முந்து குமுறல்போல் (உழைப்ப)

நெய்த சேலைக் குரிய கூலி
நியதி யின்றிக் குறையவே
செய்த வேலை தீர்த்து மாலை
சினந்தெ முந்த சிறுத்தை யாய் (உழைப்பு)

நாடு முழுதும் வீடு கட்டி
நகர்க ளாக்கித் தந்தவர்
கூடி வாழக் குடிலு மின்றிக்
கும்பி வேக நொந்துபோய் (உழைப்ப)

மற்று முண்மை கடமை யன்பு
மறந்து விட்ட மனிதனைப்
பெற்ற தந்தை யெனினும் தூற்றிப்
பேச வேண்டு மினி யென (உழைப்ப)

பகலு மிரவும் சுகத்தில் மூழ்கப்
பணத்தைக் கூட்டிக் குவித்தவர்
அகமும் முகமுங் குவிய நெஞ்சில்
அச்சம் மூண்டு கவியவே (உழைப்ப)

# வாருகோல்

வாரு கோல்நல்ல வாரு கோல் ! நமை
வாழ வைத்திடும் வாருகோல் !
ஊரி லொவ்வொரு வீட்டை யுந்தினம்
உவந்து பெருக்கிடும் வாருகோல் !

ஆதி மனிதன்தன் னுடைமை யாகவே
ஆய்ந்து தேடிய வாருகோல் !
தீது செய்திடும் குப்பை கூளம்
தெரிந்து நீக்கிடும் வாருகோல் !

கோவி லாயினு மென்ன, கோமகன்
கூட மாயினு மென்னதான்
தேவை யற்றிருக் கின்ற யாவையும்
தேடி நீக்கிடும் வாருகோல் !

பட்டுக் குஞ்சமுங் கேட்ட தாயொரு
பழிய தன்மிசை யேற்றினும்
குட்டை யாகிற வரையும் கூட்டுதல்
கொள்கை யாய்க்கொண்ட வாருகோல் !

ஈனத் தொழிலென உதுவு முலகினில்
இல்லை யென்ப தறிந்துதான்
ஞானி போலவே மௌன மாகஇந்
நாட்டுக் குழைக்கிற வாருகோல் !

' வீட்டுக் கவசிய மான பொருளில்
விளக்கு மாறுமொன் ' றென்றுநம்
பாட்டி பகர்ந்ததைக் கேட்டு மொருசிலர்
பாவ மிதனை யிகழ்வதோ?

' வாரு கோலிழி வான தென்றெவர்
வாய்தி றந்தினிப் பேசினும்
போருக் கதுவரக் கூடு முண்டதன்
பொறுமைக் கும்மொரு எல்லையே ' !

# பதவி

‘ உலகத்தைத் தன்குடும்ப மெனவே யெண்ணும்
உயர்ந்தகுண முள்ளவர்க ளுண்டோ ’? என்றே
நலமதனை வெண்தட்டி லேந்தி னாளாய்
நாடெங்கும் தேடுகிறாள் நம்மை யீன்றாள் !
நிலையுண்டென் றுண்மையிலே நினைப்போர் வந்து
நெஞ்சுவந்து நேர்நின்று வாங்கிக் கொள்வீர் !

‘ பகைவனென ஒருவரையும் பாவிக் காத
பண்பட்ட மனமுடையோ ருண்டோ?’ என்றே
சுகமதனைப் பொன்தட்டி லேந்தி னாளாய்ச்
சுற்றிக்கொண் டிருக்கின்றாள் நம்மை யீன்றாள் !
தகுதிதமக் குண்டென்று தாம்சொல் வோர்கள்
தயங்காது தனிநின்று வாங்கிக் கொள்வீர் !

‘அன்பென்னும் அருங்குணத்தை யகத்தில் கொண்டோர்
அகிலத்தில் யாரேனும் உண்டோ?’ வென்றே
இன்பத்தைச் செம்பவளத் தட்டி லேந்தி
எங்கெங்கோ தேடுகிறாள் நம்மை யீன்றாள் !
துன்பத்தைத் துக்கமெனக் கருது வோர்கள்
தோள்நிமிர முன்வந்து வாங்கிக் கொள்வீர் !

‘ பெரியதெனச் சிறிய தெனச் சாதி பேதம்
பேசாதா ரெவரேனு முண்டோ?’ வென்றே
அரசுதனை மாணிக்கத் தட்டி லேந்தி
ஆவலுடன் கூவுகிறாள் நம்மை யீன்றாள் !
சரிசமமாய் அனைவரையும் நடத்துவோர்கள்
சாந்தமுடன் நேர்நின்று வாங்கிக் கொள்வீர் !

மதமென்ற வெறியேறி மலைக்கா திங்கே
மனிதரைத்தம் மக்களென மதிப்போர்க் கென்றே
சுதந்தரத்தை நல்வைரத் தட்டி லேந்திச்
சுருசுருப்பாய் வருகின்றாள் நம்மை யீன்றாள் ;
பதவிப்பித் தற்றவர்க ளிருந்தால் வந்து
பண்புடனே கையேந்தி வாங்கிக் கொள்வீர் !

# கடமை

காடு கரைகளில் வாடும் பயிர்களைக்
கண்ட மாத்திரம் அண்டங் கலங்கவே
கூடி வந்திடி மின்மழை யாகியே
குளிரப் பெய்யும் முகில்குணம் கொள்கிறேன்.

குச்சில் வாழுங் குடிமக னாயினும்
கொள்கை யற்ற குழுவினர் கூலியைத்
துச்ச மென்று கருதி யொதுக்கியே
துணிந்து மக்கள் பணியைத் தொடர்கிறேன்

மெத்த மெத்தப் பெரிய பதவியை
மேவி நிற்பவர், கேவல மாகவே
'பித்தன் பித்தனென் றேசி யிகழ்வதைப்
பின்மு னெண்ணிப் பெரிதும் வெறுக்கிறேன்.

பண்ணி நின்று பிறந்துநற் பாகுதேன்
பால்ப ழம்நறு நெய்யி னினித்திடும்
பெண்ணின் பருவப் பிணைப்பெனுங் காதலைப்
பெற்றுப் பெரிதெனப் பேண மறுக்கிறேன்;

உற்ற என்னல மோம்புவ தொன்றுதான்
உலகில் தன்கட னென்று கருதிடும்
பெற்ற அன்னையி னன்புத் தளையெனும்
பிணிப்பை மெல்லப் பிரித்துக் களைகிறேன்

தொல்லை கோடியுண் டாயினு மச்சமோர்
துளியு மின்றியே தூய மனத்தொடும்
வில்லி னின்று விடுபடு மம்பென
வீட்டை விட்டு வெளியில் விரைகிறேன்

குச்சில் குடிசையில் கூர்ந்த இருட்டினில்
குடிக்கக் கூழுமில் லாமல் குமுறியே
'அச்சோ ஆ! வென் றழுது வடித்திடும்
அவல மக்கள்கண் ணீரைத் துடைக்கவே !

# எழுச்சி

பங்குனி மாதம் ; காலை
பத்தரை மணிக்கு நானும்
இங்கித மாக நெஞ்சிற்
கின்பத்தை யீந்து செல்லும்
துங்கபத் திரையின் தூய
துறைதனி லிருந்தேன் குந்தி !
மங்கல கீத மாக
மாங்குயில் பாடல் மாந்த !

‘ சிங்கத்தின் குரலை ’ யென்று
செப்பிடத் தக்க செம்மல் !
மங்குலில் பாடல் மாந்த
மதியத்தை யொத்தந் நீரில்
முங்குவா னெழுவா னாகி
முயன்றனன் ; மொழுமொ ழென்றே
அங்கையி லெதையோ பற்றி
அழுத்தமா யமிழ்த்து வோனாய் !

‘ சங்கதி, யென்ன ? தம்பீ !
சாற்றென வினவ வேநான்,
அங்கவன் மொழிந்தான்– “அண்ணா !
அகிலத்தின் மீதில் ஈடற்
றெங்குகண் டாலு மேழை
யிதயத்தி லுரிமை வேட்கை
பொங்குதல் கண்டு, பொல்லாப்
பொருளாளர் புழுங்கு கின்றார்.

இங்கத னியல்பு யாதென்
றின்றுநா னறிய வெண்ணி,
எங்களிற் கொல்லை வேலிக்
கேற்பவே படர்ந்து காய்த்துத்

தொங்கிய சுரைக்காய் முற்றித்
தொட்டுலர்ந் திடவே கொய்து
முங்கியே யதனை நீரில்
மூழ்க்கிட முயலு கின்றேன்.

தங்கிநில் லாமல் மேலே
தாவிடு மிதனைக் காணீர் !
இங்குயி ரியல்பிஃ தாயின்
எங்கன மெளியோர் தாழ்வர்?
எங்களின் உரிமை வாழ்வை
எய்தியே தீர்வோம் ; ஏற்பச்
சங்கமு முண்டு ; " வெல்லும்
சத்தியம் சகத்தி " லென்பர் !

பங்கிடார் ; பரிவு மில்லார் ;
பணப்பலம் கொண்டு பண்ணும்
கங்குலின் மிரட்டல், நீதிக்
கரைகடந் தலைக்கு மேனும்,
தங்கிடா துலகில் ! நாளைச்
' சமதர்மம் தழைத்துச் சாரும்
செங்கதி ரெனவே தோன்றிச்
சிறுகாலை செய்யும் ' என்றான்

அங்கந்த வேளை நன்னீர்
ஆடிடும் நிமித்த மாகத்
தங்கமே போலும் மேனித்
தளதளப் புடனே, தாயாம்
மங்கையு மொருத்தி வந்தாள் !
மானாபி மானத் தோடும்
இங்கினி யிருக்க வேண்டாம்
எனவெழுந் தேகி னேனே !

# கனவு

வாசித்துக் கொண்டிருந்ததேன் ஒருநாள் காலை
' வாருங்கள் போய்வரலாம் ; என்றான் நண்பன்
யோசித்துப் பார்த்திடவும் தோன்றவில்லை
' ஊகும் ; நான் வரவில்லை யென்றா லெங்கள்
நேசத்துக் கழகாகா தெனவே நானும்
நினைவுமறந் தவனுடனே நேர்ந்து சென்றேன்.
தேசத்தைக் கடந்துகடல் தீரம் தாண்டித்
தேவருல கம்தேடிச் சென்றோம் மேலும் !

எப்போதோ எனதருமை நண்ப னோடும்
இருவரும்நாம் அயனிடம்போய் வரலா மென்ற
தப்போதென் நினைவுக்கு வந்த தால்சற்
றகமகிழ்ச்சி யடைந்தவனாய் ' அருமை நண்பா !
இப்போது தானறிந்தேன் நினது நெஞ்சை !
என்றென்றும் இந்நன்றி மறவேன் ஆனால்,
அப்போதில் அமர்ந்தவன்நம் முடனேபேச
அவகாச மெப்படியோ அறியே னென்றேன்

' முன்கூட்டி நானறிந்தேன் ; சும்மா யிங்கே
முணுமுணுக்க வேண்டாம் நீயென்றான் நண்பன்
நன்காட்டின் அமைதியென நலித்த தால்நான்
நடுங்காம லிருக்கநனி முயன்றேன் ; நாடா
தென்கூட்டை விட்டுயிரும் ஏகல் என்ன
இருந்ததொரு கணநேரம் ; எட்டிப் பார்த்தேன்.
முன்வீட்டில் காவலின்றி ' வருக ' வென்னும்
முத்தெழுத்தைக் கண்டுமுகம் மலர்ந்து நின்றேன்

அழகியநன் மலரின்மேல் அமர்ந்தி ருக்கும்
ஆண்டவன்எம் மிருவரையும் அழைத்தன் பாகக்
குழந்தைகளின் குசலத்தை வினவிக் கூடக்
குந்துவதற் காசனமும் காட்டி விட்டுப்

பழம்பாலும் கொண்டுவரப் பணித்தார். வேண்டாம்
பலகாரப் பழுவயிற்றில் தாங்கா துங்கள்
தொழில்துறையை நேரில் பார்த் துணர என்னைத்
தொந்தரவிக் கவிஞன்செய வந்தே மென்றான்

' ஒரினமும் ஒருகுலமு மாயுள் ளோம்நாம் ;
உங்களுக்கென் னனுமதியும் வேண்டு மோ? வென்
றீரிரண்டு முகங்களிலும் எழில்வி ளங்க
எழுந்துநடந் திடலானார் எங்க ளோடே
' பாரினிலே முன்னைப்போல் படைக்க நானும்
பழங்கிழவன் ; இயலவில்லை ; பதுமத் தின்மேல்
பேருக்கா யிருப்பதன்றிப் பிறப்பு வேலை
பிள்ளையின்மேற் பார்வையில்தான் இயங்குதென்றான்

பட்டென்று விளங்கிற்று, பாரி லின்று
பாவிகளின் தொகைபெருகும் கார ணந்தான்
கட்டுக்குள் ளடங்காமல் கோபம் வந்தால்
கதை பேச வேண்டாம்பின், ' ஐயா ! பாரும் ;
சட்டென்று நீ ருமது பதவி தன்னைத்
தான் நீக்கம் செய்திடுவீர், தயவு செய்து !
மட்டரக மனிதர்களே மலிந்தார் ; மேலே
' மண்ணுலக மினித்தாங்க மாட்டா ' தென்றேன்

பிரமனுக்கு முகம்நான்கும் கறுகிப் போகப்
பேசுவதற் கெதுவொன்றும் பிரியா தாகச்
சிரங்குனிந்த படியிருந்து சீரா யென்சொல்
சிந்திக்கச் செய்ததுகாண் ! சிறிது போழ்தில்
பரமாணுச் சக்திகுண்டு வெடித்த தென்னப்
படீரென்ற பேரொலியால் துள்ளி வீழ்ந்தேன்
பிரமனையும் நண்பனையும் காணோம் ! பேதைப்
பிள்ளைபலூ னூதியது வெடித்த தன்றே !

# வீறு கோளுரை

உள்ள மெனுந்திரு மலரில் ஓம்பிடும்
உண்மை நறுமணத்தால்–உலகில்
கள்ள மெனக்கவர் கபடக் கலைகளைக்
கடிந்த கற்றிடு வோம் !

தாழ்வு தனியொரு மனிதற் கேனும்
தராத தன்மையிலே–தவிரா
வாழ்வுக் குறுதுணை யான வசதிகள்
வாழ்த்தி வழங்கிடு வோம் !

ஞால மீதுநம் மரசெ னும்பயிர்
நன்கு யர்ந்திடவே–நாளும்
வேலி யாக விளங்கி வெற்றியின்
விளைவு காத்திடுவோம் !

தழல்க ரங்கள் விரித்து யமனெமைத்
தாக்க நேர்ந்திடினும்–தாங்கி
நிழல்த ரும்பொழி லெனநி னைத்தெதிர்
நின்று நீக்கிடுவோம் !

கோரித் தோல்வியில் பங்கு கொள்வது
கோழைக் குரியதெனின்–கோரி
வீரன் மணிக்கரம் வேண்டிப் பெறுவது
வெற்றி விருதென்போம் !

மண்ணில் தோன்றிய மாந்தர் மாசொடு
மாண்டு மறைவதினும்–மறையாப்
புண்ணி யச்செயல் புரிய வுயிர்தரல்
புகழுக் கெனப்புரியவோம் !

யாரும் மரண மடைந்து தீர்வதில்
அவனி யியல் பெனினும்–அமரில்
வீர மரணமன் றோநல் வீரர்கள்
வேண்டி யேற்பதுவே !

# வெஞ்சினம்

மாபெரு மிந்த வுலகம் முழுவதும்
மக்க ளுடைமையடா ! –அடா
மக்க ளுடைமையடா ! –கொடும்
பாபிக ளான வொருசில ரேயிதைப்
பங்கிட்டுக் கொண்டாரடா !–அடா
பங்கிட்டுக் கொண்டாரடா !

பட்டம் பதவி புகழ்சுகம் யாவும்
பணத்தைப் படைத்தவர்க்கே ! – இங்கு
பணத்தைப் படைத்தவர்க்கே !– ஏழை
கட்டப் படுகிறான் நாடொறும் வேலையில்
காயும் வயிற்றுடனே–அடா
காயும் வயிற்றுடனே !

நெற்றி வியர்வை நிலத்தில் வடியவே
நித்த முழைத்தவர்கள்–அடா
நித்த முழைத்தவர்கள்–இன்று
பெற்ற குழந்தைக ளோடும் தெருவினில்
பிச்சை யெடுப்பதும்பார் ! –அடா
பிச்சை யெடுப்பதும்பார் !

ஈவு மிரக்கமு முள்ளவன் ' இந்நிலை
யே னெனக் கேட்கவந்தால், –அடா
ஏனெனக் கேட்கவந்தால், – ' எல்லாம்
தேவதை யின்செய ' லென்று பழியினைத்
தேய்த்திடு வாரதன்மேல்–அடா
தேய்த்திடு வாரதன்மேல் !

பஞ்சமும் பட்டினி யாலும் மடிகிறார்
பாமர மக்களெல்லாம் ; – அடா
பாமர மக்களெல்லாம் ; – காண

நெஞ்சம் குமுறுது வெஞ்சினம் மீறுது
நீசத் தனங்களினால்–செல்வர்
நீசத் தனங்களினால் !

கூனும் குருடலிப் பேடிகள் நீங்கக்
குலத்தி லுதித்தவர்கள்–உழைக்கும்
குலத்தி லுதித்தவர்கள்–அடா
மான மழிந்துயிர் வாழ்வதைக் காட்டிலும்
மாள்வ துயர்வல்லவோ? – எதிர்த்து
மாள்வ துயர் வல்லவோ?

❊

சோற்றுக் குழைத்துச்
சுதந்திரம் சூனிய மாய்க்
கூற்றுக் கழைப்பும்
கொடுக்கின்றார் – மாற்றுக்குக்
கண்ணிருந்தும் காணாதார்
காதிருந்தும் கேளாதார்
எண்ணிருந்தும் எண்ணா
திருந்து.

# சபதம்

நமது வீரம் நாட்டு தற்கு
நல்ல நேரம் வந்தது !
தமது ளங்கு ளிர்ந்து தலைவர்
தயவு கூர்ந்து தந்தது !

நீதி நேர்மை நெறிகள் நாட்டில்
நிலைத விர்ந்தி டாதுமே
பாது காப்ப ளிக்கு மாறு
பகருஞ் செய்தி போதுமே !

கலகஞ் செய்து நமையெ திர்க்கும்
கசடர் கண்க ளின்குறி
இலகும் நமது ழைப்பி னோடி
யைந்த செல்வ மென்றறி !

மானம் மனிதர்க் கணிக லனெனும்
மாண்பி னைம றப்பமே ?
ஈன ரான இவர்க ளுக்கி
ளைத்தி தைத்து றப்பமோ ?

நீர்க்கு ளத்தி றங்கியார
நீர ருந்த அள்ளலும்
போர்க்க ளத்தெ திர்த்த பொய்யுர்
பொன்ற வென்றி கொள்ளலும்

இவ்வி ரண்டு மொன்றெ மக்கென்
றியம்பு கின்ற போதனை
தெவ்வர் தம்மைக் கண்ட தாலே
தெளியும் அரிய சாதனை !

‘ ஒன்று வெற்றி யன்றி மரணம்
இரண்டி லொன்று காணுவோம் !
என்ற சபத மின்றெல் லாரும்
ஏக மாகப் பூணுவோம் !

# ஆறுதல்

கண்க லங்க வேண்டாம் – கரைந்து
கவினி ழக்க வேண்டாம் !
பெண்க ளாண்க ளெல்லாம்–நெஞ்சம்
பேத லிக்க விட்டே !

வெய்யி லில்வி ரைந்தோர்–வேட்கை
விலக்க வேண்டு மென்றே
நொய்யல் பொன்னி வைகை – நதிகள்
நோன்பு நோற்கு தென்பர் !

மாலை வேளை முதலாய்ப் – பெய்து
மல்கி விட்ட பனியைக்
காலை வேளை கதிரோன்–தோன்றிக்
காய்ந்து நீக்கு கின்றான்.

வந்த போது மேடாய்–நம்மை
வருந்த வைத்த வழியே
விந்தை யான தணிவாய்த் – திரும்பின்
வேறு பட்டி ருக்கும் !

அகம்வ ருந்த எதிரில்–அலறி
அழுங்கு ழந்தை நாளை
நகைமு கத்தி னோடும் – மழலை
நமக்க ளிப்ப துண்டு !

இரவி லாது பகலாய்ப் – பாரில்
இருந்த தில்லை யென்றும்
உருளை யின்பு றங்கள் – போலும்
உலகி லின்ப துன்பம் !

விதிவெ றுத்த போதும் தீயர்
வினைவ ருத்தும் போதும் தீயர்
கதிக லங்க வேண்டாம் – கற்ற
கல்வி யைம றந்தே !

# நேர் நெறி

அற்பரை யணுகாதே – நல்ல
அறிஞரை யகலாதே
கற்பவை கற்றால் நாம் – அன்றே
கயமைகள் கழிந்துவிடும் !

பொழுதினைப் போக்காதே – நல்ல
புலமைபொய் யாக்காதே
எழுதிய தேற்றால் நாம்–அன்றே
இழிவுகள் ஏகிவிடும் !

ஆத்திர மடையாதே – நல்ல
அறிவினைக் கடியாதே
நாத்திற மடைந்தால்நாம் – அன்றே
நலிவுகள் நகர்ந்து விடும் !

சித்தம் மயங்காதே – நல்ல
செயல்களில் தயங்காதே
புத்தியில் பொலிந்தால்நாம் – அன்றே
புன்மைகள் பொன்றிவிடும் !

ஆசையி லழியாதே – நல்ல
அன்பினைப் பழியாதே
தேசினில் திகழ்ந்தால்நாம்– அன்றே
தீதுகள் தீர்ந்துவிடும் !

உய்முறை யுதறாதே– நல்ல
உண்மையைச் சிதறாதே
மெய்வழி மிளிர்ந்தால்நாம் – அன்றே
மிடிமையும் மெலிந்துவிடும் !

நல்லதை நசுக்காதே – நல்ல
நட்பினைக் கசக்காதே
அல்லதை அழித்தால்நாம் – அன்றே
அவலமு மகன்றிடுமே !

# வெற்றி

அரையை யாய்த லொன்றே -அதனை
அறிய வைப்ப தொன்றே
இரண்டி ருந்த தெனின் நாம் – உலகை
எளிதில் வென்று விடலாம் !

உரையை யோர்த லொன்றே-அதனை
உளத்தில் வைப்ப தொன்றே
இரண்டி ருந்த தெனின்நாம் – உலகை
எளிதில் வென்று விடலாம் !

திரையைத் தீர்த்த லொன்றே-அதனைத்
தெரிய வைப்ப தொன்றே
இரண்டி ருந்த தெனின்நாம்-உலகை
எளிதில் வென்று விடலாம் !

கரையைக் காண்ப தொன்றே-அதனைக்
கவின வைப்ப தொன்றே
இரண்டி ருந்த தெனின்நாம்-உலகை
எளிதில் வென்று விடலாம் !

நிரையை நேர்த லொன்றே – அதனை
நிலையில் வைப்ப தொன்றே
இரண்டி ருந்த தெனின்நாம் – உலகை
எளிதில் வென்று விடலாம் !

விரையை வேட்ட லொன்றே – அதனை
விளைத்து வைப்ப தொன்றே
இரண்டி ருந்த தெனின்நாம் – உலகை
எளிதில் வென்று விடலாம் !

தரையைத் தாங்க லொன்றே-அதனைத்
தழைக்க வைப்ப தொன்றே
இரண்டி ருந்த தெனின்நாம்-உலகை
எளிதில் வென்று விடலாம் !

# திருந்துகை

மிகமிகமேம் பட்டுலகில் வாழ்தற் கென்றே
மெய்வாய்கண் மூக்குசெவி மேவப் பெற்றும்,
சுகமதனைக் காணாது சுயந லத்தால்
சுடுகாட்டுச் சுமையாகச் சுருங்கிக் கெட்டோம் !
நகைமுகமும் நடுநிலையும் நட்பு மில்லார்
நலமுற்று வாழாரென் றறிவாய் தம்பி !
அகஞ்சுருங்கி முகங்கோணு மவல வாழ்க்கை
அகிலத்தில் அகற்றிடுவோ மினிமே லேனும் !

நல்லெண்ணம், நன்னடத்தை, கல்வி, கேள்வி
நாடிநமை நாமுயர்த்தி நலங்கா ணாமல்,
புல்லெண்ணம், புலை, களவு, பொய்பொ றாமைப்
புல்பூண்டுக் களைபொருந்திப் புலம்பிக் கெட்டோம்
சொல்லெண்ணம் செயலென்னும் மூன்றுமொன்றாய்ச்
சுதந்தரத்தை யுயிர்போலச் சூழ்ந்து காத்துச்
செல்லுண்ணும் மரமென்னத் தேய்ந்த வாழ்வைச்
சீராக்கி வாழ்ந்திடலா மினிமே லேனும் !

மடங்கொன்று மதியூட்டி மகிழச் சொந்த
மாதர்களின் வாழ்வுக்கும் மணமுண்டாக்கி,
அடங்காதும் அடக்காதும் பிறரை நேசித்
தானந்த மடையாதே யலைந்து கெட்டோம்
படங்கொண்ட பாம்பின்வாய்த் தேரை போலப்
பாமரராய்ப் பட்டதுயர் போதும் தம்பி
திடம்மிகுந்த தேசுடைய மனித ராகித்
திகழ்ந்திடநாம் திருந்திடுவோ மினிமே லேனும்

புவிமீதி லுள்ளதனைப் பொதுவாய்ப் பங்கிப்
புசிக்கின்ற நல்லொழுக்கம் புரியா திங்கே
அவனைவிட எனக்கதிகம் வேண்டு மென்றே
அநியாயம் செய்துநனி அழிந்து கெட்டோம் !

அவனுக்கும் உனக்கும்சம வுரிமை யன்றி
அணுவளவும் பேதமிலை யறிவாய் தம்பி
எவனையுமே யிழிவாக யெண்ணி யிங்கே
இயல்பழிய வேண்டாங்கா ணினிமே லேனும் !

❋

நீர்திருத்த மாகும்
நிலம்திருத்த மாகும்நேர்ந்
தேர்திருத்த மாகும்
எனவெண்ணிப் – பார் திருந்தும்
யார் திருத்தம் செய்தாலும்
ஆத்மாவை ஆய்ந்தறியார்
சீர்திருத்தம் எய்தார்
செரித்து.

# பகைப்பண்பு

யாரென்ன நினைத்தாலும் யாதாம், நம்மை
யாரென்ன உரைத்தாலும் யாதாம்? இந்தப்
பாரினிலே நண்பர்செய இயலா நன்மை
பகைவர்செய வல்லரெனப் பகர்வ ராய்ந்தோர் !
பாரினிலே நண்பர்செய இயலா நன்மை
பகைவர்செய வல்லரென லுண்மை யாயின்,
நேரினிலே யிலையெனினும் நெறியில் நாமும்
நெஞ்சார அவர்நலனை நினைப்போம் தோழா !

தெரிந்தேதான் தெரியாத திகைப்பி லேதான்
தீனர்களுக் கொருதவறு செய்தோ மாயின்,
வருந்தியதை வையத்தார்க் கெடுத்துச் சொல்லி
வழிக்குநலம் வரப்புரிவோர் பகைவ ரென்பர் !
வருந்தியதை வைத்தார்க் கெடுத்துச் சொல்லி
வழிக்குநமை வரப்புரிவோர் பகைவ ராயின்,
திருந்தியநன் நெஞ்சுடையோ ராகி நாமும்
தினந்தோறும் அவர்நலனை நினைப்போம் தோழா !

மறந்தேனும், மயங்கியபுன் நிலையி லேனும்
மதியினமாய் நடந்து கொண்டோ மாயின்,
'அறந்தானோ இதுவென்றே அறியக் கேட்டாங்
கறிவுநிலை கூட்டிடுவோர் பகைவ ரென்பர் !
அறந்தானோ இதுவென்றே அறியக் கேட்டாங்
கறிவுநிலை கூட்டிடுவோர் பகைவ ராயின்,
இறந்தாலும் பகைவருக்குத் தீங்கெண் ணாமல்
எப்பொழுதும் அவர்நலனை நினைப்போம் தோழா !

உணர்ந்தேனும், உவந்தவொரு நிலையி லேனும்
ஓரமுறை யாயொழுகி யொளித்தோ மாயின்,
கணந்தாழா தனைவரொடும் கூறி நம்மைக்

கண்திறந்து விடுபவரும் பகைவ ரென்பர் !
கணந்தாழா தனைவரொடும் கூறி நம்மைக்
கண்திறந்து விடுபவரும் பகைவ ராயின்
குணமாய்க்கொண் டப்பகைவர் தனைநாம் வாழ்த்திக்
குவலயத்தில் அவர்நலனை நினைப்போம் தோழா !

❋

கண்டதைக் கற்றுக்
        கசடற்றோன் காசினியில்
பண்டிதன்காண் என்னும்
        பழமொழியொன் – றுண்டதிலே
சேர்ந்தவன்தான் நானுமெனச்
        செப்புகின்றேன், செந்தமிழை
ஓர்ந்தவர்தம் ஓர
        உளத்து.

# அறியவுள்ளவை

காலம் கழியநமைக் காத்துக் கொண்டுள்ளவைதாம்
ஞாலம்நீர், தீ, காற்று நான்கினோடு – நீல நிற
வானமென ஐந்துண்டு, வாழ்வுக் கடிப்படையாம்,
ஞானியறி வித்தான் நமக்கு

உடல்மண்ணீ ராகி உயிர்நீர்தீ காற்றுய்
உடல், வாய், கண், மூக்குசெவி யோரும் – மிடலாய்
மனம் வாக்கு காயமென மன்னுமிம் மூன்றின்
கனம் காக்கும் வாழ்வில் கலந்து.

தன்னை யறிந்தோன் தலைவனெனும் தக்கோர் சொல்
உன்னை யறிந்துநீ உய்வது தான் – என்னை
உடல்காத் துயிர்காத் துளங்காத் தொழுகி
இடல்காத் திசைகாத் திருந்து

ஏற்றுண்டு வாழாம லிட்டுண்டு வாழுவதே
ஆற்றத் தகுந்த அறமென்பர் – சாற்றின்
போற்றுகிற தெய்வம் புனிதவுளத் துள்ளதெனும்
நோற்றறிந்து கொள்ளெனும் நூல்

வாழப் பிறந்தவன் வாழ்வை யறியாமல்
தாமும் தவறுகளேத் தான்செய்தால் – கூழுக்
குழைத்துக் கிழமா யுடலிலுயிர் போகும்,
இழைத்ததுவே றின்றி யிருந்து

விதைத்ததே பிந்தி விளைந்ததென் றெண்ணுர்
சிதைத்துத்தம் சிந்தை கலங்கிப் – பதைத்தழுது
கண்ணீராய்ப் பெய்வார், கதறுவார், காதடைக்க–
மண்ணீரம் செய்வார் மடிந்து.

# இயற்கை

" பூக்கள் மலர்ந்து
        புலன்கவரும். பூக்களிலே
ஈக்கள் புகுந்தாங்கு
        இசை பயிலும் – நோக்கத்
துயிலெழக் கூவும்
        துணைவனெனக் கோழி
அயிலெழக் கூவும்
        அகம்."

# நொய்யலாறு

ஆறென்றாலும் ஆறு தான்
அருமை யான ஆறுதான்
வேறென்றாலும் காவிரி
விரும்பிக் கொள்ளும் ஆறு தான் !

ஆனி யாடித் திங்களில்
அருவியான அவையெல்லாம்
கானில் கூடிப் பேசியே
கலந்தி றங்கும் ஆறு தான் !

சிறிய சிறிய அணைகளால்
சீர்மிகும் வாய்க் கால்களால்
வறிய குளங்க ளுக்கெல்லாம்
வாழ்வ ளிக்கும் ஆறு தான் !

செயலே லாம்செ ழிக்கவும்
செல்வம் தான்கொ ழிக்கவும்
வயலெ லாம்வ ழுத்தவும்
வழங்க வந்த ஆறு தான் !

மருக்கொ ழுந்து மணத்துடன்
மாந்த ளிர்நி றத்துடன்
பெருக்கெ டுத்திவ் வுலகினைப்
பேணச் செல்லும் ஆறு தான் !

கோவை நகரப் பெருமையைக்
கூர்ந்த றிந்து கொண்டுபோய்க்
காவிரித்தாய் கேட்கவே
கவிதை பாடும் ஆறு தான் !

பொய்யில் லாத புலமைபோல்
புனித மான ஆறுதான்
நொய்ய லாறென் றனைவரும்
நுவல வோடும் ஆறு தான் !

# அல்லிக்குளம்

குவளை யல்லி மலர்கள் பூத்த
குளமி ருந்ததாம் !– அதில்
தவளை யாமை நண்டு மீன்கள்
தங்கி வாழ்ந்ததாம் !

கட்டு திட்ட மாக யாவும்
கலந்து வாழவே – ஆமை
சட்ட சபையில் தலைமை தாங்கச்
சம்ம தித்ததாம் !

தில்லு முல்லு வழக்கைக் கேட்டுத்
தீர்த்து வைக்கவே – நண்டு
நல்ல நீதி பதியுமாக
நயந்து கொண்டதாம் !

தக்க வாறு குளத்தி லாட்சி
தழைத்தி ருக்கவே – கூரக்
கொக்கைக் காவல் சேவ கத்தில்
கொண்டு வைத்ததாம் !

சாத்தி ரங்கள் கற்ற றிந்த
சமர்த்து வாத்தையே – சதா
வாத்தி யாரின் வேலை பார்க்க
வரவ ழைத்ததாம் !

கூட்டம், விழாத் திருமணக்
குதூக லங்களில் – இசைப்
பாட்டுப் பாடத் தவளை யாரைப்
பணித்து விட்டதாம் !

இத்த னையும் செய்து வைத்தும்
இராச்சி யத்திலே – மீன்கள்
மொத்தமாகச் சுகமிழந்து
முணுமு ணுத்ததாம் !

# வானம்

எல்லை யற்றுப் பரந்தெழி லாகியே
இனிய நீர்நிலம் காற்று நெருப்பெனும்
வல்ல பூதங்கள் நான்கும் வகுத்துமவ்
வகையில் தானுமொன் றுனது யாதடா?

மெச்சும் வண்ணச் சிறகு விரித்துநீள்
மேகந் தோய மிகுந்த விரைவுடன்
பச்சைக் கிளிகுயி லாதி பறவைகள்
பறந்து பரவசப் படுவது மெங்கடா?

போற்றும் மென்மலர் தம்மை யளாவியே
பொதிந்து வீசிக் கமழும் மணத்துடன்
ஆற்றும் சீர்வரி வண்டி னமுதமாம்
அரிய பண்ணுகர் விப்பது யாதடா?

சின்னஞ் சிறு துடி யிடையி லுடுத்திய
செல்வத் திருமகள் நீலத் துகிலிடை
பொன்னின் பூப்பல பூத்தன போலவே
புகழும் மீன்கள் பொலிவுற லெங்கடா?

பஞ்சம் பிணியிவை மிஞ்சிவ ராமலே
பல்வ கைப்பயிர் பண்ணிப் பிழைத்திட
மஞ்சு சூழ்ந்து தடிந்து முழங்கியே
மழையை மண்ணில் மடுப்பது யாதடா?

தேனைப் போன்று திளைத்துக் களித்திடத்
திரு வுடற்கண் நிலவை விரித்தொரு
கானில் யானையின் கோடு கிடத்தல்போல்
கண்கவர் பிறைகாண்பது மெங்கடா?

சோதி நீள்கதிர் பேரொளி காட்டியே
சூழும் பாழிருள் நீக்கித் துலக்கிடும்
ஆதவன் வரும் வீதியுமாயுயிர்க்
கனைத்து மாகி யளிக்குமவ் வானடா !

# முகில்

விண்ணக மெங்கும் விளங்கிப் பரந்து
விரையும் கருமுகிலே !– நீயும்
மண்ணக மெங்கும் புஞ் செய்களை மட்டும்
மதிக்கத் தவறுகிறய் !

ஏழை குடித்திடுங் கூழுக்கு வேண்டி
யிருப்பது புஞ்சை நிலம் ! – சொந்த
மேழி பிடித்தன்றி வாழக்கற் காமல்
மெலிந்த உழவ னவன் !

உடலி லிருந்து வியர்வை ஒழுக
உழுது விதைத்து வைத்தான் – ஒட்டும்
குடலி லருந்து பசியுங் குடையக்
குனிந்து களையெடுத் தான் !

கம்பும் வரகும் கறுகி யுலர்வது
கண்டுங் காணுதது போல் – நீயும்
தெம்பு மிகுந்த கரும்புநெல் லெங்கெனத்
தேடித் திரிந்திடு வாய் !

' என்செயலாவ தெது வொன்று மில்லை
யினி ' யென வேயிரங்கி – இந்தப்
புஞ்செய் யுழவன் புலம்புதல் கூடவுன்
போக்கில் புரிந்துகொள் ளாய் !

மெத்தப் பசியுடன் கத்துங் குழந்தையை
மேலும் தவிக்கவிட்டுத் – தாயும்
நித்திரை செய்யுங் குழந்தைக் குணவிடின்
நேர்மை யெனப் படுமோ ?

எண்ணற்ற கண்க ளிருக்கு முனக்கென்
றியம்புகின் முரெனி னும் – ஞானக்
கண்ணொன்று கூட வுனக்கிலை யென்பது
காண முடிந்த தின்றே. !

# அந்தி வானம்

சங்கரனும்நானும், அன்று
சமயத்தருக்கம் செய்துகொண்
டெங்கள் வீட்டுத் திண்ணைமேல்
இருந்தோமந்தி வேளையில் !

காடுகரையில் மேய்ந்து வந்த
காளை கறவைக் கன்றுகள்
வீடுகளை நாடி மெத்த
விரைந்துகொண் டிருந்தன !

வாசல்கூட்டி நீர் தெளித்து
வண்ணக்கோல மிட்டபின்
தோசைவார்த்துத் தருவ னென்று
சொல்லலானாள் அன்னையும் !

எண்ணெழுத்து பார்த்தலுத்த
எங்கள்கண்ணுக் கினிமையாய்த்
திண்ணை மீதி ருந்த போது
தெரிந்ததந்தி வானமும் !

நீலவானைத் தொடுவதொப்ப
நீண்டமலையும் நின்றது ;
காலம் கழியநடந்ததனல்
களைத்திருந்தான் கதிரவன் ;

சேர்ந்தவாறி ருந்து நாங்கள்
சிந்தை இனிக்க வூன்றியே
ஓர்ந்தவற்றைப் பார்க்கலானோம்
ஓகோ ! பாவ மென்னவே

கதிரவனும் சிகரம் முட்டிக்
கால்முறிந்து வீழ்ந்தனன் ;
உதிரமந்தி வான் சிவக்க
ஒழுகியுரைய லாச்சுதே !

# நீர்த்துளி

சிதறிய வொருசிறு நீர்த்துளி நானென்
செயல்களைச் செப்பிடுவேன் ;- அருங்
கதிரவனாணையி லாவியாய் மாறியே
கண்ணெதிர் தப்பிடு வேன் !

முகிலென வானிடை மொய்த்து மகிழ்ச்சியாய்
மோகனம் புரிந்திடுவேன் – ஒரு
அகிலத்தை யாண்டிடு மரசெனப் புகழ்ச்சியாய்
அணிந்து திரிந்திடு வேன் !

காற்றெனும் குதிரையின் மீதி லமர்ந்து
களிப்புட னுலவிடுவேன் – என
தாற்ற லறிந்தெழில் சோலை யழைத்திடின்
அன்புடன் குலவிடு வேன் !

மஞ்சன னெனமலை மாது மயங்கியே
மகிழ்ந்தெனை மருவிடுவாள் – களி
விஞ்சிடக் கொஞ்சியோர் மின்னலை வீசி
வெடித்திடின் வெருவிடு வாள் !

பயிர்களெ லாமெனைப் பார்த்திட ஏங்கியே
பரிவுட னழைத்திடவே – பெருந்
துயர்களெ லாம் தொலைத் தின்புறத் துளிகளைத்
தூவுவேன் தழைத்திடவே !

சீருடன் பெருகிய நீரெலாம் ஓரிடம்
சேர்ந்திட ஏகிடுவேன் – குளம்
ஏரிகள் நிறைப்பதற் காகவே பாரிடை
எழில்நதி யாகிடுவேன் !

ஞாலத்திற் கண்டநற் காட்சிக ளனைத்தையும்
நண்பருக் கெடுத்துரைப்பேன் – வருங்
காலத்திற் கடலிடை நீரெனக் கலந்ததில்
கண்படுத் திருப்பேனே !

# மலை மடந்தை

பருவ காலத் தருணி யாகிப்
பருவ தம்து லங்குது !
புருவ நடுவில் திலகமாகிப்
பொழுதி ருந்தி லங்குது !

கருத்த கூந்தல் விரித்த தென்னக்
கவிந்து மேகம் தவழுது !
பொருத்தங் கண்டு சிரித்த தென்னப்
பொழியும் மின்னல் துவளுது !

உரிய கணவன் பிரிவை யுன்னி
உருகக் கண்ணீர் பெருகுது !
அரிய சுனைகள் மருவித் துன்னி
அருவியாகி வருகுது !

விரக மாகி மருகிப் புகலை
விரும்பி வெட்கி நின்றது
மரக தப்புல் லுருவில் முகிலை
மருவும் செயலு மொன்றுது !

பெருமை யடைய அருமை மகவைப்
பெற்று வைத்துக் கொண்டது,
பரும னுடைய கருமை யானை
பாங்கி லொத்துக் கொண்டது !

தருண முதிக்க தரிக்கும் பவளத்
தங்க நகையும் தெரியுது !
அருண னுதிக்க மரங்கள் துவள
அழகு மலர்கள் விரியுது !

பருவ தத்தைத் தருணி யாக்கிப்
பார்த்து வக்கும் முன்னமே
இருவு தித்து மறைத்த ததனை
இதய மையோ வென்னவே !

# மீன் கிணறு

ஊருக் கருகில் தோட்டக் கிணறொன்
றுண்டு நீர்நி றைந்ததில்
நீரி ருந்து மில்லை நேர்ந்து
நீந்தி வாழும் சீவனே !

குப்பன் குளத்தி லிருந்தி ரண்டு
குஞ்சு மீன்கள் கொண்டுவந்து
ஒப்பி நன்கு வாழு மென்று
வந்த தற்குள் விட்டனன் !

ஆண்டி ரண்டு முடிவ தற்குள்
அருமை மீன்கள் ஆசையாய்
மூண்டு வாழ்ந்து குஞ்சும் பொரித்து
மொய்த்துப் பல்கிப் பெருகின !

வானமீன்கள் வந்து கூடி
வாழ்வ தொத்த கிணற்றினை
மீனுக் குரிய குப்பன் வந்து
மெல்ல எட்டிப் பார்த்தனன் !

உழுது வித்தி யுரமி டாமல்
ஊறும் நீரி லுபரியாய்க்
குழுமி யுள்ள மீனின் செல்வம்
கூர்ந்து பார்த்து மகிழ்ந்தனன் !

மிகவும் நன்று நன்றி தெ ன்று
மீசை மெல்ல முறுக்கிவிட்டு
அகங்கு ளிர்ந்த ழைத்த னன்தன்
அண்டை யயலுள் ளோர்களை !

பொருத்தங் கண்ட றிந்து செய்யும்
போது சிறிய செயலிலும்
பெருத்த லாப முள்ள தென்று
பேசிக் காட்டக் குப்பனே !

# கோரைப்புல்

ஏரை யியக்கத் தொடங்கினன் – உழவன்
எழுந்த வுடன் முதல் வேலையாய் !
கோரை யறுகு குமைந்தன :– 'அந்தோ
கொடுமை யிது ' வெனக் கூறியே !

கடவுள் படைத்த வுயிர்கள்நாம் – இதை
கருத மறந்தஇம் மானிடன்
குடித்தனம் செய்ய முனைகிறான் – நமது
குலத்தை யுழுது தொலைக்கிறன்.

நன்றி மறந்தஇம் மாடுகள் – நாளும்
நம்மையே தின்றுயிர் வாழ்பவை
கொன்றினி நம்மைக் குவிக்கவே– இன்று
கூடிற் றிவனுட னென்னவே

கோரைக்குக் கோபம் பிறந்தது – பூண்டும்
கூடவே தோள் கொட்டி ஆர்த்தது ;
பாருக்குள் வாழும் உரிமையை – எவன்
பறிப்பவன் பார்க்கலா மென்றது.

'தரிசு நிலத்தை யுழுவது – தார்மிக
தருமத்திற் கேபுறம் பானது
அரசியல் சட்டம் இடங்கொடா ' – தென்றே
அறுகுவக் கீல்வாதம் செய்தது !

' கோரை யறுகுபுல் பூண்டுகள் – போடும்
கூக்குரல் காதிற்கொள் ளாமலே
ஏரை யுழவ னியக்கினன் ' – நல்ல
ஈரம் கிடைத்ததே யின் றென !

பொதுநலத் தின்பகை யானபுல் – பூண்டின்
போக்கினைக் கண்டும் பொறுமையாய்
விதைத்தினை கூடையில் குந்தியே – வித்தும்
வேளை வரவெதிர் பார்த்ததே !

# நெல்லும் புல்லும்

" நெல் :

உழுதது முனக்கா யன்றே !
உரமிட்ட துனக்கா யன்றே !
பழுதற வரப்பு கோலிப்
பரம்படித் தருவி நீரை
முழுவதும் பாய்ச்சி யிங்கே
முதல்நட்ட துன்னை யன்றே !
அழுதிடச் சேற்றி லுன்னை
அழுத்தினர் புல்லே யன்று !

' பிறர்பொருள் திருடே ' லென்று
பேசிடும் கவிச்சொல் கேளாய்
அறிஞர்பே ரன்புக் கென்றும்
அருகதை யாகா யஞ்சி,
வறிஞனென் றிரந்து தின்று
வாழ்வதை விட்டு வைதுன்
திறமையைக் காட்டின், தீயோய் !
தீர்த்துனைக் கட்டச் செய்வேன்.
தன்னறி வில்லை யேனும்
தமரறி வதுவு மற்றேய் !
சென்னெலென் றென்னை நாடே
சிறப்பித்துப் புகழுங் கால், நீ
என்னெச்சில் தின்று நீண்டின்
றென்னையே யெதிர்க்கின் றுயா ?
முன்னையும் பின்னை யெண்ணு
முழுமுட்டாள் புல்லே! யென்ன,

" புல் "

வாயுள்ள தென்று வாளா
வம்பிடும் வலியோர் தம்மை
ஆயிரம் நூறு பேராய்
அவனியில் அறிவேன் நானும் !

பேயுளங் கொண்டு பீற்றிப்
பிதற்றிட வேண்டாம் நெல்லே
வேயள விருப்பி னும்நீ
வீரியம் விளம்ப வேண்டாம் !

சோளங்கேள் வரகு கம்பு
சுவைமிகு கரும்பு, – மற்றும்
நீளும் நம் மினத்துக் கென்றும்
நிலையான வாழ்வுக் கேது,
காளைகள், கறவை மாடு
கன்றுக ளெனவே காணாய் !
நாளும்நா னிவற்றுக் கேற்ற
நல்லுண வாகி வாழ்வேன்.

அயர்வின்றி நிலத்தில் பன்னாள்
ஆவலா யுழுத காளைக்
குயிருள்ள வரையு முன்னால்
ஒருசிறு பயனு மில்லை !
பயிரென்று பட்டம் பெற்றும்
பரிவின்றி வாழு முன்றன்
பெயர்மட்டும் பெரிது ; நெல்லே !
பேசிடின் சிறுமை கண்டாய்

யோசித்துப் பாரா தே நீ
உளறிய சொற்க ளூன்றி
வாசித்த பெரியோ ருக்கு
வருத்தத்தை வரவ ழைக்கும் !
நேசித்து வாழும் நேர்மை
நெஞ்சத்தி லிருந்தி ருந்தால்,
தேசத்தின் நலத்தை நீயும்
தெளிந்தனை யென்போ மன்றோ ?

மனிதனோ, மாடோ, மற்ற
மரஞ்செடி, நெல்லே, புல்லோ, --
தனித்தனித் தன்மை யேனும்,
தற்சமம் சுகதுக் கங்கள் ;
எனினெதற் குலகி லின்னும்
இருப்பதிவ் வேற்றத் தாழ்வு !
இனியிதை யறிந்து நீயும்
இணைந்துவா ழெம்மோ டென்ன,

செடி பூடு

" புல்சொன்ன சொற்கள் பூரா
பொருந்திற்று புலமைக் " கென்று,
பல்சின்னச் செடி பூ டொன்றிப்
பாராட்டப் பண்பில் லாத
நெல் சின்னப் புத்தி விட்டு
நெட்டுயிர்ப் பெறிந்து நின்று
தொல்சின்னப் பகைபா ராட்டல்
துன்பமென் றிதுசொ லிற்று :

நெல்

" தக்கதே சொன்னாய் ! இந்தத்
தரணியிலினி மேல் நானும்,
எக்குல மெந்தச் சாதி
எதுஎவ்வா றிருந்த போதும்
ஒக்கநம் முடன்பி றந்த
தென நினைத் திதய மொன்றித்
துக்கமும் சுகமும் பங்கித்
துணையாக வாழ்வே " னென்றே,

புல்

எமதெம' தெனவே பேசி
இங்குள்ள பொருளை யெல்லாம்
தமதாக்கும் வழக்கத் தால்தான்
தரணிபாழ் படுவ தாகும்
நமதுவாழ் நாளி லேனும்
நலன்பொலன் பங்கி யொன்றிச்
சமத்துவ மாக வாழ்ந்தால்
சத்தியம் தழைக்கும் சற்றே !

காலத்தைக் கலகஞ் செய்து
கழித்தென்ன பயனைக் கண்டோம் !
ஞாலத்தில் பிறந்த வெல்லாம்
ஞாலத்தில் வாழத் தானே !
சீலத்தை மறந்து சிந்தை
செருக்கினை வளர்த்தோ மாயின்
மூலத்தோ டழிவோ " மென்றே
முடித்தது கதையைப் புல்லே !

# மாமரம்

' சுட்டுப் பொசுக்கத் துணிந்தன ஞே ' வெனச்
சூரிய னுச்சிக்கு மேலிருந்தே
மட்டு மிதமின்றிக் காயத் தொடங்கினன்
மதிப்புக் குரியஎன் மாமரத்தை !

ஏழை யெளியவ ரில்லத்தில் பண்டம்
ஏதுமில் லாம லிருப்பதுபோல்
பாழுமவ் வானம் முழுவதும் வெறுமை
பரந்து பயத்தை யுறுத்தியது !

வீட்டில் குழந்தைகள் போட்ட இறைச்சலின்
வேதனை அத்துடன் சேர்ந்ததனால்,
தோட்டத்தி லுள்ள என் மாமர நீழலில்
சோர்ந்துகண் மூடிப் படுத்திருந்தேன்.

' சக்தி படைத்த மனிதனே ' ! என்றசொல்
சர்க்கரை யாக இனித்திடவே,
யுக்தி படைத்தஎன் மாமரம் கூப்பிட
' ஓ ' வென நானெழுந்து ஏன் எனவும்,

' பூந்தளிர் யாவும் கறுகிட நானும்
புலம்பியழுமிந்தப் போதினிலே
மாந்தர்க ளாகிய நீங்க ளெனக்கு
மழைபொழி வித்திட வேண்டு ' மென,

சிந்தை வருந்த உரைத்தது ; நானுமென்
செல்வச் சிறப்பான மாமரமே !
இந்தத் தலைமுறை தன்னி லிருப்பவர்க்
கிம்மியு மில்லையிச் சக்தி ' யென்றேன்

இல்லை யெனிற்பய னில்லை ; யினியெம்
மினத்தைவெட் டாம லிருந்துவிடின்,
நல்ல மழைபெய்து நாடுஞ் செழித்து
நலன்கள் பெருகிடு மென்றதுவே !

# மல்லிகை

காலை முற்பகல் முழுவதும் பற்பல
காரி யங்களிலே – ஒன்றிக்
கருத்து டன்மன மீடு பட்ட
களைப்பு நீங்கிடவே
மாலை யில்மகிழ்ந் தேன் அமர்ந்தொரு
மல்லி கைக் கொடிபால் – மாறு
மலர்ம ணந்தனை நுகர்வ தற்கென
மனது நிறைவுடனே !

அந்தி யாகிய தேவி யின்எழில்
அரவ ணைப்பினிலே – கதிரோன்
அகம கிழ்ந்துதன் மெய்ம்ம றந்தவன்
ஆயி ருக்கையிலே,
சிந்தை யின்பசி தீர அத்தெவிட்
டாத காட்சியை நான் – கண்ணுல்
சேர அள்ளி யருந்தி னேனொரு
சிலையை யொத்திருந்தே !

தீன மாயொரு குரலு மிங்கெனைத்
திரும்பிப் பாரெனவே – நெஞ்சம்
திடுக்கி டும்படி செவியில் வீழ்ந்தது
திரும்பி னேன் விரைவாய் !
மானி யாகிய மல்லி கைமலர்,
' மனித னே ! யென்னைக் – கொய்துன்
மடியி லாகிலும் மறைத்து வையென
மறைவு கோரியதால் !

இணையி லாத மணம்ப ரப்பிடும்
இனிய மல்லிகையே ! – உனக்கு
என்ன நேர்ந்ததின் றென்னி டம்விரைந்
தியம்பு நீ ! யெனவே,

' மணமி லாதன வாகி யிங்குள
மலரெ லாமெனையே – வைது
மனது நோவதை விடவு மினியது
மரண மென்றதுவே !

❊

தன்னை யறிந்த
தலைவன் தனிப்பண்ணைச்
சென்னெல் சிரஞ்சாய்த்துச்
சேவிக்கும் – கன்னலிரும்
பாலைக்குக் காக்கும்.
அரும்புமுகை யாய் முல்லை
மாலைக்குக் காக்கும்
மதர்த்து.

# கத்தரிச்செடி

‘ கத்த ரிச்செடி’ யென்ப
தென்பெயர்தான் – தோட்டக்
காலென் பிறப்பிடமும் !
‘ சத்துடன்சுவை மெத்த
வுடையதெனக் – காயைச்
சமைத்த ருந்திடுவார் !

கொஞ்சம் கத்தரிப் பிஞ்சுக்
குழம்பெனவே – கேட்கும்
கொழுநன் குறிப் பறிந்து,
நெஞ்சு நிறைவுடன் வஞ்சிக்
கொடி நிகர்ப்பாள் – காய்கள்
நேர்ந்து வாங்கிடுவாள்.

‘ கத்த ரிக்கிணை யான
காய்களையாம் – எங்கும்
கண்டதில்லை’ யெனச்
சித்த ரென்பவர் தெளிந்து
செப்புகிற – இந்தச்
செய்தி தெரிந்தது தான்.

நித்தம் முணக்குடன் மொத்தம்
நீக்கியெழும் – நாக்கு
நீள மானவரும்
சுத்தக் கத்தரிப் பிஞ்சுக்
கறி’ யெனவே – வாய்நீர்
சொட்டச் சுவைத்துண்பர் !

காத்த மனிதரைக் காக்க
வேண்டியது – வாழ்வில்
கடமை யானதினால்
பூத்துக் காய்ப்பது புரிந்து
புகழ்பெறவே – எனது
பொழுது போக்கிடுவேன்.

அறுகு பூண்டுபுல் லருகில்
முளைத்தென்னைச் – சுற்றி
அடர்ந்து வளர்ந்திடுமேல்
சிறையி லடைத்தது போன்று !
சிறுமையுடன் – சாலச்
சிந்தை நொந்திடுவேன் !

தக்க விதம்பயிர் செய்யத்
தக்கவர்க்குத் – தயவாய்த்
தக்க படிகாய்த்து
மக்கள் பசிப்பிணி நீக்கும்
மாமருந்தாய் – நானும்
மகிழ்ச்சி யடைவேனே !

# துன்பமுற்ற குயில்

விரிதி ரைக்கடல் தன்னில் குளித்துடல்
வெப்பம் நீங்கி விரிந்த இளங்கதிர்ப்
பருதி வானவன் தோன்றினன் கீழ்த்திசை
பார்க்கப் பார்க்கப் பரவச மாகவே !

சுருதி கூட்டி நறுமலர் யாழினில்
சுரும்பெ முப்பக் கரும்பினு மின்னிசை
குருதி யொத்த விழியும் கலங்கியே
குயிலு முள்ளங் குலைந்து குமுறவே

இனிய நறுமணங் கமழும்மென் காற்றிலே
இலையும் பூவும் இசைந்திசைந் தாடவும்.
பனியின் நீர்த்துளி முத்தணி யாகவே
பச்சைப் பயிரினம் நச்சி மகிழவும்,

கனியு மின்பக்கண் காட்சியைக் கண்ணினால்
காணக் கைத்தது போன்று கிளைமிசை
நனிவ ருந்தி யிருந்தது பூங்குயில்
நல்ல நேரம் நனியும்வீ ணாகவே !

நாடொ றும்அதி காலை யெழுந்ததும்
நசைய ரும்பிட நாணி நகைப்பதும்,
' பாடு வாயெனத் தன்பெடை கேட்பதும்,
' பவள வாய்முத்தம் நீ கொடு ' வென்பதும்

வேடிக் கைவிளை யாடல் முடிந்ததும்
வேணு கானமும் நாண இசைப்பதும்,
காடு முழுவது முள்ள வுயிரினம்
காது குளிரப் பருகிக் களிப்பதும்,

ஆய இந்தச் செயல்களில் யாதுமே
அன்றில் லாம லடங்கிக் கிடந்ததால்,
வேயின் கூனல் முதுகி லமர்ந்திசை
விரும்புந் தூக்கணங் குருவியு மாவலாய்
நேய மான குயிலை நெருங்கியே,
நேர்ந்த தென் னெனக் கேட்டது ' நேச ! இத்
தூய வுள்ளமில் லாக்கொடுங் காக்கையால்,
துன்ப முற்றனம் ' என்றதப் பூங்குயில் !

✻

நீக்கமறப் புக்கு
நிலவுமிருள் நீங்கிடவே
மாக்களொடு மக்கள்
மனம்மகிழ – காக்கைமனப்
போக்கைப் புடைப்பீர்
புலவர்காள், என்றுகுயில்
பாக்கள் படைக்கும்
பரிந்து.

# கூண்டுக்கிளி

' இச்சைக் கிசைந்தவிதம் – பறந்
தினிய கனிபுசித்துப்
பச்சைப் பசும்பொழிலில் – கூடிப்
பரவச மாயிருந்தேன்.

மனித அமைப்பினிலே – மாண்பு
மலிந்து கிடைக்கையிலே
மனித னதைமறந்து – என்னை
மயக்கிச் சிறைபிடித்தான் !

அல்லி மலர்தனிலே – துயில்
அகற்றும் மதுகரமென்
கொல்லைப் புறத்திலெனைக் – காணக்
கூர்ந்தெதிர் பார்த்திருக்கும் !

காவி லுலாவிவரும் – கானக்
கரிய குயில்பெடையும்
சேவல் சிறுமைகளைச் – சேர்த்துச்
செப்பத் துடித்திருக்கும் !

நாக்கினில் தேன்தடவி – மொழி
நன்கு பயில்வே னெனக்
காக்கை இளம்மகவும் – இறக்கை
கட்டியே காத்திருக்கும் !

என்னெழில் மேனியெனத் – தனக்
கில்லையென் றெண்ணியமும்
சின்னஞ் சிறுகுருவி – இன்று
சிரிக்க முயல்கிறது !

இரவு பகலெனவே – மாறி
இன்றுநேற் றாகியேநாள்
வருவது போவதுமாய் – எனது
வாழ்வும் கழிகிறதே !

# வாழி பொழுது

பொழுது புலரும் பொழுதி லொளியாய்ப்
புகுந்து புலர்கிறது
பொழுது மறையும் பொழுதி லிருளாய்ப்
புகுந்து மறைகிறது !

நீரும் நிலமும் வளியு மொளியும்
நெருங்கி நீங்கி நெடும்
போரும் புகலும் புரிந்திவ் வுலகைப்
போற்றிக் கொள்கிறது !

இவ் வுலகும் பந்தை யொத்திங்
கிருந்து சுழல்கிறது
விந்தை யுயிரும் உள்ளும் வெளியாய்
விரும்பி யுழல்கிறது !
சீவன், விதையா யிருந்து சிறந்த
செடியு மாகிறது
பூவும் காயாய்ப் பொருந்தும் விதையாய்ப்
புதுமை கொள்கிறது !

கோழி முட்டை யிட்டுக் காத்துக்
குஞ்சு பொரிக்கிறது
வாழும் குஞ்சே கோழி யாகி
வாழ்வு கொள் கிறது !

அருவ மான வளியு மொளியும்
ஆவி யாகிட வும்,
உருவ மான நீரும், நிலமும்
உடலு மாகிடவும்,

‘ வாழி பொழுதே வாழி ’ யென்று
வரவ ழைத்திடு வோம் !
வாழி பொழுதே வாழி யென்று
வழிய னுப் பிடு வோம் !

# வைகறை

கோழி கூவிடுதே ; – இருளும்
குலைந்து தாவிடுதே !
பாழும் யனியாட்சி – அஞ்சிப்
பதுங்க லாயிடுதே !

பொழுது புலர்ந்திடுமே – புதுமைப்
பூக்கள் மலர்ந்திடுமே
வழிதி றந்திடுமே – அரசியல்
வாழ்வு தித்திடுமே !

மெய்ம்ம றந்துறங்கும் – இனிய
மெல்லிய யல் மடவீர்
கைக ளுதறிநிமிர்ந் – தெழவே
கண்ம லர்ந்திடுவீர் !

இதய மலர்தனிலே – வதியும்
இனிய கவிவண்டு
புதிய மதுவுண்டு – கவிதை
புனையக் கேளடியோ !

உட்க ருத்தினிலே – உதிக்கும்
உணர்ச்சி யுருவாகிப்
புட்க ளாம் பாணர் – பண்கள்
மொழியக் கேளடியோ !

‘ வெற்றி நம ’ தெனவே – வைகறை
வெண்சங் கொலித்திடுதே !
‘ கொற்றம் நம’ தெனவே – வண்ணக்
கொடியு யர்ந்திடுதே !

தொடர்ந்த போராலும் – தூயோர்
துணையின் திறத்தாலும்
அடிமை யிருள் போச்சு – சுதந்திர
அருணோ தயமாச்சே !

# அறிமுகம்

உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளனென்ற – வள்ளுவரின்
ஒற்றைக் குறள்பாவை யுண்மையெனக் கொண்டொழுகப்
பெற்றதாற் பெற்றதிப் பேறு.

எனைவிட்டுச் செல்ல இசைந்தேங்கு மிளமை
தனைவிட்டுப் புல்லித் தறுகண் – புனைவொட்டும்
வாலிபன்நா னென்ன வனிதையர்தம் கண்துன்னும்
காலமிது வென்று கணித்து.

குரலொன்றி நின்றும் குறியொன்றி நட்டும்
விரலொன்றிற் றென்றூர் விளம்ப – நிரலொன்றி
ஊரிலிருந்தோ றொன்றாகிச் சென்றாரிப்
பாரிலிருந் துய்யப் பரிந்து.

நட்டார் பிரிந்து நகர்ப்புரம் நண்ணிடினும்
மட்டார்மா, தென்னை, கதலிபலா – கட்டார்ந்த
வேலிசூழ்ந் தங்களது வீட்டருகில் தோட்டமதில்
காலிகன் றுண்டு கலித்து.

உழைத்திசைந்து வாழும் குடிகளுட னொன்றித்
தழைத்திசைந்து வாழும் தமிழன் – அழைத்தாலும்
வேறுதொழில் செய்ய விரும்பா னெனவிதந்து
கூறுவதுண் டூரில் பலர்.

தந்தை தவறியதும் தாயே தலைவியெனச்
சிந்தை சிதறாது செப்பமுடன் – நிந்தை
நிகழாது சார்ந்து நிறைவுறச் செய்தூர்
இகழாது சேர்த்தா ரிசை.

# மழலை

மையேந்தும் கண்ணி
மலரேந்தும் கார்குழலி
கையேந்தி, அண்ணலின்
கால்முளையை – மெய்யேந்தும்
கோலமுகம் கண்டு
குறுநகைகொண் டாள்கொழுநன்
சீலமகள் கொண்டு
சிலிர்த்து.

# வண்ணாத்திப் பூச்சி

வண்ணாத் திப்பூச்சி ! – இனிய
வண்ணாத் திப்பூச்சி !
எண்ணா மல் நீயும் – இங்கே
இன்று வந்த தேன்?

உனக்குத் தக்கதோர் – இடமிங்
கொதுக்க வில்லை ; நீ
இனிக்க, மலர்களில் – மதுவை
இசைத்து றிஞ்சு போய் !

அதுவு மன்றெனில் – காலை
அவிரும் பனியில் நீ
இதய மிருத்தியே – குளித்
தின்ப மெய்து போய் !

கோவில் காணிது ; – சொர்க்கம்
கோரி மாந்தர்கள்
தேவன் பால் குறை – இரக்கத்
தேர்ந்த இட மிது !

வருத்தும் நோயிலா – துடல்
வலிவு வாய்ந்தவர்
மருத்து வன்மனை – வாசல்
மறந்தும் மிதித்திடார் !

ஆயி னாண்டவன் – அருளை
அடைய நீ யொரு
தீய செயலையும் – தெரிந்து
செய்ய வில்லையே !

நாளை பின்னையும் – இங்கு
நாடி நீ வரேல்
வேளை வீணினிச் – செல்க
விரைந்து வெளியிலே !

# தேன் ஈ

அருமைத் தேனீயே ! – ஆற்றல்
அமைந்த தேனீயே !
பெருமைக் குரியவையே – நீயும்
பேணிச் செய்வாயே !

வேறு வேறு நிறம் – உருவம்
விரும்பும் மணமுடைய
நூறு நூறு மலர் – உனக்காய்
நோன்பு நோற்கிறது

சிகரந் தனில் தேடித் தேனைச்
சேக ரித்திடு வாய் !
மகரந் தங்களையே – மனையில்
மகிழ்ந்த ருந்திடுவாய் !

விருந்தும் மதுவாகும் – வீட்டில்
விரும்பும் வித முணவில் !
மருந்தும் மதுவாகும் – மக்கள்
மாளும் பிணிகளிலே !

தாழ்வி லாவுழைப்பால் – தளராத்
தகுதி யுடைமையினால்,
வாழ்வி லுயர்ந்தாய் நீ – உலகில்
வடிவில் சிறுத்திருந்தும் !

இரவு முழுவதுமே – பிரிந்திங்
கிருக்கும் தாமரையுன்
வரவை யெதிர்பார்க்கும் – விருந்து
வைக்க வைகறையில் !

காலை தனிலரும்பிப் – போதாய்க்
கமழும் மல்லிகையும்
மாலை மலர்ந்தவுடன் – உன்னை
மருவி மகிழ்ந்திடுமே !

# குஞ்சும் குழந்தையும்

காட்டி லிருந்த மரத்திலே – சூழ்ந்த
காரிருள் நீங்கும் பொழுதிலே
கூட்டி லிருந்த குருவியின் – சிறு
குஞ்சு குறித்திது கூறிற்று :

"அம்மா அம்மா அந்த வானமும் – எனக்
காவலை யூட்டி யழைக்குது
சும்மா விடுதடுக் காதெனை ; சென்று
சுற்றிப் பறந்து வருகிறேன் !"

" குஞ்சேகுஞ் சே ! யின்னும் கொஞ்சநாள் – இந்தக்
கூட்டில் பொறுத்திரு கூடவே
பிஞ்சுடல் கொஞ்சம் வளரட்டும் – இறகும்
பெரிதும் தழைந்து வலுக்கட்டும் ; "

அன்னை யுரைத்தது போலவே – அந்த
அருமைச் சிறுகுஞ் சிருந்தது ;
சின்ன இறகு வலுத்ததும்– சென்று
சிந்தை களிக்கப் பறந்தது !

நாட்டி லொருநக ரத்திலே – ஞாயிறு
நல்லொளி செய்யும் பொழுதிலே
வீட்டி லுறங்கி விழித்ததும் – குழந்தை
விரும்பி யிதனை விளம்பிற்று :

விட்டு விடுஎன்னை அன்னையே – அதோ
விண்ணில் விரும்பிப் பறக்கிற
பட்டுப் பசுங்கிளிக் குஞ்சென–நானும்
பாரில் திரிந்து வருகிறேன் !

அன்னை யுரைத்தனள் "கண்மணி உன்றன்
அழகிய கால்கை வளரட்டும்
இன்னும் இரு சில நாட்கள் பின்–செவ்வாய்
இவ்விதம் நீயும் திரியவே !"

# விட்டில் பூச்சி

பொய்வ ழுக்குக ளாடித் தன துகைப்
பொருளி ழந்தபின் வாழ்க்கையில்,
'செய்வ தென்னினித் தெய்வ மே' யெனும்
சீர ழிந்தவன் சிந்தைபோல்

வைய கந்தனை மூட லாச்சுது
வந்த சூழ்ந்தமைக் காரிருள் !
நெய்வி ளக்கினை யேற்றி வைத்ததை
நீக்க நேர்ந்தது வீட்டிலே !

சின்னஞ் சிறயிதோர் விட்டில் பூச்சிதன்
சிறகி ரண்டும் விரித்ததாய்ப்
பொன்னெ னத்தழைந் தெரிவி ளக்கினைப்
பொருந்தி வலமிட வந்ததும்

பின்னு முன்னுமெண் ணாதுபாய்ந்ததில்
பித்தெ னும்படி வீழ்ந்தது ;
இன்ன லென்னதான் நேர்ந்த தோ? அதன்
இதய மதனைநா னோர்கிலேன்.

கண்ணி ரண்டுமில் லாம லேயது
கால னுக்கிரை யானதோ?
மண்ணின் மீதிது காறும் வாழ்ந்துதன்
மனது நொந்துதான் போனதோ?

நுண்ணி தான அவ் வீட்டில் விளக்கில்
நுழைந்தி றந்ததன் காரணம்
எண்ணி யெண்ணிநான் பார்த்த போதிலும்
இன்ன தென்றதை யோர்கிலேன் !

பறந்து வந்துதன் சிறகி ரண்டும்
பலங்கு றைந்ததில் நேர்ந்ததோ?
மறந்த வாக்கினில் வந்து வீழ்ந்து
மடிந்து போகவே நேர்ந்ததோ?

' பிறந்த நாளி லிருந்து மரணம்நம்
பிடரி மேலமர்ந் துள்ளது ;
அறிந்து கொள்ளினி ' யென்று தானெனக்
கன்றி றந்துகாண் பித்ததோ?

# காக்கைக் கும்பல்

ஒரு தினம், கதிரோன் வானில்
உதித்தொளி பரப்ப லானன்
இரண்டொரு மரங்கள் சாலை
இருபுறங் களிலும்; மைனாக்
குருவிக ளவற்றில் கூடிக்
கும்மாளம் போடக் கேட்டுப்
பரிவுடன் துயிலை நீத்துப்
பாலகன் வெளியே வந்தான்.

சிந்தனை செய்த வாறே
தெருப்புறம் சென்று நின்றான் ;
விந்தையாய்ச் சிறுவர் சேர்ந்து
விளையாட லானா ரங்கே !
முந்திய இரவு பெய்த
முதல்மழை யீர மண்ணும்
அந்தமில் லுவகை தேக்கி
யவர்களுக் களிக்கும் போலும் !

மதிற்புற மதுவும் நல்ல
மைதானம் ; மரத்தின் கீழே,
புதியதாய்ப் பொன்னால் யாரோ
புலன்மயக் கிடவே வைத்த
அதிசயச் சிலையி தென்ன
அசையாது நின்றா னங்கே
எதனையோ கூர்ந்து பார்த்தான் ;
எதிர்பாரா தெதிர்ப்பட் டாற் போலும் !

பாதையின் மறுபு றத்தில்
பறம்புப்பாய் வைத்துப் பாங்காய்
யாதொன்று முட்பு காதே
அடைத்திருந் தார்கள் ; பாயின்

மீதினில் காக்கைக் கும்பல்
மெதுவாக எழும்பும், குந்தும் !
சூதுடன் கத்தும் ; பார்க்கும்
சுருக்கமா ய்ப் பறக்கும் ; குந்தும் !

அங்கொரு புற்று ; பன்னூ
றாயிரம் ஈசல் கூடி,
' இங்கினி யிருந்தால் பெற்ற
இறகுவீண்! எனவே, யின்றக்
கொங்குலாம் வெளியில் கொஞ்சம்
கூட்டமாய்ப் பறந்து லாவித்
தங்கிட வரலா மென்றே
தயங்காது கிளம்பும் மேலே !

உலகிடை நடப்ப தொன்றும்
உணராத ஈசல் கூட்டம்,
பலபல பார்க்க எண்ணிப்
பறக்கையில், பட்டாம் பூச்சி
சிலசில இயற்கைக் காட்சி
சிந்தையில் பதியக் காட்டும் ;
கலகலப் பாகக் கத்திக்
காக்கைகள் பறக்கும் குந்தும் !

பறந்திடும் பட்டாம் பூச்சி
பார்க்கவே பாழுங் காக்கை,
பறந்திடும் ஈச லொன்றைப்
பழம்போன்று கௌவிக் கொண்டு
பறந்திடும் ! விழுங்கி விட்டுப்
பறம்புப்பாய் முகட்டில் குந்தும் !
பறந்திடும் பின்னு மொன்றைப்
பற்றிடும் விழுங்கும் குந்தும் !

அச்சிறு சீவ ராசி
அவலமா யழியக் கண்ட
பச்சிளம் பாலன் நெஞ்சு
பதறிற்று ! பரிந்து, வாய்விட்டு
' அச்சோ ; ஆ ! ஆகா ! ' வென்றே
அதட்டியே ஆர்ப்ப ரித்தான்
' கொச்சையாம் காக்கைக் கும்பல்
குவலயத் தொழிக? ' வென்றே!

❈

மாலைக்குள் வந்து
மரங்களில் தங்கியெழில்
காலைக்குக் காத்திருக்கும்
காகங்கள் – சோலைக்குள்
' கா கா கா ' வென்று
கரையுமொலி காதுகளை
நோகாமல் செய்திடும்
நோய் !

# செங் கரும்பு

செங்க ரும்பே ! செங்க ரும்பே !
சிறுவர் வந்து கேட்கிறோம்
' எங்கள் குறையை நீக்க வேண்டு
மென்று கூறி யின்றுனை !

இல்லை யில்லை யெமைவி ரும்பும்
எந்த சீவ ராசியும் !
நல்லை நல்லை யென்று னக்கு
ஞாலங் கூறு தாசியும் !

கனியும் தேனும் பாலு மாகக்
கருதி யுண்டு நாடொறும்
நனியு மழகு செய்து வந்தும்
நாறு தெங்கள் மேனியும் !

கோணல் மாண லாக நீயும்
குள்ள மூங்கிற் குச்சிபோல்
காண வுஞ்ச கித்தி டாமல்
கவினி லாதி ருக்கிறய் !

ஆன போதும் உன்னைக் காணின்
ஆவ லாக, யாவரும்,
' நானும் நீயும் ' என்ன முந்தி
நனியும் தின்ன வேண்டுவர் !

' தேனும் பாலும் தோற்ற தென்னத்
தீஞ்சு வைப யக்குமுன்
மேனி போலி னிக்க நாங்கள்
மெத்த வும்வி ழைகிறேம் !

' செங்கரும்பே, எனஇ னிக்கும்
சிந்தை யெய்திச் சிறக்கவே
எங்க ளுக்கு மட்டு முன்றன்
இரகசி யம்இ யம்பிடே !

# தாலாட்டு

தூங்கி விழித்தெழுக : – கண்ணே
தூமலர்த் தொட்டிலில் நீ !
‘ கோங்கு மலரில்துயில்– கொண்ட
குஞ்சுச் சுரும்பென வே ’

முல்லை யரும்பனைத்தும்–மலர்ந்து
முன்றில் கமழ்கையிலுன்
சொல்லின் சுவையருந்திக்–குயில்
சோகம் மறந்துறங்கும் !

கன்னல் தமிழ் பயின்று–கூண்டில்
கனியைப் புசித்த கிளி
தன்னை மறந்துறங்கும் – நீயும்
தாமரைக் கண்வளராய்

மாமரச் சோலையிலே–புள்ளி
மானின் மகவும், மலர்க்
காமர வண்டிசையில்–சொக்கிக்
கண் துயில் கொள்கிறதாம் !

தெற்கி லிருந்துவரும்– தென்றல்
தேமல ரில்திளைத்து
நிற்கும் நிலைத்தினியுன்–தொட்டில்
நீள அசைத்திட வே !

கிழக்கி லிருக்குமெழில்–கேள்விக்
கீதம் பயின்ற கடல்
பழக்கும் பசுந்தமிழில்–பாகாய்ப்
பண்கள் மிழற்றிடவே !

மேற்கு மலைமிசையே–மென்றளிர்
மெல்லணை மேலயர்ந்து,
ஏற்கன வேயிறங்கும்–வெய்யோன்
எழும்பும் வரையினிதே ! (தூங்கு)

# கவிக் குயில்

காலைக் கதிரவன் வானி லுதித்திடும்
காட்சியைக் கண்டதுமே–குயில்
ஆல மரக்கிளை மீதி லமர்ந்திசை
அள்ளித் தெளித்திடுதாம் !

கொத்தித் திரிகிற கோழியின் குஞ்சுகள்
கூடிப் பிழைத்திடவே–குயில்
சித்தங் கனிந்துநற் புத்தி மதிகளைச்
சிந்திக்கச் செப்பிடுதாம் !

கூகையின் குஞ்சுகள் சோகம் மறந்துதம்
கூட்டி லுறங்கிடவே–குயில்
தாகந் தணிகிற பாகுக் குரலினில்
தாலேலோ பாடிடுதாம் !

கூடிப் பறந்திடும் சோடிப் புறக்களைக்
கூவி யழைத்திடுதாம்–குயில்
காடு கனைளில் வேடன் விரித்திடும்
கண்ணியைக் காட்டிடுதாம் !

பருந்துக் கரசன் விருந்துக் கழைத்'தொரு
பாட்டினைப் பாடெனவே' – குயில்
பொருந்திடும் பண்ணில் திருந்திட வேயுயர்ப்
போதம் புகட்டிடுதாம் !

நாவி லிருந்திசை பாவில் படிந்து
நலன்தரும் வேளையிலே–குயில்
' கா ' வெனக் கத்தியோர் காக்கை வருவதைக்
கண்டு பறந்திடுதாம் !

அயல்நலம் பேணப் பயின்றபே ரன்பும்
அறிவும் அமைந்திருக்கும் – கவிக்
குயில்நலம் பேணப் பயின்றவர் யாரும்
குவலயத் தில்லை கொலோ !

# மாடு

எங்கள் வீட்டு மாடு பாரில்
இணையில் லாத மாடு !
கொங்கு நாட்டு மாடு ! செல்வம்
கூட்ட வுள்ள மாடு !

நுடங்கும் வாலும் கொம்பும் காதும்
நுனிசி றுத்த தோடு
மடிகு ளம்பு கண்பெ ருத்து
மதிப்பு வாய்ந்த மாடு !

அருமைக் கன்றை நக்கி யூட்டி
அகங்க ளிக்கும் மாடு !
பரும னான தவலை வடியப்
பால்க றக்கும் மாடு !

பச்சை யான புல்லைக் காணின்
பரப ரப்பி னோடு
இச்சை யாறத் தின்ற பாலை
இனிமை யாக்கும் மாடு !

பசுவி ருக்க வுரமுங் கூடிப்
பயிர்செ ழிக்கும் காடு ;
சுசிமி குந்து சோறும் சாறும்
சுவைக்கப் பண்ணும் வீடு !

பாலும் நெய்யும் மோரு மாகப்
பயன்ப டுத்தும் நாடு !
காலம் முற்றும் சேம மன்றிக்
காண்ப தில்லை கேடு !

குழந்தை பேணு மன்னை யென்னக்
குடியைப் பேணும் மாடு !
தொழத்த குந்த மாடு காணித்
தொழுவி லுள்ள மாடு !

# பண்டிகை

பண்டி கையாம் பண்டிகை !
படாஅர் படர்அர்ப் பண்டிகை !
பெண்டு பிள்ளை யனைவருக்கும்
பிரிய மான பண்டிகை !

வேண்டு கோளு மாகவே
வேடிக் கையு மாகவே
வாண்டுப் பையல் வக்கணங்கள்
வாரிக் கொட்டும் பண்டிகை !

கடையில் நீண்ட காலமாய்க்
கசங்கி நைந்த துணியெலாம்
உடைக ளாகி வீடுதோறும்
உவக்க வந்த பண்டிகை !

பையன், பாட்டன் அனைவரும்
பண்ணு மவச ரத்தினல்
தையற் காரர் கையும் காலும்
தவித விக்கும் பண்டிகை !

மாம னார்கள் பெட்டியில்
மறைந்தி ருந்த நோட்டுகள்
தாமி ருந்த தலத்தை விட்டுத்
தப்பி யோடும் பண்டிகை !

என்று மில்லா வழக்கமாய்
எழுந்தெல் லாரும் இரவிலே
நன்று தேய்த்துக் குளித்துவிட்டு
நகைக்கப் பண்ணும் பண்டிகை !

புத்தம் புதிய வுடைகளால்
புசிக்கும் அப்பம் போளியால்
தித்திப் பான பண்டிகை !
தீபா வளியிப் பண்டிகை !

# உணர்வுகள்

தன்னை யறிந்து
　　　　தனையுயர்த்தித் தன்னறிவால்
தன்னையாட் கொள்வதுதான்
　　　　நம்பிக்கை – என்னை
புலரும் பொழுதில்
　　　　புலன்கவரப் பூத்த
மலரின் மணமதன்
　　　　மாண்பு.

# கேள்வி

என்ன எண்ண வேண்டும் ? இனி நான்
என்ன பேச வேண்டும் ?
என்ன கேட்க வேண்டும் ? – இனி நான்
என்ன செய்ய வேண்டும்

நினைவு கூறு கின்றேன் – பிறர்முன்
நின்று வினவு கின்றேன் !
மனித னாய்ப்பி றந்தோன் – மலர்போல்
மணங்க மழ்வ தற்கும் ? (என்ன)

அண்டி னோரை யண்டி – யணைத்தே
ஆத ரிக்க வும், கற்
கண்டு போன்ற சொற்கள் – கூறிக்
களிப்பு மூட்டு தற்கும் ! (என்ன)

பசுமையான பயிர்கள் – வெயிலால்
பரித விக்கும் போது,
விசும்பி னின்று வீழும் – மழையாய்
விளங்கி வாழ்வ தற்கும் ! (என்ன)

பொன்ன விர்ந்த மேனி – புதுமை
பூத்தொ ளிர்க ருங்கண்
சின்னஞ் சிறுகு ழந்தை – யெனவே
சிரித்து வாழ்வ தற்கும் ! (என்ன)

இனிமை யான தென்றல் – அதிலும்
இனிமை யான நிலவு,
இனிமை யான இசையாய் – உலகை
இனிமை செய்வ தற்கும் ! (என்ன)

'கன்றை யீன்ற மாடு – குஞ்சைக்
காத்தி டுங்க போதம்'
என்று கூறு மாறாய் – மக்கட்
கேவல் செய்வ தற்கும் ! (என்ன)

# சிந்தனை

சிந்தனை செய்வதுதான் – நமது
செயல்களில் சிறந்த செயல் !
விந்தைகள் விளைவிக்கச் – சிந்தனை
வேறென விளம்புகிறார்.

நிந்தனை நீங்கிடவும் – நிலத்தில்
நெறிமுறை நின்றிடவும்
சிந்தனை செய்வதுதான் – சிறந்தோர்
செய்திடும் முதல் செயலாம்

தந்தையி னும் அதிகம் – அன்புத்
தாயினும் நனி யதிகம்
சிந்தனை நன்மை செயும் – அரும்பெரும்
செயல்களைச் செய்திடவே !

சந்திர னில்லையெனில் – வானம்
சாந்தியை யளிக்காது !
சிந்தனை யில்லையெனில் – மனிதன்
செப்புக் காசுபெறான் !

வந்தனை வழிபாடு – அமர
வாழ்வு மற் றவையாவும்
சிந்தனை செய்பவனைத் – தேடிச்
சேர்ந்திடும் சிறப்புறவே !

எந்திர சாதனைகள் – ஏற்ற
இனியகற் பனைக்கலைகள்
தந்திரம் தவமெதற்கும் – சிந்தனை
தாயெனச் சாற்றிடுவர் !

சிந்தனை யே சக்தி – சிறந்த
சிந்தனை யே யுக்தி,
சிந்தனை யே பக்தி – செய்த
சிந்தனை யே முக்தி !

# ஆக்கம்

மடங்கல் தனைப்போலும் – மங்கா
மதியி னொளி போலும்
உடலை யுரமாக்கு – உனது
உளத்தை விரிவாக்கு !

அடுத்த பொழில் போலும் – மலரில்
அவிழ்ந்த மணம் போலும்
இடத்தை யெழிலாக்கு – உனது
இயல்பை வெளியாக்கு !

கடல்வெண் ணுரைபோலும் – உருகிக்
கமழும் நெய் போலும்
உடையைத் துவைத்தாக்கு – உனது
உரையைச் சுவையாக்கு !

புடத்தில் பொன்போலும் – உண்மைப்
புலவன் கவிபோலும்
நடத்தை நலமாக்கு – உனது
நட்பை நிலையாக்கு !

நடுமை யகம் போலும் – மகவின்
நகைத்த முகம் போலும்
கடமை கருத்தாக்கு – உனது
கலையைக் கவினாக்கு !

குடையும் நதிபோலும் – பளிங்காய்க்
குளிர்ந்த நீர்போலும்
புடவி பொதுவாக்கு – உனது
புலமை புவிக்காக்கு !

படிப்பின் பயன்போலும் – பருதி
பகைத்த பனி போலும்
குடியைக் குண மாக்கு – உனது
குறையை யற நீக்கு !

# ஆர்வம்

உயிரை யோம்புதற் குணவளித்திடும்
உழவ னானால்நான்,
பயிர்கள் பயனுறப் பண்ணிப் பசியினைப்
பறக்க டித்திடுவேன் !

ஆயி ரம்பொற் காசை டைந்திடற்
கருக னானால் நான்.
வாயில் லாதவர் வறுமை தீர்ந்திடும்
வழிவ குத்திடுவேன் !

அறத்தைக் காத்திடு மரிய படைக்கொரு
அதிப னானால் நான்,
மறத்தைக் காட்டுத லின்றி மனத்தினை
மாற்றி வென்றிடுவேன் !

அறிவுத் திறமையி லரசு காத்திடும்
அமைச்ச னானால்நான்
உறுவ தனைத்தையு மோர்ந்து ரைத்திடை
யூறு தீர்த்திடுவேன் !

வெற்றி வேலினை யேந்தி விளங்கிடும்
வேந்த னானால் நான்,
பெற்ற பிள்ளையென் றுற்ற வுலகினைப்
பேணிக் காத்திடுவேன் !

சீவ ராசிகள் செனிக்க வைத்திடும்
செயல னானால் நான்,
சாவில் லாது படைத்துச் சாந்தியைச்
சகத்தில் நிறுவிடுவேன் !

புவியில் போற்றிடும் நூல்கள் பயின்றொரு
புலவ னானால் நான்,
கவிதை காவிய மியற்றிக் களித்திடக்
கவலை தீர்ப்பேனே !

# நாட்டம்

நல்ல வழிகளில் செல்லவே
என்மனம் நாடுது – என்றும்
நன்மைக் குறைவிட மானவர்
தம்மையே கூடுது !
புல்லர் புரட்டர்க ளென்றுகண்
டால்மிக வாடுது – பூமி
பொன்பொருள் யாவினும் தன்மதிப்
பொன்றையே தேடுது !

அவனை யிவனைச் சுரண்டும்
பிழைப்பை வெறுக்குது ; – பிறர்
' அடிமை யெனுங்குரல் கேட்கவே
கோபம் பிறக்குது '
எவனையு மேயிழி வென்று
நினைக்க மறுக்குது ; – என்றும்
இயன்ற அளிவி லுதவிகள்
செய்யப் பறக்குது !

புகழ்ந்திடும் வோர்களைக் காணவும்
என்னுளம் கூசுது ; – ஒரு
பூ வெனப் பேரறி ஞர்தமை
யென்னுயிர் மூசுது
மகிழ்ந்திட வேண்டின் மகவென
வாழவும் பேசுது ; – மண்ணில்
மானாபி மானமில் லாமலே
வாழ்வதை யேசுது !

அடங்கி நடக்கும் வழக்கமென்
நெஞ்சை யிடிக்குது ; –உண்மை
அன்பறி வாற்ற லுறுதியென்
றெண்ணிப் படிக்குது !
மடங்கலைப் போல நிமிர்ந்து
நடக்கப் பிடிக்குது – நல்ல
மட்டு மரியாதை பெற்றுயிர்
வாழத் துடிக்குது !

# உயர்வு

நமையு யர்த்திட லாமென்னாளும்
நமையு யர்த்திடலாம் !
தமையு யர்த்துவ தும்த மக்கொரு
தரும மென்றிடலாம் !

அறிவி ருப்பதன் பயனனைத்தையும்
அலசி யறிவதாம் !
திறமி ருப்பதன் பயன னைத்தையும்
திருந்தச் செய்வதாம் !

துயர மூட்டுந் தாழ்வுக் கெல்லை !
தோன்றப் பயிலலாம் !
உயர்வுக் கெல்லை யில்லை மேலும்
உயர முயலலாம் !

சுற்றஞ் சூழ நட்பு கெழுமச்
சுகத்தைக் காணலாம்
குற்றங் குறைகள் கூட்டி யெறிந்து
குணத்தைப் பேணலாம்

ஊழ்வி னைநமைப் பாழ்ப டுத்துமுன்
உதறி யெறியலாம் !
வாழ்வில் புகழை யொளிர நிறுவும்
வகையை யறியலாம் !

கவலை தீர்ந்த நிலையில் நமது
கருத்தை யுறுத்தலாம் !
அவலம் தீர்த்திவ் வுலகம் போற்றும்
அமைதி நிறுத்தலாம் !

அமர ராக லாம தன்றெனில்
அரக்க ராகலாம் !
நமது செயலின் நன்மை தீமை
நமைய மைக்கிறதே !

# தெளிவு

உள்ளந்தெளிந்திட வேண்டு முலகினில்
உள்ள மனிதலெல் லாருக்கும் !
வெள்ளி முளைத்திருள் கள்ளம் வீழ்த்தி
விளக்கும் வைகறை வேளையாய் !

' அகத்தி லுறையறி யாமை யகன்றறி
வமைய வாய்ந்திடும் தெளிவுநம்
முகத்தி லுறைகிற விழிகள் போல்மிக
முக்கி யம்' மென மொழிகுவர் !

ஓன்றுக் கொன்று முரண்ப டும்வித
முள்ள நூல்க ளனைத்தையும்
நன்று கற்றுள மொன்றி யாய்ந்திடின்
நனியும் தெளிவினை யெய்துவோம்

தெளிவி லாப்பெரு மனித ராலின்று
தேசம் படுகிற தொல்லைகள்
அளிவிட் டுரைத்திட வல்ல வொருவரிவ்
வவனி மீதினில் இல்லைகாண் !

தேசம், மதங்குலம், தெய்வம், பயின்றிடத்
தேரும் கலை, பொரு ளாட்சியாம்
நேசம் பகையுற வெதிலும் நேர்ந்துநம்
நெஞ்சு தெளிவுறல் மாட்சியாம் !

அறிவி லாதவ னசட னற்பனும்
அன்றி யறிவினைப் பேணு வோர்
இருளை நீக்கிடும் தெளிவெ னும்விளக்
கேற்றி னின்புறக் காணுவார் !

சீவ னுறுந்துணை யென்ன வாழ்வினில்
சிந்தை தெளிந்திடி னன்றி, வீண்
பாவ னைகள் நடிப் பால்பெ றும் சிறு
பயனு மில்லை படித்ததுமே !

# சத்தியம்

பாத்திர மான பலரும் படித்துப்
பரவசப் பட்டுப்பா ராட்டுகிற
சாத்திரங் கட்கொரு நேத்திரம் போன்றது
சத்திய மொன்றெனச் சாற்றிடுவார் !

எத்தனைக் கெத்தனை சிந்தனை செய்யினும்
எத்தனை பேரை வினவிடினும்
இத்தரை மீதினில் சத்தியத் துக்கிணை
சத்திய மென்பதுவே விடையாம் !

அச்ச மணுவள வேனுமில் லாதது
அன்பு கலந்தழ காகியது
குச்சினில் வாழவும் வல்லது கூர்ந்து
குவலயம் ஆளவும் வல்லதுகாண் !

கூட்டி யெடுக்கிற தோட்டி யெனினுங்
குறைத்து மதிப்பது மில்லையது !
நாட்டினை யாளு மரச னெனினும்
நயந்து துதிப்பது மில்லையது !

புத்தகம் பற்பல கற்றுத் தெளிந்த
புலவ ரிதயம் புகலிடமாம்,
மெத்தப் பெரிய அறிஞர் செயல்களை
மேவி நிலைத்து மிளிர்வதுவாம் !

சொத்து சுகமதி கார மனைத்தினும்
சோதியாய் நம்மைத் துலக்கிவிடும்
சத்திய மேநெறி சத்திய மேயறம் !
சத்திய மேகுறி யாவதுவாம் !

உத்தமர் தங்க ளுடனுற வாடி
யுலுத்தரை யோர மொதுக்கிவிட்டு
நித்திய மானஇச் சத்திய மோங்கி
நிலவுக என்றும்நம் நெஞ்சினிலே !

# அறிவு

தாயென வேயொரு வார்த்தை தளர்ந்து
தவிப்பவர்க் குரைத்திடுவேன் – நாம்
ஆயுளி லொருமுறை யாயினு மில்லைநொந்
தழவேண் டியநேரம் !

அரியதோ ரவயவ மரியதோர் செயல்முறை
அரியதோ ரறிவமைந்தே – நாம்
உரியதோ ருலகினி னுளமகிழ்ந் திடவுறைந்
துவப்பவ ராயிடுவோம் !

அறிவதை யறிந்துநன் கழகுடன் செய்திடின்
அவலமு மணுகாது ! – நாம்
பெறுவதைப் பெற்றபின் பிழையறப் பேணிடின்
பிணக்குகள் பெருகாது !

அகலமு மாழமு மாகவே நீர்நிலை
அலைக ளடித்திடினும் – நாம்
சுகமுடன் கடந்திட லாமதில் நீந்திடும்
சூக்கும மறிந்திருந்தால் !

வஞ்சனை வசைமொழிவாது வழக்குகள்
வளர்ப்பவ ரில்லையெனில் – நாம்
பஞ்சமும் பகைபிணி பட்டினி யிழவெனப்
பயப்பட நேராது !

உற்றவர் வாழ்வினி லுற்றது நலமென
உள்ள முவந்திடலாம் ! – நாம்
மற்றவ ருற்றிடுந் துயர்களைப் பரிவுடன்
மாற்றி மகிழ்ந்திடலாம் !

சாதியும் சமயமும் சாமியும் நீங்கிய
சமத்துவ வாழ்வினிலே – நாம்
நீதியில் நிலைத்தொரு பேதமு மின்றி
நிறைந்தினி வாழ்ந்திடவே ! (தாயென)

# நாணயம்

என்னி யல்பிவை யென்ன இயக்கும்
இதயத் துறுதிகளை – என்றும்
பொன்னை யொத்த புனிதப் பொருளெனப்
போற்றிப் புனைந்திடுவேன் !

‘ ஆணும் பெண்ணுமென் றானவர் தம்மை
அளந்து தரமமைத்தல் – அவர்தம்
நாண யம்மெனச் சொல்லுவர் நாடியே
ஞாலத்து நல்லறிஞர் !

நாழி கைப்பொழு தில்லிழக் கும்சுய
நாணயத் தைநயந்து – பின்நம்
வாழும் காலம் முழுதும் வருந்தினும்
வாழ்வில் பெறுவதில்லை !

உள்ள மொன்று புறமொன்று மாயின்
உலக முணர்ந்துவிடும் ! – கண்டோர்
‘ கள்ளன் கள்ள ’ னென் றெள்ளுவ தேயதன்
கைம்மாறு மாகிவிடும் !

உருகும் நல்லியல் புள்ள வுளத்தோ
டுயர்ந்தவ னாய்ப்பிறந்தோன் – ஓரா
மிருக மென்ன யிறுகிடு வானெனின்
மேன்மை யிழந்திடுவான் !

பச்சைப் பயிரினம் முற்றிப் பயன்படும்
பான்மையைப் போல் மனிதன் – பலரும்
மெச்ச வாழ்ந்துயிர் மேன்மை யடைவதே
மெய்யின் மிகுபயனாம் !

மனிதன் நாணய மொன்றினை மாத்திரம்
மண்ணி லிழந்துவிடின் – அந்தோ !
இனியி ழப்பதற் கில்லைவே றொன்றவன்
எல்லா மிழந்தவனே !

# தன்மதிப்பு

நம்மை நாம்மதிப் போம் பிறர்க்குநாம்
நன்மை நாடுவோராய் !
தம்மைத் தாம்மதிக் குந்த ரத்திலித்
தரணி யும்ம திக்கும் !

கரும்பி தென்னவே பகரு மாறுதான்
கருதி முயலுமானால்
விரும்பும் நல்லதோர் வெல்ல மென்னவே
வேம்பு மாறித் தீரும் !

அரச னாண்டியா ராயி னும்மலர்
அணுவும் பேதமின்றி
சரிச மானமா யின்பம் தந்துதன்
தன்ம திப்பு காக்கும் !

புத்தி மிக்கவர் புவியில் உள்ளபைம்
பொன்னைக் காட்டி லும்தான்
நித்தம் தன்மதிப் பென்னு மிதனையே
நெஞ்சில் பேணி வைப்பார் !

தோது செய்துநம் பகைவர் நாடொறும்
துன்பு றுத்தி னாலும்
நீதி யென்றநன் னிலையில் வெல்லவே
நேரும் தன்ம திப்பும் !

நன்மை நாடவும் செய்யும் நம்மை, நம்
நாவி னா லுரைத்த
சொன்ம றாமலும் செய்து சுந்தரச்
சுயம்பு வாக்கி வைக்கும் !

கவிஞ ரென்பவர் கண்டு காட்டியே
கைச லித்து விட்டார் ;
' அவர வர்மதிப் பவர வர்கரத்
தடங்கி யுள்ள தென்றே !

# தகுதி

ஒவ்வொரு நாளா யோயாமல்
ஓடித் தொலையுது நம்வாழ்நாள் !
எவ்வித மிருந்தினிக் கழிப்பததை
என்பதை யெண்ணி யியம்புகிறேன்.

பகைமை யெனும்பிணி யணுகாமல்
பண்புடன் நன்மொழி பகர்ந்திடுவேன் ;
தகைமை யெனும்பொருள் தவறாமல்
தனிமையில் நின்று திரட்டிடுவேன்.

இகழினும் புகழினு மொருபொருளாய்
இதயந் தனிலதை யிருத்தாமல்,
அகம்புற மிரண்டி லு மமைதியுடன்
அறங்கடைப் பிடித்தினி யொழுகிடுவேன்.

நண்பனு மன்பனு மென்னாமல்
நடுநிலை யுடன்நலம் நாடிடுவேன் ;
பண்பினில் வருவது துயரெனினும்
பாங்குடன் பற்றி யியங்கிடுவேன்.

நடைமுறை நியதிக ளௌதனையுமே
நன்கறிந் தலசியா ராய்ந்திடுவேன் ;
கடமையைச் செய்து முடிப்பதிலென்
கால மனைத்துங் கழித்திடுவேன்.

நெருப்பெனக் கொளுத்திடும் வெயிலெனிலோ
நீரென அக்கணம் மாறிடுவேன் ;
பொருப்பினில் நடுங்கிடும் குளிரெனிலோ
பொதிநெருப் பாக விளங்கிடுவேன்.

ஒவ்வொரு நாளா யோயாமல்
ஓடித் தொலைந்திடும் வாழ்நாளில்
இவ்விதம் வாழ்ந்திருந் திறப்பதிலே
இம்மியும் தவறே னினி நானே !

# முயற்சி

முயலுக, நன்கு முயலுக ! – முழு
முச்சில் முயன்றிடுக !
பயி லுங் கலைக ளனைத்திலும் – பெரும்
பயனை விளை த்திடுக !

காரிருள் கவ்வினும் வாழ்க்கையில் – துளி
கலக்கமில் லாதவனாய்ச்
சீரிய ஞான விளக்கினால் அறிஞன்
சிறக்க முயலுகிறான் !

காட்டி லிரைநனி தேடவே – தனது
கண்ணின் மணிகளெனக்
கூட்டினிற் குஞ்சுகட் கூட்ட வே – தினம்
குருவி முயல்கிறது !

தின்னும் பொருளெனத் தேர்ந்ததும் – தேவை
தீர்க்க விரும்புகிற
சின்னஞ் சிறுசிற் றெறும்பதைப் – புற்றில்
சேர்க்க முயல்கிறது !

காலைப் பொழுதி லிருந்துதான் – மாலைக்
கங்குல் கவியும்வரை
சோலை மலர்மது சேர்க்கவே – ஈயும்
சொக்கி முயல்கிறது !

உற்ற நலன்கள் உதறியே – ஊன்றி
உண்மை யுணர்ந்தொழுகிக்
கற்றவர் நெஞ்சம் கமழவே – கவிஞன்
கருதி முயலுகிறான் !

எல்லையில் லாத வெளிதனில் – இருந்
தெங்கு மிருளகல
நல்லொளி நல்கும் பருதியும் – வானில்
நாளும் முயல்கிறதே !

# தனிமையில் இனிமை

தங்க நகைசெய்யும் தட்டானை யொத்துள்ளீர்
எங்கும் திரும்பாதிவ் வாறிங்கே – முங்கி
அமிழ்ந்த நிலையில் அகமொன்றி யாங்கு
தமிழ்நூலி லொன்றித் தனித்து?

சித்திரத்தைப் பார்த்து நான் சிந்தைக் குரைத்ததிது
பத்திரம், பொற் பாவையிவள் தோற்றம் – நித்திரையைப்
பங்கப் படுத்தாது, பாழாய்ப்போ காதிரவு
இங்கிதமாய் ஏகுமிந் நாள்

ஒற்றை யொருசொல் உதிர்ந்த துளங்கொண்டும்
சற்றும் விளங்காமல் சமர்த்துப்பெண் – மற்றும் நீ
உற்றதனை யோர வுரையென்றே னுள்ளம்
பற்றியதை யாயப் பகுத்து.

முகத்துதிகள் செய்ய முயலாது முன்வந்
திகத்தில் முனிந்தாங் கெதிர்க்கா – தகத்தில்
தூய நினைவுகள் தோன்றத் துணிந்து நூல்
ஆய முனையு மகம்

பணம்சேர்ப்ப தொன்றே பழகிப் பாங்காய்
குணம் சேர்த்த லொன்று குறைத்தீர் – மனம் சேர்த்தால்
ஏமாளி யென்றுலக மேசு மிசையில்லாக்
கோமாளி யென்று குறித்து.

முண்மரத்தின் மீதுமண முல்லைமலர்ந் துள்ளதெனின்
கொண்மனிதன் கொய்து கொள்வான்கொல் – உண்மனிதன்
நல்லதையே நாடி நயந்துகொடுத் தாலுமிழி
புல்லனதைக் கொள்ளான் புரிந்து

# விழாக்கள்

" ஊருயர உற்றார்
        உறவுயர உற்றவொரு
பேருயரப் பெற்றோர்தம்
        பெட்புயர – சீருயிர்க்கும்
நாவல் லோன் ஞானி,
        நகைமுகத்தன் ஆன அவன்
சாவில்லோன் ஆனான்
        சகத்து."

# புத்தாண்டு

கால மென்னுமழி யாத கன்னியவள்
கவினு றக்கரு வுயிர்த்தனள் !
ஞால மின்னொருபுத் தாண்டு கண்டதென
நவின்று மெய்புளக மெய்தவே !

ஆறு பொழுதுபெரி தான கூதிர்கார்
அழகு வேனில்பனி மாதமாய் ;
ஆறு பொழுதுசிறி தான காலை பகல்
அந்தி யாமமெனும் பே தமாய் !

துன்பு றுத்துமிருள் தொலைய வானமதில்
தோன்றி வந்தவிடி வெள்ளியாய்
இன்பு றுத்திடவும் வந்து தித்ததென
இதயம் பொங்கிக்களி கொள்ளுதே !

மூன்று நூறுமிரு முட்ப தைந்து டனும்
முருகு மலரிதழ்கள் நாளென
தோன்று நூலில்தொகுப் பாகித் துன்பமறத்
துலங்கி மன்னுயிரை யாளவே

பொன்ன விர்ந்தபுது வருட மின்றெனவும்
போற்றி யகமகிழப் புல்லுவோம் !
பன்னரும் நலனு முன்னில் தோன்றுமெனப்
பரவசத் துடனும் சொல்லுவோம் !

உள்ள மெனும்மலரில் ஊறும் மதுவெனவே
உணர்ச்சி பொங்கியொரு பாடலாய்ப்
பள்ளி நீத்தகுயில் பாட வண்டுதுணைப்
பண்ணி சைக்கம்பி லாடலாய்,

வாழ்த்தி சைத்துவர வேற்கும், ' எங்களது
வாழ்க்கை யென்னும்பூங் கொத்திலே
ஊழ்த்த நறுமலரே உய்க்க ! ஒன்றிநனி
உலக மெய்திடுமின் பத்திலே !

# மே தினம்

' போதலரும் போதாய்ப பொதுவுடைமைப் பூதலத்தின்
மீதலரு' மென்று மிடுக்குடனே – ஓதலுறக்
கோதலரும் கொள்கைக் கொடியோரால் கூடுகிற
தீதுலரச் செய்யும் தினம் !

அறிஞ ரகமலர, அட்டையாய்ச் செல்வம்
உறுஞ்சுவோ ருள்ள முலர, – வறிஞராம்
பாட்டாளி மக்கள் பரவசப் பட்டவராய்க்
கூட்டாளக் கூடும் தினம் !

' கையூட் டதுவொன்று, காப்பூட் டதுவொன்று,
பையூட் டதுவொன்று பாழென்று – மெய்யூட்டி
எண்ணி யெடுத்தெறிந்தாங் கிவ்வுலகைச் செப்பம்செய்
புண்ணியர்கள் போற்றும் தினம் !

' முல்லை நறுமணத்துள் மூழ்கி யிளந்தென்றல்
புல்லப் புகுந்த பொழுதொப்ப –நல்லதெனும்
மேதினம் மே லானோர்தம் மேனிபுள கம்போர்க்கும்
மா தினம் தன் மானத் தினம் !

# சுதந்தர நாள்

என்றென்று மெங்கணும் நின்று நிலவுக
இன்பச் சுதந்தரநாள் ! இன்று
மன்றில் மலர்ந்து மனையில் கமழ்ந்திடும்
மங்கல மாகிய நாள் !

துன்ப இருளைத் தொலைத்துக் கதிரெனத்
தோன்றித் துலங்கிடும்நாள் – என்றும்
இன்ப வொளியைப் பரப்பிச் சமத்துவம்
எய்த இலங்கிடும் நாள் !

உன்னத மானநம் ஒற்றுமைச் சக்தி
உலருக் குணர்த்திடும் நாள் – ஈன்ற
அன்னையெம் பாரத தேவியி னின்னல்
அனைத்து மகன்றிடும் நாள் !

நித்திய மானசு யாட்சி நிலைத்து
நினைவி லிருத்திடும் நாள்
புத்தம் புதிய வுணர்வுகள் பூத்துப்
பொலிந்து கமழ்ந்திடுநாள் !

உடைமை யனைத்தினு மொன்று முரிமை
உவந்திடப் பற்றியநாள் – நின்ற
அடிமை விலங்குடை பட்டுக் களிக்கும்
அமைதிக் கடிப்படை நாள் !

சீரிய தான நெறிதனி லேசினம்
செற்றம் சிறுமையின்றி – நன்று
பாரத வீரப் புதல்வர்கள் வெற்றிப்
பதாகை யுயர்த்திடு நாள் !

பண்ணிய லின்பத் தமிழிசை பாடிப்
பரவச மெய் திடுநாள் ! – இன்றெம்
அண்ணலெம் காந்தியின் எண்ணம்கை கூடிய
ஆனந்தச் சுதந்தர நாள் !

# இன்பத் தீபாவளி

'காசைக் கரைக்கும் தீ பாவளி' காணெனக்
கவலைப் படுபவராய்த் – தந்தை
ஏசித்தன் கையினில் காசுகா ணாமலே
இன்னலுற் றுரெனினும் – என்றன்
ஆசைக் கணவனும் நேசமாய் வந்தெனக்
காறுதல் செய்ததனுல் – தோழி !
வாச மலர்களில் வீசும்தென றல்லெனும்
வண்ணம் இனிக்குதடி !

'சீவனை வாங்கும்தீ பாவளி' சேர்ந்தெனச்
சிந்தையும் நொந்தவராய்த் – தந்தை
நோவது வாகியே ஆவி பதறவே
நொந்து குலைத்திடினும் – நோகா
தாவலு டன்சொந்தக் காவலன் வந்தென்
அகங்குளிர் வித்தனால்– தோழி
கூவும் குயில்கிளி மேவிடும் சோலைக்
குதூகலம் கூடுதடி !

'தொந்திர வானதீ பாவளி' தானெனச்
சொல்லி யலுத்தவராய்த் – தந்தை
சிந்தனை யோடு செயல்தடு மாறியே
சீரழி வெய்திடினும் –இன்று
சுந்தர னாகிய என்பதி வந்து
சுகத்தை யளித்ததனால் – தோழி !
மந்திர மோதியே மாங்கனி வீழ்த்தும்
மகிழ்ச்சியுண் டாகுதடி !

'சிந்தியா தார்க்குத்தீ பாவளி' தானெனச்
சீற்றம் மிகுந்தவராய்த் தந்தை
நிந்தியா நின்றுதம் நெஞ்சு வருந்தியே
நெட்டுயிர்ப் பெய்திடினும் – இன்று

வந்தியா நின்றஎன் வாழ்க்கைத் துணைவர்
வருகை புரிந்ததனால் – தோழி !
இந்தியா வுற்ற சுதந்தர நாளென
இன்பம் பெருகுதடி !

❊

உண்மை உளதாயின்
உள்ளத்தில் ஒப்பற்ற
திண்மை உளதாகும்
தேகத்தில் – ஒண்மை
உளதாகும் வாக்கில்
ஒழுகல் உளதாயின்
உளதாகும் நோக்கில்
உயர்வு.

# சுதந்தர விழா

கொக்கரக் கோவெனக் கூவிடும் கோழி !
கும்கும் கும்மெனக் கொட்டும் முரசு !
செக்கச் சிவந்தொளி சிந்திடும் வானம் !
சீக்கிர மாகச் சிரித்தெழு பாப்பா !
சீக்கிர மாகச் சிரித்தெழு பாப்பா !
சீமை விடுதலை நாளின்று பாப்பா !

காகா காவெனக் கரையுது காகம் !
காமரு பூக்கள் கமழுத னேகம் !
பாகா ரின்னிசை கேட்குது தேகம்
பட்டென றுதறிப் பரிந்தெழு பாப்பா !
பட்டென் றுதறிப் பரிந்தெழு பாப்பா !
பாரின் விடுதலை நாளின்று பாப்பா !

காலைக் கடல்பெண் கதிர்விளக் கேந்தும் !
காக்கும் சுதந்தரத் தாயர சேற்கும் !
மாலைக் கடல்பெண் மகிழ்ந்திட வாழ்த்தும்,
மலர்க்கண் விழித்து மகிழ்ந்தெழு பாப்பா !
மலர்க்கண் விழித்து மகிழ்ந்தெழு பாப்பா !
மாபெருஞ் சுதந்திர நாளென்று பாப்பா !

மேகப் படலம் மெலிந்திட வோட்டி,
மெல்லொளித் தண்கரம் மிடுக்குடன் நீட்டி
வேகத் துடன்எழும் விண்ணவன் போட்டி
வீறு விளங்க விழித்தெழு பாப்பா !
வீறு விளங்க விழித்தெழு பாப்பா !
வீர சுதந்தர நாளின்று பாப்பா !

# திருவிளக்கு

திருவிளக் குத்திரு நாளென இன்றும்
தேசம் தெரிந்துகொண் டாடியே
இரவளிக் கும்இருள் நீக்கிட அன்றோர்
இளஞ னிதயத்தி லெண்ணிவிட்டான்

கருதிய தொன்றைக் கருத்துட னாய்ந்ததன்
காரண காரியம் கண்டறிந்து,
அரிதின் முயன்றுமண் ணாலுரு வாக்கி
அகல்விளக் கொன்றதைச் சுட்டெடுத்தான்

நரக மெனத்துயர் நல்கிய வீடுகள்
நல்லொளி யுற்றுத் திகழ்ந்திடவே
உருகிய நெய்யதி லூற்றியே பஞ்சை
உருட்டி ஒருதிரி யிட்டுவைத்தான்

' அருவருக் கும் இருள் அகலுக இந்த
அவனியி லின்று முதல்' எனவே
திருவிளக் குத்திரி தன்னில் திளைத்தெரி
தீயைச்சி னேகிதம் செய்துவிட்டான் !

சின்னஞ் சிறியது வாயினும் அவ்வெழில்
செல்வத் திருவிளக் கக்கணமே
கன்னங் கரிய இருளை விரட்டிக்
கவினொளி காலுதல் கண்டறிந்தான்

கண்ணகல் ஞால மனைத்தி னெழிலுமக்
கங்குல் பொழுதில் கடுகிவந்து
திண்ணை தெருக்களனைத்து மிலங்கத்
தெரிந்திடும் காட்சி தெரியவைத்தான்.

மங்குமிம் மாலை மயக்கிடை யேஒரு
மங்கல மாகவே அன்று முதல்
தங்க ஒளியைப் பரப்பிடச்செய்யுது
தன்னிக ரற்ற திருவிளக்கு !

# இன்பப் பொங்கல்

சேவலும் கூவியே செப்பிட வண்டினம்
சிந்தை தெளிந்தனவாய் – எழில்
வாவியில், காவினில் வீசும் நறுமலர்
வாசம் வரும்வழியே – இளம்
பாவையர் மேவிடின் கேவல மென்னப்
பரபரப் பாய்ப்பறந்து – கனி
ஆவலாய்ப் போவது காணவே நெஞ்சினில்
ஆனந்தம் பொங்குதடி !

செக்கச் சிவந்த கதிரவ னாலிருள்
செத்து மடிந்ததன்பின் – சினம்
மிக்குச் சிணுங்கும்தம் குஞ்சுக் கறிவுரை
மெத்த மொழிந்தனவாய் – அந்தப்
பக்கம் பசுமைப் படுகையை நோக்கிப்
பறந்து வரும் அரிய – நாரை
கொக்குக் குழாங்களைக் காணவே நெஞ்சில்
குதூகலம் பொங்குதடி !

காலையும் மாலையும் காது குளிர்ந்திடக்
காலில் குடியிருந்து – குயில்
பாலுடன் தேனைக் கலந்திடும் பான்மையில்
பண்க ளிசைக்கையிலே – அந்த
நீல முகிற்குலம் நின்றிளைப் பாறவே
நீண்டு வளர்ந்திருக்கும் – பசுஞ்
சோலையி லேமயி லாடலைக் காணவே
சுந்தரம் பொங்குதடி !

ஊனு முயிரு முருக வுளத்தில்
உவகை சுரந்திடவே – அந்தக்
கானகந் தன்னில் கலையும் பிணையும்
கதிரவன் பொன் னொளியில் – மூழ்கி

மேனியில் புள்ளிகள் மின்னத் திரிந்துநம்
மெய்மறக் கச் செய்வதால் – நறுந்
தேனின் இனியதோர் செந்தமிழ் நாட்டினில்
தேசியம் பொங்குதடி !

✻

பருதி குடிகொண்ட
        பார்வை பண்பட்ட
சுருதி குடிகொண்ட
        சொற்கள் – கருதின்
புவியாள்வோர் பூணாப்
        புகழ் பூண்டான். பூண்டான்
கவியாள்வோர் காணாக்
        கவின்.

# பொங்கல்

பொங்குக பொங்கலும் ! தங்குக மங்களம் !
பூவுல கெங்கணுமே – சேர
எங்கள் தவத்திரு கொங்கு மலிந்ததால்
எங்கும் மலிந்த தென்றே (பொங்குக)

செங்கதிர்ச் செல்வனின் தங்கத் திருவுடன்
சிந்தும் அழகொளியால் – சேரப்
பங்க மடைந்திருள் துஞ்சிடும் பான்மையாய்ப்
பாவம் பதுங்கு தென்றே (பொங்குக)

செங்கழு நீர்மலர்த் தங்கி விழித்திடும்
செவ்வரி மென்கரும்பும் –சேரத்
தங்கொழு நன்றனை யிங்கிதப் பண்ணில்
தடங்கண் மலர்த்து தென்றே (பொங்குக)

செங்கை வளைக ளிலங்கிட மங்கையர்
தேமலர் சூடினராய்ச் – சேர
எங்கும் எழில்மண மெங்கு மிசைச்சுவை
இன்பம் பயக்கு தென்றே (பொங்குக)

செங்கரும் பாயநம் சங்கத் தமிழ்மொழி
செல்வச் சிறாஅ ரிதயம் – சேரத்
தங்கி யினிக்கும் தனியமிழ் தென்னத்
ததும்பிக் கமழு தென்றே (பொங்குக)

சிங்க மெனத்தகும் வீரர்தம் பேரருள்
செய்கை களின்பயனுய்ச் – சேரச்
சங்கு முழங்கிடத் தாரை யொலித்திடச்
சத்திய மோங்கு தென்றே (பொங்குக)

மங்குல் மழையும் பொழிந்தபின், மண்ணும்
மகிழ்ந்தபின் மார்கழிபோய்ச் சேரச்
செங்கதிர்ச் செல்வனும் தென்திசை தீர்ந்து
திரும்பும் தினமிதென்றே ! – (பொங்குக)

# குடியரசு

அற்புத மானதோர் கற்பனைக் காவிய
மாக மலர்ந்திருக்கும் – எங்கள்
பொற்பு மிகுந்த குடியர சே ! உனைப்
போற்றிப் புனைந்திடுவோம் !

தூண்டும் பகைமை யுணர்ச்சி வயத்தராய்த்
தோன்றிய மன்னவர்கள் – உன்னை
ஆண்டிரு நூறு வரையிலு மந்நியர்க்
காட்படச் செய்துவிட்டார் !

தன்னுதி ரத்தி லுதித்த தனையன்
தவறித் தவித்ததொரு – தள்ளா
அன்னை நிலைதனி லுன்னை யடைந்திட
அல்லும் பகலுழைத்தோம் !

ஏந்திய கொள்கை யிணையற்ற வீரம்
இதயத்தில் வைத்தவரால் – இன்று
மாந்தர்க ளுன்னை மறுபடி கண்டு
மகிழ்ந்திடப் பெற்றனர்காண் !

அகிலத்தில் வாழும் குடிகளுக் கென்றும்
அரசுயி ராமெனவே – ஆழச்
சகலத்தை யுங்கற்ற மோசிகீ ரன்மொழி
சான்று பகிர்கிறதே !

கண்ணினி லிட்டுக் கருத்தினில் வைத்துக்
கவினுறக் காத்திடுவோம் – இந்த
மண்ணி லொரேவொரு ஆணெனப் பெண்ணென
மானிட முள்ளளவும் !

ஊழியு சாந்தமு மொப்பற வோங்கியே
உண்மைக் குறைவிடமாய் – உய்த்து
வாழிய எங்கள் குடியர சே ! இனி
வையகம் வாழ்ந்திடவே !

# உளத்தியல்பு

செல்வமிச் செல்வனெனச் சிந்தைகளித் துளள்தாய்
கல்வியும் கற்றுக் கருத்துற்று – நல்வினைகள்
காலம் கணித்துக் கவின்கலை போல் செய்துவக்கும்
சீலனிவ னென்பார் சிலர்.

எதிராய்நின் றென்னை யிகழின்நா னேற்பேன்
புதிராய்நின் றென்னைப் புகழின் – கதிராய் நின்
றுள்ளஞ் சுடுவ துணர்த்தாம லூமையென
விள்ளாது கொள்வேன் விடை.

கன்னித் தமிழ்க்கடலில் கண்டெடுத்த நல்முத்து
மின்னின் கதிரோன் மெலிவான்மற் – றுன்னி
விலையின்றிச் சுடுகவென் றீயின்நான் வேண்டார்
கலையின்றி மூடுவார், கண்.

அறிவதறிந் தாயா ரகத்தூய்மை தோயார்
உறுவதறிந் தாயா வுலுத்தர் – முறுவலது
வஞ்சனையில் தோய்ந்ததெனும் வல்லோர்வாய்ச்
சொல்லுளதென்
நெஞ்சினில் தோய்ந்து நிலைத்து.

குணம் பற்றிக் கொள்ளக் குறள் கற்றுக் கொண்டதனால்
மணம்பற்றி மக்கள் மகிழப்–பணம் பற்றிப்
பற்றதில் வைக்காமல் பண்புகளில் வைத்ததனை
மற்றவர்க் கீவேன், மகிழ்ந்து.

இருட்டி லெழில்விளக் கேற்றுதலே யென்ன
மிரட்டும் திருட்டும் மிரழத் – தெருட்டும்
அறிவினைப் பூண வணுகுவோர்க் கீந்தாங்
குறவினைப் பேண லுவப்பு.

காசுவீண் செய்வதூம் காலம்வீண் செய்வதாய்
மோசமென முன்னோர் மொழிந்ததை – வாசகமாய்
நெஞ்சிற் பதித்து நிலைத்தேன் இனியெவர்க்கும்
தஞ்சமெனத் தாழ்த்தேன் தலை.

உளத்தூய்மை யில்லாதா னூராட்சி யால்தன்
வளத்தை வளர்த்திடநல் வாய்ப்பாகும்–குளத்தில்
குளிக்கப்போய்ச் சேறப்பிக் கொண்டுரோர் வானத்
துளிக்குக்காத் தார்போல் துயர் !

தன்னை யறிந்து தனையுயர்த்தித் தன்னறிவால்
தனையாட் கொள்வதுதன் நம்பிக்கை – என்னை
புலரும் பொழுதில் புலன்கவரப் பூத்த
மலரின் மணமதன் மாண்பு!

மலர்விரிந்து தூய மணம்பரவு மாறுய்ப்
பலர்பரிந்து வாய்மை பரப்பின் – புலரியில்
சூழ்ந்தவிருள் தீரச் சுடர்தோன்றி யாங்குநாம்
தாழ்ந்தமருள் பேரும் தலத்து !

தொக்கி யிருக்கும் சுதந்திரச் சொற்பொருளை
அக்கறையா யாய்ந்தறியோ மாயின்நாம் – எக்காலும்
துக்கம் தொடர்பாகித் தொல்லைகட் காட்படுவோம்
முக்காலிஃ துண்மை மொழி!

அறிவ தறியாதான் ஆண்டவனை வேண்டிப்
பெறுவதொன் றில்லைநாம் பெற்ற – சிறுமி
மணலை யுணவாய் மனத்தில்பா வித்தாங்
குணலொப்ப தாமென் றுணர்!

காலத்தை வீணாய்க் கழிப்போர் கடையரென
ஞாலத்தில் நல்லோர் நவில்வதால் – சீலத்தைக்
கண்ணாகக் காத்துக் கடைத்தேற வேண்டுமெனும்
எண்ணமெனை யீர்த்த திணைத்து

தனிமைக்கிங் கென்னைத் தகவமைத்துக் கொண்டே
யினிமையாய் நேர மியங்க – நனியும் நான்
புனித நூல் கற்றுப் பொழுது கழித்திடுவேன்
மனிதனென வேண்டி மதித்து.

வாழ்வாங்கு வையத்துள் வாழ்ந்தார் வரலாறு
தாழ்வாங்கு வைத்தால் தகர்த்திடுவர் – வீழ்வாங்கு
நேரவே நேராது, நீணத்தில் வேரூன்றப்
பாரெங்கும் பற்றும், படர்ந்து.

பொய்யிற் பிறந்த புனைகதைகள் போற்றிடவே
மெய்யிற் பிறந்த தெனமிழற்றிச் – செய்யில்புல்
நாற்று நடுதலென நம்முளத்தில் நட்டதனை
யேற்றுநலி கின்றோ மிகத்து

சத்தியமே தெய்வமெனச் சாற்றும்சொல் சத்தியமாய்
உத்தமர்தம் முள்ளத் துறைவதுகாண் – பக்தர்கள்
தெய்வ மறியாது தெய்வத்தைச் சேவித்தல்
உய்வதறி யாத உலப்பு!

'தன்னையே தான்தெய் மாக்கல் தக' வென்பர்
தன்னையே தான்தெய்வ மாக்கானேல் – தன்னையே
தானிழந்தோ னானான் தலைகீழாய்த் தாழ்ந்தான் பின்
வானிழந்தோ னானா னவன் !

அம்மையுட னப்பன் அகம்புறமுற் றொன்றித்
தம்மை மகவாய்த் தாம்பயத்தல் – இம்மை
மறுமை: மலர்ந்து மணங்கமழ்ந்து மன்னல்
வெறுமையிறப் பாதல் விதி !

சிந்தித்துச் சீராய்ச் செயல்படுவோர்க் கென்றுமே
நிந்தித்தல் நேரா தெனவோர்ந்து – தந்திரமாய்
ஒன்ற வுரைத்த சொல் ஒன்றிற் றுளத்தி லெனில்
என்றும் பயக்கும் நலம்.

நல்லதோ அல்லதோ – நாம் செய்த தேநம்மைப்
புல்லவே செய்து புசிப்பிக்க வல்லதெனச்
சொல்லாத வாயும் சுவைக்காத காதும்மற்
றில்லாதிங் குள்ளோ ரெவர்?

தெளிவு பெருக்கித் திகழ்ந்திடாத் தேசம்
இளகு முளமிறுகி யெள்ளக் – களவாய்க்
கவலையும் கற்பழிவும் கம்பலையாய்க் கண்ணீ
ரவலம் பெருக்கு மழுது.

எப்போதும் காணாத இன்னல் களிப்போது
தப்பாது கண்டு தவிக்கின்றோம் – அப்பாவோ
தற்காலம் தாண்டி தவிதவிப்பும் தாண்டி
நற்காலம் காண்ப தெந்நாள்.

❋

பின்னிணைப்பு–1

# வாழ்விலிருந்து இலக்கியம்

- கவிஞர். தங்க. முருகேசன்

மாவட்ட த் துணைத் தலைவர்
தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்
கோவை (மேற்கு) மாவட்டம்

தமிழ்க் கவிதை உலகம் மரபுகளை விட்டு விலகி வெகுதூரம் சென்றுவிட்டது. இருப்பினும் முற்றிலுமாக மரபுகளைப் புறந்தள்ளிவிட்டு நவீன கவிதை உலகை நிர்மாணித்தல் என்பது அடிக் கட்டுமானம் இன்றி எழுப்பப்படும் மாளிகையைப் போன்றதாகும்.

ஊடகங்களின் இறுக்கத்தில், எல்லாம் இயந்திரமயமாகிப் போன பொருளியல் வாழ்வியலில், கருத்தியல் வாழ்வியலின் மரபு சார்ந்த இலக்கியம் சாத்தியம்தானா, என்ற கேள்வி எழத்தான் செய்யும்.

மூச்சு முட்டும் வாழ்க்கை ஓட்டத்தின் தொடர்ச்சியாக உயர உயரப் பறந்தாலும் ஆசுவாசப்படுத்திக்கொள்ள பூமிக்கு வந்து தானே ஆகவேண்டும். அப்படியான நேரங்களில் இப்படியான மரபு சார்ந்த இலக்கியங்களை வாசித்தாலே போதும் தமிழ் இலக்கியம் தழைத்து வளரும்.

இலக்கியம் என்பது வெறும் கற்பனைச் சிறகுகளின் கனவுத் தொகுப்பல்ல. வாழ்வின் அகம் புறம் சார்ந்த மெய்யியல் வெளிப்பாடு. ஆகவேதான் இலக்கியம் சத்தியத்தின் மறு உருவமாகப் பார்க்கப்படுகிறது. இலக்கியம் வரலாற்றுப் பதிவாகவும், தலைமுறை கடந்து மனித குலத்தின் வாழ்வியல் படி நிலைகளின் ஆவணமாகவும் திகழ்கிறது. கலையும் இலக்கியமும் சமுதாயத்தின் பிரதிபலிப்போடு காலத்தின் குரலாகவும் ஒலிப்பது.

எனவேதான் மரபு இலக்கியங்களை அந்நியப்படுத்திவிட்டு சமூகத்தைச் சரியாக மதிப்பீடு செய்ய முடியாது.

கவிஞர் வெள்ளியங்காட்டானின் கவிதைகள் எனக்கு அறிமுகமான சூழல் இனிமையானது. குயில் கூவும் மாஞ்சோலை ... இருள் நிழல் படர்ந்த தென்னந்தோப்பு .... மணம் வீசும் மலர்ச்செடிகள் ... இப்படி ரம்மியமான சூழலில் ஒரு மாலை நேரத்து மழை நாளில், நானும் தோழர் டி. மணியும் கவிஞரின் அனைத்து படைப்புகளையும் புரட்டிப் பார்த்து பரவசப்பட்டோம். அதனுள் பயணிக்கிற போது கவிஞனின் கனவு தேசங்கள் விரிந்து பரந்து கிடைப்பதைக் காண முடிந்தது.

இப்படியான கவிதைக் களஞ்சியங்கள் அதிர்வு அலைகள் இன்றி அமிழ்ந்திருந்ததற்கு, கவிஞர் எழுதிய காலத்தில் இருந்த சமூக அடுக்கு முறையின் இறுக்கமும் ஒரு காரணம். குறிப்பிட்ட சமூகப் படைப்பாளிகள் ஒட்டுச் சிறகுகளோடு தத்திப் பறந்து அறிவு ஜீவி வட்ட பிம்பங்களை உருவாக்கிக் கொண்டு அதனுள் வேறு யாரும் பிரவேசிக்காமல் பார்த்துக் கொண்டார்கள். இருப்பினும் மண்ணின் மணத்தோடு கவிஞரின் கவிதைப் பயணம் நீண்டு சென்றுள்ளது.

கவிஞரின் கவிதை உலகம் அலாதியானது; தனித்துவமானது; பளிச்சென்று பரவசப்படுத்தும் விண்மீன்களைப் போன்றது. இசைப்பாடலும், வெண்பாவும், அறுசீர் விருத்தமும் சங்கமித்து ஓடுகின்றன. கவிஞரின் பாடுபொருள் இயற்கை, சமூகம் என விரிவடைந்து செல்கிறது. மொழியுணர்வு தீவிரமாக முகம் காட்டுகிறது. பகுத்தறிவும், பொதுவுடைமைச் சிந்தனையும் கவிஞரின் வாழ்வியல் கருத்தோட்டமாகவும் இருந்திருக்கிறது. அவை படைப்புகளிலும் சமரசமின்றிப் பிரதிபலிக்கிறது. அடிமைத்தளத்தையும், பழைய சம்பிரதாயங்களையும் கட்டு உடைக்கும் கனத்த கவிதைகளில் கனல் தெறிக்கிறது.

எழுத்து ஒரு போராடும் கருவி என உணர்ந்து சமுதாயத்திற்கு எதிரானவற்றைத் தகர்க்க அதனைப் பயன்படுத்த வேண்டும் என்பான் மாக்சிம் கார்க்கி. இதனை நன்கு உணர்ந்திருக்கிறார் கவிஞர். சமூகத்தின் அவலங்களையும், பழைய மதிப்பீடுகளையும் ஆழ் மன விசாரணைக்கு உட்படுத்தி தனது கவிதைகளில் பதிவு

செய்கிறார். அவற்றை நிகழ் முறைப்படுத்தத் தொடர்ந்து போராடியும் இருக்கிறார்.

நான் போராடிக்கொண்டிருக்கிறேன் என்பார் கவிஞர் தமிழ் ஒளி. அப்படியான ஆன்மக் குரல் கவிஞர் வெள்ளியங்காட்டானிடமும் ஒலிக்கிறது. பாரதியின் வாழ்வியல் கூறுகளின் தொடர்ச்சியைக் கவிஞரிடமும் காண முடிகிறது. வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளியின்றி வாழ்தலில் போராடியவர்.

ஒரு கவிஞன் வாழ்ந்ததற்கு அடையாளமே அவனுடைய காவியப் படைப்புகள் தான் என்ற கவிஞர் தமிழ் ஒளியின் வார்த்தை நினைவிற்கு வருகிறது. அப்படியான வாழ்தலில் பத்துப் படைப்புகளைத் தமிழ் இலக்கியத்திற்குத் தந்திருக்கிறார் கவிஞர் வெள்ளியங்காட்டான்.

கவிஞரின் முதல் கவிதைத் தொகுதி 'இனிய கவிவண்டு' 1948-ல் வெளிவந்தது. அது நாற்பதுகளின் தொடக்கத்தில் பல்வேறு இதழ்களில் வெளி வந்த இசைப்பாடலின் தொகுப்பாகும். இரண்டாவது கவிதைத் தொகுதி 'எச்சரிக்கை' அச்சு வடிவம் கண்டு சமூகத்திற்குச் சென்றடையாமல் போனது. கால வறுமை, 'எச்சரிக்கை' நூலின் ஒரு பிரதியைக் கூட விட்டு வைக்கவில்லை. இதன் தொடர்ச்சியாக கவிஞன் (1967), தாயகம் (1974), அறிஞன் (1977), தமிழன் (1979), பரிசு (1980), புரவலன் (1984) போன்ற கவிதை நூல்கள் வெளிவந்தன. துணைவி, கவியகம் கையெழுத்துப் பிரதியாகவும், தலைவன் தட்டெழுத்துப் பிரதியாகவும் விடியலுக்காக விழித்துக் கொண்டிருக்கிறது.

கவிஞர் கவிதையில் மட்டுமல்லாமல் குறுநாவல் பக்கமும் பார்வையைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார். 'இருளும் ஒளியும்' என்ற குறுநாவல் தொகுப்பில் ஐந்து நெடுங்கதைகள், கதை வானில் கண் சிமிட்டுகின்றன.

கவிஞர் சில ஆண்டுகள் கர்நாடக மாநிலத்தில் தங்கிக் கன்னட மொழியைக் கற்றுக் கொண்டும், கன்னட இலக்கியங்களை மொழி பெயர்க்கும் முயற்சியில் முனைப்பு காட்டியுமிருக்கிறார். குழந்தைகளுக்கான அறுபது நீதிக் கதைகளையும் எழுதியிருக்கிறார்.

ஆயிரத்து ஐம்பது பழமொழிகளைத் தொகுத்திருக்கிறார்.

'ஆன்மீகம்' என்ற கட்டுரைத் தொகுப்பில் இருபத்து இரண்டு கட்டுரைகள், உரை நடைக் களத்தில் அணிவகுப்பு நடத்துகின்றன. அவை உபநிடதத்தை முழுவதுமாக உள்வாங்கிக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாகும். ஆன்மீகத்தை அறிவியல் பூர்வமாக மீள்பார்வை செய்து, மந்திர உச்சரிப்பாளர்களையும், சோதிடர்களையும் விசாரணைக்கு உட்படுத்துகிறார். இப்படிப் பல பதிவுகள் வெளிச்சத்துக்கு வராமல் இருந்தாலும் அவை கவிஞரின் பன்முக ஆளுமைக்குச் சான்றாக அமைகின்றன.

பொதுவாகப் பொட்டல் காட்டில் வசித்தாலும் கவிஞனுக்கு அதன் புழுதிக் காற்றுகூட சுகமாகத்தான் இருக்கும். கவிஞர் பிறந்த ஊரான வெள்ளியங்காடு நீலகிரி மலையின் அடிவாரத்துத் தொட்டில். வாழையும் தென்னையும் தெம்மாங்கு பாட, திராட்சையும், கரும்பும் தேனாய் இனிக்கும் பசுமையான கிராமம். இராமசாமி என்ற தனது இயற்பெயரை எங்கும் சுட்டாமல் வெள்ளியங்காட்டான் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு மண்ணின் மைந்தனாக இறுதிவரை வாழ்ந்திருக்கிறார்.

இக்கவிஞர், கலைஞன், உழவன் என்ற வரிசையில் கவிதை நூல்கள் கொண்டு வரவேண்டும் என ஆசைப்பட்டிருக்கிறார். அவை வாழ்நாளில் நிறைவேறாமல் போனது. இப்படியான நிறையக் கனவுகளோடு வாழ்ந்திருக்கிறார். கவிஞரின் வாழ்வு என்பது இடப்பெயர்வு வாழ்க்கையாகவே இருந்திருக்கிறது.

கவிஞரின் எல்லாப் படைப்புகளையும் மறுபதிப்புச் செய்வது, வெளிவராத படைப்புகளையும் தமிழ் மக்களுக்கு அளிப்பது என்பது கவிஞரது மகளின் விருப்பம். அவரின் பேரன் திரு.மகேந்திரனின் ஆசையும் கூட ..... அதற்காக ஒரு முயற்சியை கோவை மேற்கு மாவட்ட தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எடுத்தது. இப்போது தாயகம், இனிய கவிவண்டு, தலைவன் போன்ற தொகுப்புகளிலிருந்து சிறந்த கவிதைகளைத் தொகுத்து ஒரு கவிஞனின் காலடிச் சுவடுகளாக வெளிவருகிறது. இந்நூல் மிகச் சிறப்பாகக் கவிஞர் புவியரசின் எண்ண அலைகளிலிருந்து வண்ண

ஓவியமாக வார்க்கப் பட்டிருக்கிறது.

காலத்தின் அடையாளம் கவிஞர் வெள்ளியங்காட்டான். அவரின் பன்முகப் படைப்புகள் என்னும் ஒளிக்கீற்றுகளின் ஒளி வட்டமாய் வெள்ளியங்காட்டான் கவிதைகள்... இந்நூல் தமிழ் மக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டும்; கவி அமுது பருக வேண்டும்.

பின்னிணைப்பு–2

# எங்கள் குரு

**புலவர் ம. இளங்கீரன்**
செயலர் உலகத் திருக்குறள் பேரவை
துணைத்தலைவர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்
கோவை.

**கவிஞர் அழகுதாசன்**

*1960*– அக்காலம் அவர் 'நவஇந்தியா' புரூப் ரீடராகவும் இலக்கிய பகுதியினையும் நிர்வகித்தும் வந்தார். நாங்கள் குழந்தைக் கவிதைகள் எழுதும் இளம் கவிகள் – நவஇந்தியா நிர்வாகியுடன் ஏற்பட்ட கருத்து மாறுபாட்டால் விலகி இருந்தார். குழந்தைக் கவிதைகள் எழுதும் சிறுவர்களாகிய எங்களின் கவிதைகளில் சில திருத்தங்கள் செய்து வெளியிடுவார். ஒரு சமயம் திருத்தி வெளியிட்ட இலக்கிய ஓவியம், கட்டுரை மற்றும் கவிதைபற்றி ஒரு கடிதம், கவிஞர் 'வெள்ளியங்காட்டான்' அவர்களுக்கு எழுதினேன்.

அதனை படித்த அவர், எங்களைப் பார்க்க ஆவலுறுவதாக முகவரியுடன் ஓர் அஞ்சலட்டை எழுதினார். அதனைப் பெற்றுக் கொண்ட நாங்கள் பாப்பநாயக்கன்பாளையம் பழையூரில் இருந்த அவருடைய இல்லம் சென்றோம். நானும் என் நண்பர் அழகுதாசனும்.

வெண் தாடியுடன் கூடிய ஓர் உருவம் பாயில் அமர்ந்து கொண்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தது. அவ்வுருவத்தைப் பார்த்து, "கவிஞர் வெள்ளியங்காட்டான் வீடு இதுவா? அவர் எங்கு இருக்கிறார்" என்று கேட்டோம். " ஓ! இளங்கீரன்-சண்முகமா வாருங்கள்!" என்று எழுந்து வந்து வரவேற்று எங்களுக்கு ஒரு பாயைப் போடச் சொன்னார். அவரது மகன் மனோகரன் பாயைப்

போட நாங்கள் இருவரும் குருவின் முன், சீடர்களாய் அமர்ந்தோம். அப்பொழுதும் அவர்தாம் 'வெள்ளியங்காட்டான்' என்று உறுதியாக நம்பாமல் 'கவிஞர் வெள்ளியங்காட்டான்' என்றதும் 'நான் தான் அந்தக் காட்டான்' என்றார்! வியப்புடன் 'ஐயா! எங்களைப் பொறுத்துக் கொள்ளுங்கள். இவ்வளவு பெரியவராக இருப்பீர்கள் என்று தெரியாமல் ஏதேதோ கடிதத்தில் எழுதி விட்டேன்.' என்றேன்.

அவருக்கும் அதே போல வியப்பும் மகிழ்ச்சியும். நாங்கள் இளைஞர்களாக இருந்ததால் எங்களைப்பற்றி அவர் உசாவினார். அவர் தம் குடும்பத்தைப்பற்றியும் எங்களுக்குக் கூறினார். அன்று முதல் எங்கள் எழுத்து உலகின் ஈடிலா ஆசானாக அவரை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.

புறநானூற்று வீரம், கலீல் ஜிப்ரான் கருத்துகள், கம்பனின் கவிநயம், பாரதியார் பாடல்களின் புதுமை, கலித்தொகைக் காட்சி நயங்களையும், வளங்களையும், எங்கள் முன் படம் பிடித்துக் காட்டியது போல் பாடம் நடத்தினார். "மா வாராதே! மா வாராதே" -என்ற புறநானூறு. "இந்நிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத் தன் நிழலை கொடுத்து அளிக்கும் மான்" - கலித்தொகை. இயற்கையோடு இயைந்த தாய்மை நெஞ்சம் - ஜிப்ரான். 'ஆழிசூழ் உலகெலாம் பரதனே ஆள..... குகனோடு ஐவரானோம், - கம்பர். 'விம்மி விம்மி அழுங்குரல் கேட்டிருப்பாய் காற்றே' - பாரதியார். என்று ஆசிரியர் பாடம் நடத்தினார். மாணவர்கள் நாங்கள் கேட்டோம்.

மதியம் உணவு பரிமாறப்பட்டது. வாருங்கள் உண்ணலாம் என்றார் அவர் புதல்வி. உண்டபின் மீண்டும் இலக்கியம் கவிதைப்பற்றிய அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தோம். இந்திய உலக அரசியல் வரலாற்றுப் பாடமும் - பண முதலைகளின் படாடோபும், முகமன் பேசி மயக்கும் வஞ்சகர்கள், மூடத்தனம், மதத்தின் பெயரால் நடைபெறும் மடமைகள், கையூட்டு பரிந்துரைகளால் காலம் தள்ளும் பட்டதாரிகள், இலக்கிய போலிகளின் முகத்திரைகளைக் கிழித்து வீசினார். பகுதறிவுச் சிந்தனைகள், உண்மையான ஆன்மீகக் கோட்பாடுகள் பற்றி எல்லாம் அவர் கூறிய கருத்துக்கள் எங்கள் உள்ளங்களில் ஆழப் பதிந்தன.

அவர்தம் கவிதைகளை என்னைப் பார்வையிடச் சொன்னார். அவற்றில் இருந்த ஓரிரு எழுத்துப் பிழைகளைச் சுட்டிக் காட்டியதற்கு என்னை வெகுவாகப் பாராட்டினார். அன்று பிரியா விடை பெற்றோம். அதற்குப் பின் பலமுறை அவருடைய சந்திப்பு எங்கள் அறிவை விளக்கம் செய்தன; தமிழ்ப்பற்றிற்கு மெருகேற்றின. ஒரு சமயம் கவியரங்கம் ஒன்று ஏற்பாடு செய்து அதில் தலைமை ஏற்க வற்புறுத்தி அச்சேற்றிய அறிக்கையை அனுப்பி வைத்தோம். அவரும் வந்தார். ஆனால் மேடைக்கு வரவில்லை! எங்கள் இல்லத்திலேயே தங்கி விட்டார். என் தந்தையாருடன் நீண்ட நேரம் பஞ்சாலை பற்றியும், தியாகி என்.ஜி.ஆர் பற்றியும் அரசியல் நிலவரம் குறித்தும் பேசிக் கொண்டிருந்தார். எவ்வளவு கெஞ்சியும் மேடைக்கு வர மறுத்து விட்டார்!

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் மாச்சம்பாளையம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது, 'கவிஞன்' நூல் ஒன்றை அடிகளாருக்குப் பரிசாக வழங்கினார். அடிகளாரும் தம் பேச்சினூடே கவிஞன் நூலில் சில கருத்துக்களை மேடையில் எடுத்துரைத்துப் பாராட்டினார். தாம் முழுமையாகப் படித்துப் பார்த்து எழுதுவதாகக் குறிப்பிட்டார். சில சமயங்களில் எங்கள் இல்லங்களில் சில நாட்கள் தங்கியிருந்து பாடம் நடத்திய பசுமையான நினைவுகள் எங்கள் உற்றார் உறவினர் உட்பட எங்கள் ஊரில் உள்ளோர் பலருக்கும் நீங்கா நினைவுகளாகும். அவர் எங்களைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தால் உடனே புறப்பட்டு மாச்சம்பாளையம் வந்து விடுவார். பத்து நாட்கள் தங்கியிருந்து எம் வீட்டு நூலகத்தையும், அன்னை நூலகத்தையும் பயன் படுத்திக் கொள்வார்.

எங்குச் சென்றாலும் மாலை ஆறு மணியிலிருந்து 9.00 மணி வரை அவருடன் பேச நேரம் ஒதுக்கி விட வேண்டும். அவ்வாறெல்லாம் பாடல் கேட்கப் பெறும் பேறு பெற்றோம். நண்பர் அழகுதாசனின் 'கொக்கரக்கோ' குழந்தைக் கவிதை நூலைச் செப்பம் செய்து தந்தவரும் அவரே. ஒரு சமயம் கவிஞர், அவர்களின் மூத்த மகள் வசந்தாமணி உள்ள புளியம்பட்டியில் தங்கியுள்ளார் என்று அறிந்து அவரைக் காண, நானும், நண்பர் அழகுதாசனும் ஆவலுடன் புறப்பட்டுச் செல்லும் போது வழியில்

பணத்தைப் பறிக்கொடுத்து விட்டு நடந்தே சென்றுச் புளியம்பட்டியை அடைந்தோம். காலையில் புறப்பட்ட நாங்கள் இரவு ஏழு மணிக்குச் சென்றடைந்தோம். கடுமையான கோடை வெயிற்காலம். அவர்தம் மாப்பிளையும், மகளும் எங்களை அன்புடன் மகிழ்ச்சியாக வரவேற்று விருந்தோம்பி மகிழ்வித்தார்கள். அங்கு 'பழனி' என்பவர் கவிஞரின் பாடல்களை மெட்டமைத்து பாடிக் காட்டியது எங்களுக்கு வழிநடைக் களைப்பை மாற்றி விட்டது எனலாம்.

மறுநாள் காலையில் எங்களிடம் காசு இல்லை என்பதை எப்படிக் கூற இயலும்?. அவர்களோ எங்களை உயர்ந்த நிலையில் மதித்து விருந்தோம்பி மகிழ்கிறார்கள். எங்கள் நிலையை வெளிப்படுத்த நாணம். அவர்கள் தொடர்ந்து பேருந்து நிற்பிடம் வரை வந்து பேருந்திலும் ஏற்றி விட்டனர். கொஞ்ச தூரம் சென்றதும் "பணத்தை மறந்து விட்டு வந்து விட்டோம்; இறக்கி விடுங்கள்" என்று நடத்துநரிடம் சொல்லி இறங்கி நடந்தோம்! நடந்தோம்! கரடிவாவி, பாப்பம்பட்டி, கள்ளப்பாளையம், பட்டணம், வெள்ளலூர், போத்தனூர் வழியாக சுந்தராபுரம் மாச்சம்பாளையம் வந்து சேர்ந்தோம்! கால்களில் செருப்பு இல்லை. இரண்டு கால்களும் கொப்பளித்து விட்டன. நடக்க முடியாமல் தள்ளாடி வீடு வந்தோம். நண்பர் அழகுதாசனின் இரண்டு தொடைகளும் உராய்ந்து உராய்ந்து கொப்புளமாய்ச் செம்பொன் பட்ட காட்சி இன்றும் என் கண் முன் நிற்கிறது. அந்த ஒருநாள் நிகழ்ச்சியை என்றும் மறக்க முடியாது.



கவிஞர் வெள்ளியங்காட்டான்

...அவரிடம் 'லிரிக்' கவிதைகளுக்கு வேண்டிய
கனல் மூண்டிருப்பதை அறிந்தேன்...

கவிஞர் திரிலோக சீதாராம்

"இயற்கையின் அழகை அனுபவித்து எடுத்துக் காட்டுவது
போலவே, மனித வாழ்க்கையின் நன்மை தீமைகள்
பற்றியும், இலட்சியவாதியாக நின்று பேசுகிறார்..."

கவிஞர் அ.சீநிவாசராகவன்

"வெள்ளியங்காட்டான் கவிதைகள் நாட்டிற்கு
நன்மை செய்யக் கூடிய கருத்துக்களுடையவை..."

கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு

"நூலாசிரியர் உலகியல் தன்மைகளை மிகவும்
நுணுக்கமாக நோக்கி விளக்கியுள்ள திறமும்
போற்றத் தக்கதாக உள்ளது."

கவிஞர் எழில் முதல்வன்

"இவரிடம் புல்லும் கதை சொல்லும், நெல்லும் பேசும்,
ஆலமரமும், அங்கு வரும் காற்றும், சித்திரை வெயிலும்
ஐப்பசி மழையும் கூட நமக்கு அறிவுரை கூறும்."

கவிஞர் சக்திக்கனல்

வெள்ளியங்காட்டான் கவிதைகள்